தமிழரசு

மலர்: 5 * இதழ்: 15

1-2-1975



தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம்

வடாற்காடு மாவட்டம்—தென்னாற்காடு மாவட்டம் ஆகிய இரண்டும் இணைந்த போக்குவரத்துக் கழகத்திற்கு தந்தை பெரியார் அவர்களுடைய பெயர் சூட்டப்பட்டு—அதைத் தொடங்கி வைக்கின்ற நல்வாய்ப்புக் கிடைத்ததற்காகப் பெருமகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

போக்குவரத்துத் துறை அமைச்சர் நண்பர் இராமசந்திரன் அவர்கள் வெகு அழகாகச் சொன்னார்கள். இந்தப் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடம் விழுப்புரமாக இருக்கிறது என்பதை. வடாற்காடு மாவட்டமும்—தென்னாற்காடு மாவட்டமும் இணைகிற நேரத்தில் இயல்பாக வேலூரிலே அல்லவா இதனுடைய தலைமையிடம் இருக்க வேண்டும் என்று கேட்டவர்களும், கடலூரிலே இருக்கலாமே என்று யோசனை கூறியவர்களும் உண்டு.

ஆனால் - இரண்டையும் இணைக்கக்கூடிய மையப்பகுதியாக உள்ள இடம் விழுப்புரம் என்கிற காரணம் கூறப்பட்டு அந்த அடிப்படையிலே விழுப்புரத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் தலைமையிடம் அமைந்தது.

'இது விழுப்புரம் மக்களுக்கு அளிக்கின்ற பரிசு - தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சண்முகம் அவர்களுக்குத் தரப்படுகின்ற பரிசு என்று நண்பர் இராமச்சந்திரன் சொன்னார். அது உண்மைதான் எனினும், தந்தை பெரியார் அவர்களுக்கு மிகத் தொடர்புடைய நகரங்களில் இந்த விழுப்புரம் நகரமும் ஒன்று என்பதை நாமெல்லாம் நன்றாக அறிவோம்.

பெரியாருடைய பெயரால் ஒரு போக்குவரத்துக் கழகத்தைத் தொடங்குகிற நேரத்தில் 30 ஆண்டுகளுக்கு முன்னால் என்னுடைய நினைவுகள் செல்லுகின்றன.

இதே விழுப்புரத்தில் 1944-45-ம் ஆண்டுகளில் நாகை திராவிடர் நடிகர் கழகம் என்கிற பெயரால் ஒரு நடிகர் கழகத்தின் சார்பில் கழகக் கொள்கைகளை சுயமரியாதைக் கருத்துக்களை-பெரியாருடைய எண்ணங்களைக் கலையின் வாயிலாகப் பிரச்சாரம் செய்ய இந்தப் பெயரால் ஒரு அமைப்பை உருவாக்கி, பகுத்தறிவு நாடகங்களை நாங்கள் நடத்திக் கொண்டிருந்தோம்.

அந்த நேரத்தில் விழுப்புரத்திலுள்ள மக்கள் எங்கள் நாடகத்தைப் பற்றி என்ன பேசுவார்களென்றால் - திராவிடர் நடிகர் கழகம் என்று எங்கள் குழுவுக்குப் பெயர் இருந்த காரணத்தால் முப்பதாண்டுகளுக்கு முன்பு திராவிடன் என்கின்ற சொல்லுக்கு - அந்தச் சொல்லுக்குப் பின்னால் இயங்கிக் கொண்டிருக்கின்ற வரலாற்றுக்கு விளக்கம் தெரியாதவர்கள்-அந்தச் சொல்லுக்குப் பின்னால் இருக்கின்ற இந்நாட்டு இலக்கியங்களை அறியாதவர்கள்-அந்தச் சொல்லுக்குப் பின்னே இருக்கின்ற பண்பாடுகளைப் பற்றி உணராதவர்கள் திராவிடர் நடிகர் கழகம் என்கின்ற குழுவைப் பார்த்து மிகவும் இழிவாகக் குறிப்பிட்டுப் பேசுவதை, கடைத் தெருவில் நின்று எங்கள் காதுகளில் விழுமளவுக்குக் கேட்டிருக்கிறோம்.

அதையும் எண்ணிக்கொண்டு, இன்றைக்குக் காலையிலிருந்து, தென்னாற்காடு மாவட்டத்தில் எந்த இழி சொல்லால் எங்களையெல்லாம் தாக்கினார்களோ அந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அழகான வீடுகளைக் கட்டித்தந்து அவைகளையெல்லாம் திறந்து வைத்து விட்டு-பெரியாருடைய கொள்கைகளை வாயளவிலே சொல்லிக் கொண்டிராமல் அவைகளைச் செயல்படுத்தி வருகிற அந்த மகிழ்ச்சியோடு பெரியாரின் பெயரால் ஒரு போக்குவரத்துக் கழகத்தைத் தொடங்கி வைக்கிறேன் என்று எண்ணுகிற நேரத்தில் என்னுடைய மகிழ்ச்சி இரட்டிப்பாகிறது.

எந்தச் சமுதாயத்திற்காகப் பெரியார் அவர்கள் பாடுபட்டார்களோ-எந்தச் சமுதாயம் விழிப்படைய வேண்டும் என்று பாடுபட்டார்களோ அந்தச் சமுதாய மக்களுக்கு நல்ல காரியங்களைச் செய்துவிட்டு - அந்தச் சமுதாயம் விழிப்புறுகிறது மெல்ல மெல்ல—ஆனால் உறுதியாக என்கிற தகவலை பெரியார் இல்லாவிட்டாலும்

நம்முடைய மனத்திலே அவரை வைத்துக் கொண்டு சொல்லுகிற வகையில் விழிப்புற்ற சமுதாயம் இது என்பதை எடுத்துக் காட்ட விழுப்புரத்திலேயே தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தை நாம் துவக்குகின்றோம்.

இன்னொரு சிறப்பு என்னவென்றால் இரண்டு மாவட்டங்கள் இணைகின்றன.

வடக்கு ஆற்காடும்-தெற்கு ஆற்காடும், இந்த வடக்கு தெற்கில் பெரியாருக்கு தெற்கு எந்த அளவுக்குப் பிடிக்கும்— வடக்கு எந்த அளவுக்குப் பிடிக்கும் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஆகவே இந்த இரண்டுக்குமுள்ள வேறுபாட்டைப் பெரியார் அவர்கள் தமது வாழ்நாளில் உயிருள்ள வரைக்கும் உலகத்துக்குச் சொல்லிக் கொண்டிருந்தவர்கள் - ஆகவே தான் இந்த இரண்டுக்குமுள்ள வேறுபாடு - இன்றைக்கு இந்தியா ஒரே நாடாக இருந்தாலும் கலை-கலாச்சாரம் — பண்பாடு - தேசிய இனங்கள் ஆகியவற்றில் வேறுபட்டவைகள்தான் என்பதைப் பெரியார் உணர்த்திக் கொண்டே இருக்கிறார் என்பதற்கேற்ப வ. ஆ. மாவட்டம்-தெ. ஆ. மாவட்டம் இரண்டும் இணைந்த தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தை நாம் உருவாக்கியிருக்கின்றோம்.

இதிலிருந்து, இணைப்பை நாம் வெறுப்பவர்களல்ல ; இணைப்பை விரும்புகிறவர்கள். [illegible] இரண்டுக்கு அதே நேரத்தில் [illegible] முள்ள வேறுபாட்டை உணர்ந்து நடப்பவர்கள். மாவட்ட அளவிலே உள்ள வேறுபாட்டை அல்ல; வடக்கு தெற்கு ஆகிய இரண்டு திசைகளிலுள்ள வேறுபாட்டை உணர்ந்து நடப்பவர்கள் என்பதற்கேற்ப இந்தப் போக்குவரத்துக் கழகத்தை அமைத்திருக்கின்றோம்.

போக்குவரத்துத் துறையில் புரட்சிகரமான பல மாற்றங்களைத் தமிழக அரசின் சார்பில் நாம் செய்திருக்கின்றோம்.

தமிழகத்தில் இன்றைக்கு இந்தப் போக்குவரத்துக்கழகத்தோடு சேர்ந்து ஏழு போக்குவரத்துக் கழகங்கள் இயங்குகின்றன. இந்த ஏழில் ஒன்றைத் தவிர மற்ற எல்லாப் போக்குவரத்துக் கழகங்களும் இலாபகரமாக நடைபெறுகின்றன-என்ற தகவலையும் அமைச்சர் இராமசந்திரன் குறிப்பிட்டுக் காட்டினார்.

சற்று இழப்பிலே போய்க் கொண்டிருக்கிற பல்லவன் போக்குவரத்துக் கழகமும் இலாபகரமாக நடப்பதற்கான வழி வகைகள் ஆராயப்படுகின்றன என்கிற தகவலையும் எடுத்துச் சொல்லி இருக்கின்றார்கள்.

கடந்த 67-ஆம் ஆண்டுக்கு முன்பு தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலும் சென்னை நகரத்திலும் உள்ள பேருந்துகள்தான் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் தேசியமயமாக்கப்பட்டன.

அது தவிர 100 மைலுக்கு மேலே உள்ள வழித் தடங்கள்

முதல்வர் கலைஞர் உரை

தேசியமயமாக ஆக்கப்பட்டன. எல்லாம் சேர்ந்து 1000 பேருந்துகள்தான் அந்தத் தேசியமயத் திட்டத்திலே கொண்டு வரப்பட்டன.

ஆனால் 67-க்குப் பிறகு இன்றைய வரையில் நாலாயிரம் பேருந்துகளைத் தேசியமயமாக்கிய பெருமை நமக்குண்டு. !

இருபதாண்டுக் காலத்தில் ஆயிரம் பேருந்துகளைத் தான் தேசிய மயமாக்கினார்கள். இப்போது நாலாயிரம் பேருந்துகள் தேசியமயமாக்கப்பட்டுள்ளன.

இது மாத்திரமல்ல; மிகப் பெரிய நிறுவனங்களாக இருந்த ஏகபோக ஆதிக்கவாதிகளாக இருந்த -இரு நூறு, முந்நூறு பஸ்களுக்குச் சொந்தக்காரர்களாக இருந்த—பேருந்து வேந்தர்களாக இருந்த டி.வி.எஸ். நிறுவனம்-346 பேருந்துகளைக் கொண்ட நிறுவனத்தை தேசியமயமாக்கி இன்றைக்குப் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் என்று மாற்றியமைத்து-அந்தக் கழகத்திற்குள்ளே 346 பேருந்துகளையும் கொண்டு வந்து 346 பேருந்துகளாக இருந்ததை கடந்த இரண்டாண்டுக் காலத்தில் 508 பேருந்துகளாக உயர்த்தியிருக்கின்றோம்.

ஏ.பி.டி. - பொள்ளாச்சி மகாலிங்கத்தின் பேருந்து நிறுவனம் — அவர்களின் 110 பேருந்துகளையும் தேசியமயமாக்கி, இரண்டாண்டுக் காலத்தில் 460 பேருந்துகளாக அவற்றை உயர்த்தி இருக்கிறோம்.

சக்தி விலாஸ்—

எஸ். ஆர். வி. எஸ்.—

ராமன் அண்ட் ராமன்—

மேலேதான் ராமன் அண்ட் ராமன் என்று இருக்கும். வண்டிகளின் உள்ளே பார்த்தால் கோதண்ட ராமன்— சீதாராமன்-ஜெயராமன் என்று ஒவ்வொரு பேருந்திலும் வேறு வேறு பெயர்கள் இருக்கும். இப்படி எல்லா இராமனையும் இந்த இராமச்சந்திரன் வந்த பிறகு தேசியமயமாக்கி இருக்கிறோம் என்றாலும் நம்முடைய கழக ஆட்சியில் பொள்ளாச்சி மகாலிங்கமானாலும், டி.வி.எஸ். ஆனாலும்-காசி ராமனானாலும்-எஸ். ஆர். வி. எஸ். —சக்தி விலாஸ் போன்ற தனிப்பட்ட நிறுவனங்களெல்லாம் இரத்தப் புரட்சி என்பார்களே அவைகளெல்லாம் இல்லாமல் தேசியமயமாக்கப்பட்ட அமைதியான புரட்சியை தி.மு. கழக ஆட்சி நடத்திக் காட்டியிருக்கிறது.

இதையேகூட பெரிய புரட்சியாக ஆக்கியிருக்கலாம். அவர்களிடத்தில் கேட்டு அவர்களும் தருவதாகச் சொன்ன பிறகு— அதை நாம் மட்டும் மனத்திலே வைத்துக்கொண்டு தருகிறாயா? இல்லையா? என்று நான்கு நாளைக்குப் போராட்டத்தை நடத்தி அதன் காரணமாக ரெத்தப்புரட்சியை உருவாக்கி [illegible] புரட்சிக்குப் பிறகு இவைகளையெல்லாம் பெற்றுவிட்டோம் என்றுகூடப் பெரிய புரட்சியை உருவகப் படுத்திக் காட்டியிருக்கலாம்.

ஆனால் அவர்களெல்லாம்-நாம் ஆரம்பத்திலேயே தருவதாகச் சொல்லிவிடுவோம். தர முடியாது என்று சொல்லி ஏன் இவர்களிடம் சிக்கிக்கொள்ள வேண்டும் என்று புரிந்த காரணத்தால் தங்களிடம் இருந்த 200, 300-க்கு மேற்பட்ட பேருந்துகளையெல்லாம் அரசிடத்திலே ஒப்படைத்தார்கள்.

டி.வி.எஸ். நிறுவனப் பேருந்துகளை ஒப்படைத்த விழாவில் அந்த நிறுவனத்தின்

அதிபர் சொன்னார்-''பெண்ணை வளர்த்துக் கொடுப்பதுபோல் நாங்கள் இந்த நிறுவனத்தை உங்களிடத்திலே கொடுக்கிறோம்'' என்றார்.

நான் பதில் சொல்லும்போது சொன்னேன் - ''பெண் வளர்ந்தால் ஒரு குறிப்பிட்ட வயது வரையில்தான் பெற்றவர்கள் வீட்டில் இருக்கலாம். பிறகு வர வேண்டிய இடத்திற்கு வர வேண்டியதுதான். அதுதான் இப்போது நடைபெறுகிறது. இந்தப் பெண்ணுக்கு எந்தச் சங்கடமும் வராமல் காப்பாற்றுவோம்'' என்று சொன்னேன்.

இப்படி அமைதியான முறையில் தேசிய மயமாக்கும் புரட்சியை நாம் நடத்திக் காட்டியிருக்கின்றோம்.

'தனியார் நடத்துவதைப் போல் திறமையாக இதை நடத்த முடியுமா?' என்று கேட்டவர்களுக்கு விடையளிக்கிறவகையில் இரண்டாண்டுக் காலத்தில் பல்லவன் போக்குவரத்துக் கழகம் 1298 பேருந்துகளைக் கொண்டதாக இருந்தது-இன்றைக்கு 1626 பேருந்துகளைக் கொண்ட நிறுவனமாக மாறி இருக்கிறது.

346 பேருந்துகளைக் கொண்ட மதுரை - இராமநாதபுரத்தில் ஓடிக்கொண்டிருந்த பாண்டியன் போக்குவரத்துக் கழகம் 508 பேருந்துகளைக் கொண்டதாக இருக்கிறது.

கோவை-நீலகிரி மாவட்டங்களில் 72-ம் ஆண்டு நாம் எடுத்துக் கொண்ட போக்குவரத்துக் கழகம் சேரன் போக்குவரத்துக் கழகமாக மாற்றப்பட்டு 110 பேருந்துகளைக் கொண்டிருந்த நிறுவனம் இன்று 460 பேருந்துகளைக் கொண்டதாகமாறியிருக்கிறது.

அதைப் போலவே சோழன் போக்குவரத்துக் கழகம் 72-லே எடுத்துக் கொள்ளப்பட்டு திருச்சி-தஞ்சை மாவட்டங்களில் 178 பேருந்துகளைக் கொண்ட நிறுவனம் இன்று 497 பேருந்துகளைக் கொண்டதாக உயர்ந்திருக்கிறது.

73-ல் எடுக்கப்பட்ட சேலம்-தர்மபுரி மாவட்டத்தில் அண்ணா போக்குவரத்துக் கழகம் 45 பஸ்களைக் கொண்டிருந்தது. இன்றைக்கு 197 பேருந்துகளைக் கொண்டதாக இருக்கிறது.

குமரி-நெல்லை மாவட்டத்தில் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் 457 பேருந்துகளைக் கொண்டதாக இருந்து 514 பேருந்துகளைக் கொண்டதாக உயர்ந்திருக்கிறது.

2434 பேருந்துகளைக்கொண்டிருந்த ஆறு கழகங்களும் இன்றைக்கு 3700 பேருந்துகளைக் கொண்டதாக உயர்ந்திருக்கிறது.

இந்தப் பேருந்துகளிலே வேலை பார்க்கின்ற தொழிலாளர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு தங்கள் பணியைப் புரிகிறார்கள். இல்லாவிட்டால் விழுப்புரத்தில் நடைபெறுகிற விழாவுக்கு அண்ணா போக்குவரத்துக் கழகத்திலிருந்தும்-பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலிருந்தும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்திலிருந்தும் எங்களுக்கு மாலைகள் அணிவிக்கப்படுகின்றன என்றால் அவர்கள் எல்லாம் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் தேவையில்லை.

தொழிலாளர்களிடத்தில் சில சமதர்மத் திட்டங்களை அரசுப் போக்குவரத்துத் துறையிலும் - போக்குவரத்துக் கழகங்களிலும் இந்த அரசின் சார்பில் அமைச்சர் இராமச்சந்திரனால் அறிமுகப்படுத்தப் பெற்று, அது சீரிய முறையில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

நான் பலமுறை சொல்லி இருக்கிறேன். பாகிஸ்தானோடு போரிட்டு புதிய ராஜ்யத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்ற பங்களாதேஷ் அதிபதி முஜிபுர் ரகுமான் தேர்தலின் முன்பு தேர்தல் பிரகடனத்தில் ஒரு கருத்தை வெளியிட்டார்—

''என்னுடைய கட்சி வெற்றி பெறுமேயானால் அரசுத் துறைத் தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பொறுப்பும் முதலீட்டில் பங்கும் அளிப்பேன். அப்படிப்பட்ட சமதர்மத் திட்டத்தைக் கொண்டு வருவேன்'' என்று அறிவித்தார்.

தேர்தலில் ஜெயித்தார். பாகிஸ்தானோடு தொடர்பே அறுந்துபோகும் அளவுக்கு தனி ராஜ்யத்தை உருவாக்கி அதன் அதிபராகவும் - இன்று பிரதமராகவும் பொறுப்பேற்றிருக்கிறார்.

தேர்தல் பிரகடனத்தில் சொன்ன உறுதி மொழிகளை நிறைவேற்றினாரா இல்லையா எங்களுக்குத் தெரியாது. ஆனால் அந்தப் பிரகடனத்தைப் படித்துப் பார்த்த நாங்கள், அகில இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் நிறைவேற்றாத, தொழிலாளர்க்கு நிர்வாகத்தில் பொறுப்பு, முதலீட்டில் பங்கு என்ற அந்தத் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறோம்.

அதிலே ஒரு சிறிய சட்டத் திருத்தம் - தேவையென்று மத்தியிலே இருக்கின்ற சோஷலிச சர்க்காருக்கு நாங்கள் எழுதி ஒன்றரை ஆண்டுகளாகிறது.

''இலாபத்தைப் பங்கிடுகிற நோக்கில் தொழிலாளர்களுக்குத் தந்தது போக மிச்சமுள்ள பணத்திற்குத்தான் வருமான வரி போட வேண்டும்'' என்பது -

அவர்கள் - ''இல்லை இல்லை வருமானவரி கொடுத்த பிறகு தொழிலாளர்க்கு மிச்சத்திலே பங்கு போடு'' என்கிறார்கள். வருமானவரி கொடுத்த பிறகு என்ன மிச்சமிருக்கும் ?

ஆகவே இந்தச் சட்டத்திலே திருத்தம் தேவையென்று தமிழ்நாட்டிலே இருக்கிற இந்த 'பூர்ஷுவா' சர்க்கார் மத்தியிலே இருக்கிற 'சோசலிச' சர்க்காருக்கு எழுதி ஒன்றரை ஆண்டுக் காலமாகிறது-சோசலிச மாதா டில்லியில் வீற்றிருக்கிறார். ஆனால் இது

1974-75 ஆம் ஆண்டின் முதல் 6 மாத காலத்தில், இந்தியா 50 கோடிரூபாய் மதிப்புக்கு ஆடைகள் ஏற்றுமதி செய்துள்ளது. 1973-74 ஆம் ஆண்டின் இதே காலத்தில் 17 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்புக்குத்தான் ஆடைகள் ஏற்றுமதியாயின.

வரை சோசலிசக் கடைக்கண் வீசப்படவில்லை.

ஒரு சமதர்மத் திட்டத்திற்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை. என்ன பதில் கிடைத்தது தெரியுமா? நாங்கள் எழுதியவுடன் - 'பாராட்டத் தகுந்த அருமையான திட்டம்' என்று எங்களுக்கு ஒரு நற்சான்று வழங்கினுர்கள். 'மற்ற விஷயங்களை உடனடியாகக் கவனிக்கிருேம்' என்ருர்கள்.

'உடனடி' என்பது தமிழ் நாட்டில் அடுத்த நிமிடம். 'உடனடி' என்பது டில்லியிலே ஒன்றரை வருடம் போலும்!

நாம் பேருந்துகளைத்தேசியமயமாக்கி இருப்பது சோசலிச அடிப்படையில். அந்த சோசலிச அடிப்படையில் பேருந்துகளைத் தேசியமயமாக்கிவிட்டால் மாத்திரம் சோசலிசமாகிவிட முடியாது. அந்தப் பேருந்துகள் ஒழுங்காக ஓட- அதிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களின் வாழ்வும் ஒளிமயமாகத் திகழத் திட்டங்கள் போட்டால்தான் நாம் இவற்றைத் தேசியமயமாக்கியதற்கு அர்த்தமிருக்க முடியும்.

அந்த வகையிலேதான் தொழிலாளர்களுக்காகத் தொடங்கி இருக்கின்ற நல்ல காரியத்திற்கு இதுவரையில் பதில் அனுப்பாத டில்லி அரசு இனிமேலாவது பதிலனுப்பும் என்று எதிர்பார்க்கின்றேன்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தைத் தொடங்கி வைக்கின்ற இந்த நேரத்தில் மீண்டும் இந்த வேண்டுகோளை விடுக்கிறேன்.

இந்தப் போக்குவரத்துக் கழகத்தை, பெரியார் பெயரில் தொடங்குவதில் நமக்கிருக்கிற உரிமையும்-அவருக்குக் காட்ட வேண்டிய நன்றி உணர்வும் ஆகிய அனைத்தும் இதிலே அடங்கி இருக்கின்றன.

தமிழ்நாட்டுக்கு வழிகாட்டியவர் - குறித்த நேரத்தில் எல்லா இடத்திற்கும் செல்லக் கூடியவர். ஆகவே குறித்த நேரத்தில் பேருந்துகள் செல்ல வேண்டும் என்று இராமச்சந்திரன் சொன்னுர்.

இன்னும் சொல்ல வேண்டுமானுல் பெரியார் தம்முடைய பொது வாழ்க்கையில் போக்குவரத்திலேயே வாழ்நாளைக் கழித்தவர். ஆகவேதான் அவர் மறைந்த நேரத்திலே கூட பெரியார் மறைந்தார் என்று நான் குறிப்பிடாமல் 'பெரியார் தன்னுடைய சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டார்' என்று குறிப்பிட்டேன்.

அந்த அளவுக்கு மக்களைச் சந்திக்க, ஓய்வின்றிச் சென்று கொண்டிருந்தவர் தந்தை பெரியார் அவர்கள். அப்படிப்பட்டவரின் பெயரால் அமைந்துள்ள இந்தப் போக்குவரத்து கழகம், சாலச்சிறப்புடையதாக பெருமைக்குரியதாக - நல்ல லாபகரமானதாக இயங்க வேண்டும். மற்ற போக்குவரத்துகளில் நட்டமேற்பட்டாலும் பெரியார் போக்குவரத்தில் நட்டம் ஏற்படக்கூடாது. ஏனென்ருல் பெரியார் என்கிற பெயருக்கே அது பொருத்தமில்லாமல் போய்விடக்கூடும். ஆகவே நிறைந்த இலாபத்தைத் தருவதோடு மக்களுக்கு மிகுந்த வசதியைச் செய்து தரும் வகையில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(18.1.1975 அன்று விழுப்புரத்தில் நடைபெற்ற தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத் துவக்க விழாவில் முதல்வர் ஆற்றிய உரை.)



தமிழ்நாட்டில் வறட்சி

பருவமழை பொய்த்ததால் தமிழ்நாட்டில் வறட்சிக்கு உட்பட்டுள்ள பகுதிகளில் துயர்துடைப்புப் பணிகள் மிக விரைவாகச் செயல்படுத்தப்படுகின்றன.

இயற்கையின் கடுஞ் சோதனைகளைச் சாதனைகளாக மாற்றியமைத்திடும் வகையில், வறட்சிப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புக்கும் அப்பகுதியில் முன்னேற்றத் திட்டங்களுக்குமான பணிகள் வகுக்கப்பட்டுள்ளன.



மதுரை மாவட்டம் :

மதுரை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் வசதியை ஏற்படுத்தவும், சிறிய நீர்ப்பாசனம், பெரிய நீர்ப்பாசனம், புதிய சாலைகள் அமைத்தல் போன்ற வேலைகளுக்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் நிதி ஒதுக்கப்பட்டு வறட்சிப் பணிகளையும் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. குடிநீர் வசதியற்ற இடங்களில் கிணற்றை ஆழப்படுத்தவும் புதிய கிணறுகள் தோண்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு 3,836 கிணறுகளை ஆழப்படுத்துகிற முதல் பணியாக 1,024 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டு வருகிறது. 235 புதிய கிணறுகள் தோண்டுவதற்கான திட்டம் வகுக்கப்பட்டு முதற் பணியாக 86 கிணறுகள் தோண்டப்பட்டு வருகின்றன.

சிறிய நீர்ப்பாசனக் கண்மாய்களை செப்பனிடவும், பழுது பார்க்கவும் திட்டங்கள் தீட்டப்பட்டு 580 சிறுபாசனக் குளங்களை ஆழப்படுத்தவும், செப்பனிடவும் முதற் பணியாக 342 குளங்களில் வேலை தொடங்கப்பட்டு தீவிரமாக நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கிராமங்களில் புதிய சாலைகள் அமைப்பதற்காக ரூ. 8 இலட்சத்தில் திட்டம் தீட்டப்பட்டு வேலைகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

புதுக்கோட்டை மாவட்டம் :

புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்திற்கு அருகிலுள்ள மேலூர் ஊராட்சியைச் சேர்ந்த இளங்குடிபட்டி ஊரணியில் (வறட்சி நிவாரணப் பணியின் ஒரு கட்டமாக) ஆழப்படுத்தும் வேலை நடைபெற்று வருகிறது.

செங்கை மாவட்டம் :

சிறுபாசனச் திட்டத்திற்காக செங்கல்பட்டு கோட்டத்தில் 13,854 ரூபாய், காஞ்சீபுரம் கோட்டத்தில் 10,000 ரூபாய், சைதை கோட்டத்தில் 36,000 ரூபாய், திருவள்ளூர் கோட்டத்தில் 1,11,075 ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் 1,70,934 ரூபாய் இதுவரை செங்கை மாவட்டத்தில் செலவு செய்யப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் :

இராமநாதபுரம் மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகள் தொடங்கப்பட்டு போர்க் கால நடவடிக்கைகள் போல தீவிர முனைப்புடன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குடிதண்ணீர்க் கிணறுகள் வெட்டுதல், ஆழப்படுத்துதல், சிறிய நீர்ப் பாசனம், கிராமப்புறச் சாலைகள் அமைத்தல், கண்மாய், ஏரிகள் மராமத்து போன்ற வேலைகளுக்காகத் தமிழக அரசு வறட்சி நிவாரணப் பணித்

நிவாரணப் பணிகள்

தமிழக அமைச்சர்கள் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட்டு உடனடியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

கடந்த நூறு ஆண்டுகளில் நிகழாத அளவுக்கு இப்பொழுது வான் பொய்த்துள்ளதால் வந்துள்ள வறட்சியை நமது துயர்துடைப்புப் பணிகளால் விரட்டிடுவோம்.

திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு முதல் தவணையில் 27.5 இலட்சம் ரூபாயும், இரண்டாவது தவணையில் 67.5 இலட்சம் ரூபாயும் ஒதுக்கியுள்ளது.

குடிதண்ணீர் திட்டத்திற்கு மட்டும் இதுவரையில் 13.85 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஊராட்சி ஒன்றியங்கள் வாரியாக அனுமதிக்கப்பட்டுள்ள தொகை வருமாறு :

இராமநாதபுரம் ரூ. 75 ஆயிரம், மண்டபம் 75 ஆயிரம், திருப்புல்லாணி 20 ஆயிரம், முதுகுளத்தூர் 25 ஆயிரம், கமுதி 25 ஆயிரம், கடலாடி 25 ஆயிரம், திருவாடானை 1 இலட்சம், ஆர். எஸ். மங்கலம் 1 இலட்சம், கண்ணங்குடி 70 ஆயிரம், தேவகோட்டை 20 ஆயிரம், கல்லல் 40 ஆயிரம், சாக்கோட்டை 40 ஆயிரம், திருப்பத்தூர் 65 ஆயிரம், சிங்கம்புணரி 65 ஆயிரம், சிவகெங்கை 50 ஆயிரம், காளையார்கோவில் 50 ஆயிரம், மானு மதுரை 25 ஆயிரம், திருப்புவனம் 30 ஆயிரம், பரமக்குடி 25 ஆயிரம், இளையான்குடி 60 ஆயிரம், போகலூர் 70 ஆயிரம்.

அருப்புக்கோட்டை, காரியாப்பட்டி, திருச்சுழி, நரிக்குடி ஒன்றியங்களுக்குத் தலா ரூ. 50 ஆயிரம்.

இது தவிர தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஆழ்கிணறுகள் அமைக்க 2.5 இலட்சம் ரூபாய் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சிறிய நீர்ப்பாசனத் திட்ட வேலைகளுக்கு இதுவரையில் 14.5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் அனுமதிக்கப்பட்டுள்ள தொகை விவரம் :

இராமநாதபுரம் ரூ.20 ஆயிரம், திருப்புல்லாணி 20 ஆயிரம், கமுதி 60 ஆயிரம், கடலாடி 60 ஆயிரம், திருவாடானை 50 ஆயிரம், ஆர்.எஸ். மங்கலம் 50 ஆயிரம், கண்ணங்குடி 75 ஆயிரம், தேவகோட்டை 1 இலட்சம், கல்லல் 1 இலட்சம், சாக்கோட்டை 75 ஆயிரம், திருப்பத்தூர் 90 ஆயிரம், சிங்கம்புணரி 1 இலட்சத்து 20 ஆயிரம், சிவகெங்கை 75 ஆயிரம், காளையார் கோவில் 1 இலட்சம், அருப்புக்கோட்டை 20 ஆயிரம், காரியாப்பட்டி 40 ஆயிரம், திருச்சுழி 40 ஆயிரம்.

நெடுஞ்சாலைத் துறை கிராமப்புறச் சாலைகள் பிரிவு காரைக்குடி கோட்டைப் பொறியாளர் மேற்பார்வையின் கீழ் 6 இலட்ச ரூபாய் வேலைகளும், பரமக்குடி கோட்டப் பொறியாளர் மேற்பார்வையின் கீழ் 4 இலட்சம் ரூபாய் வேலைகளும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஊன்கலந்தாய் உயிர்கலந்தாய்!

தேன்கலந்து பால்கலந்து செங்க ரும்புத்
தீஞ்சாறும் செங்கனியும் கலந்து செய்த,
வான்கலந்த, புகழ்கலந்த வாச கங்கள்
மாணிக்கம் போலுதிர்த்தாய் அவற்றை யெல்லாம்
நான்கலந்து பேசுங்கால், எழுதும் போழ்தில்,
நாட்டவரின் நலனெண்ணிச் செய்யும் போதில்
ஊன்கலந்தே உயிர்கலந்தே உணர்வு தன்னில்
உவட்டாமல் இனித்திருக்கும் உயர்வு கண்டோம் !

அடித்தளத்தை மறந்துவிட்டுக் கட்ட டங்கள்
அமைத்திட்டால் எத்தனைநாள் நிலைத்தி ருக்கும் ?
படித்துறையில் லாக்குளத்தால் மக்க ளுக்குப்
பயனுண்டா ? மாடுகளும் இறங்கி டாவே ?
இடித்துவைத்த புளியனையார் மனிதர் தாமோ ?
எட்டுணையும் மற்றவர்க்கு நன்மை செய்யாப்
படித்தவரால் பிற்பட்டோர் தாழ்த்தப் பட்டோர்
பலகாலம் வீழ்ந்திருந்தார் எழுப்ப வந்தாய் !

மாற்றங்கள் புரிவதற்கே பிறந்த வன்நீ
மண்டிநின்ற பழைமைக்கு விடைய ளித்துப்
போற்றிவந்த மடமைக்கும் தடைவி தித்துப்
புதுமைக்கு மெருகூட்டிப் புகவிட் டாய்! ஏ
மாற்றத்தால் வாழ்க்கையினை ஓட்டி வந்தோர்
மனந்திருந்தி மார்க்கத்தைப் புரிந்து கொண்டார்.
வேற்றவரால் படையெடுப்பு நிகழும் போதும்
வீரத்தை ஈரத்தில் கலந்து தந்தாய்.

தந்தையில்லை, தமையனில்லை என்ற எண்ணம்
தலையெடுக்கும் மதலையர்க்குத் தோன்று வண்ணம்
சிந்தையிலே சந்ததமும் குடியி ருக்கும்
சீர்தலைவர் பேணுகின்றார் நஞ்சு ருந்தத்
தந்தவரே வியந்துநிற்கக் கண்டத் திற்குள்
தடுத்துவிட்டுத் தன்போக்கில் விரைகின் றாரே !
சொந்தமாக நீகொடுத்துப் போனாய் போலும்
சூதுசூழ்ச்சி தாங்குகின்ற இதயந் தன்னை !

''தன்னைத்தான் வெல்பவனே தரணி யாள்வான்''
தருணத்தில் நீயுரைத்தாய்; மறவோம் என்றும் !
''உன்னைத்தான் தம்பி !''யென மொழியை, நாட்டை
உய்விக்கும் வழிகாட்டி, உணர்ச்சி யூட்டிப்
பொன்னைத்தான் மணியைத்தான் அற்ப மாக்கிப்
பொதுவாழ்வின் புனிதத்தை இனிது சொன்னாய் !
''என்னைத்தான் அர்ப்பணித்தும் நாடு காப்பேன்!''
எனும்முதல்வர் இருக்கையிலே எமக்கேன் அச்சம் ?

கவிஞர் கருணானந்தம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் புதிய கண்டுபிடிப்புகள்!

1. முல்லை மலரிலிருந்து நறுமணமுள்ள எண்ணெய்!

பிரான்சு, மற்றும் சில நாடுகளில், ஜாதிமல்லி வேர்களிலிருந்து, உலகப் பிரசித்திப் பெற்ற ''ஜாஸ்மின் காங்கரீட்' (Jasmine Concrete) எனப்படும் நறுமண எண்ணெய் தயாரிக்கப்படுகின்றது. இதிலிருந்து விலையுயர்ந்த நறுமணமுள்ள ''செண்ட்'' போன்ற வாசனைப் பொருட்கள் உற்பத்தியாகின்றன. தமிழ் நாட்டில் பரவலாகப் பயிரிடப்படும் மற்றொரு மலர், முல்லை. தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவையில் நடத்திய ஆராய்ச்சியில், முல்லை மலரிலிருந்தும் நல்ல தரமுள்ள நறுமண எண்ணெய் தயாரிக்கலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முல்லையின் நான்கு வகைகளில், நறுமண எண்ணெய் கிடைத்த அளவு 0.247 சதவீதம் முதல் 0.339 சதவீதம் ஆகும்.

''பாரிமுல்லை'' மலரில் 0.309 சதவீதம் நறுமண எண்ணெய் கிடைத்துள்ளது. அதாவது 1,000 கிலோ பாரி முல்லைப் பூவிலிருந்து சுமார் 3 கிலோ நறுமண எண்ணெய் கிடைக்கிறது. ஆனால் ஜாதி மல்லியில் 1,000 கிலோ பூவிற்கு 2.5 கிலோ நறுமண எண்ணெய் தான் கிடைக்கிறது. எனவே பாரி முல்லையின் நறுமண எண்ணெய் தரும் சக்தியை, ஜாதி மல்லியுடன் ஒப்பிடும்பொழுது, பாரி முல்லையில் நறுமண எண்ணெய் தரும் சக்தி அதிகமாக உள்ளது தெரியவருகிறது.

''ஹிந்துஸ்தான் லிவர் லிமிடெட்'' என்ற நிறுவனத்தாரால், பாரிமுல்லை நறுமண எண்ணெய் பரிசோதிக்கப்பட்டபோது, அது ஜாதிமல்லி நறுமண எண்ணெய் போன்று நல் நல்ல தன்மையுடையது என்று தெரியவந்துள்ளது.

1,000 கிலோ பூவிலிருந்து 3 கிலோ நறுமண எண்ணெய் என்ற விதத்தில், பாரிமுல்லையிலிருந்து ஏக்கராவுக்கு ஒரு ஆண்டிற்கு 12 கிலோ வாசனை எண்ணெய் கிடைக்கும். உலக மார்க்கெட் நிலவரத்திற்கு தகுந்தாற்போல் இதன் மதிப்பு சுமார் ரூபாய் 36,000 முதல் ரூபாய் 72,000 வரை இருக்கும்.

நறுமண எண்ணெய் தயாரிக்க உழவர்களுக்கு உதவும் வகையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் 'மாதிரி இயந்திரம்' ஒன்றைத் தயாரித்துள்ளது. இதில் ஒரு நாளுக்கு 10 கிலோ பூக்களிலிருந்து நறுமண எண்ணெய் தயாரிக்கலாம். இது 'எவர்சில்வர்' உலோகத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. இதைத் தயாரிக்க ரூபாய் 30,000 செலவாகும். மின்சாரத்தால் இதை இயக்கலாம். அதிக அளவு பூக்களிலிருந்து எண்ணெய் எடுக்கவும், இவ்வியந்திரத்தை இலகுவாக மாற்றமுடியும்.

முல்லை, ஜாதிமல்லி மலர்களிலிருந்து நறுமண எண்ணெய் எடுக்கும் முறை பற்றியும், மாதிரி இயந்திரம் பற்றியும் விவரங்கள் இலவசமாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து, வேண்டுவோருக்கு அளிக்கப்படும்.

2. ஆண்டிற்கு ஆறு முறை உரமிட்டால் ஜாதி மல்லியில் அதிக விளைச்சல் பெறலாம்.

சாதாரணமாக ஜாதிமல்லி செடிகளுக்கு ஆண்டிற்கு இரு முறை-செடி வெட்டிய பிறகு டிசம்பர்-ஜனவரியில் ஒருமுறையும், ஜூன்-ஜூலையில் மறுமுறையுமாக-உரமிடுவது பழக்கத்திலிருந்து வருகிறது. ஜாதி மல்லி செடிகள் கிட்டத் தட்ட ஆண்டு முழுவதும் பூக்கள் கொடுக்கின்றன. கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நடத்திய ஆராய்ச்சியில், செடிகளுக்கு ஆண்டிற்கு ஆறுமுறை—அதாவது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை-உரமிட்டால் 22 சதவீதம் அதிக விளைச்சல் அடையலாம் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

உரத்தின் அளவு ஒரு ஆண்டிற்கு	உரமிடும் தடவைகள் ஒரு ஆண்டிற்கு	3 ஆண்டு விளைச்சல் ஒரு செடிக்கு	அதிக விளைச்சல் சதவீதம் (இரண்டு தடவைக்கு மேல்)
120 கிராம் நைட்ரஜன் 240 கிராம் பாஸ்பரஸ்	6	7.26	22.0
240 கிராம் பொட்டாசிய உரம் 30 கிராம் மாட்டு உரம்	2	5.96	—

ஆறுதடவைகள் மேற்கூறியவாறு உரமிட-இரு தடவைகளை விட அதிகப்படி ரூபாய் 240/- தான் செலவாகும். ஏனெனில், உரத்தின் அளவில் மாறுதல் இல்லை. ஆனால் விளைச்சல் 22 சதவீதம் அதிகரித்து நல்ல நிகரலாபம் அடைய ஏதுவாகின்றது. ஆறு தடவை உரமிடுவதால், ஒரு கிலோ பூக்களுக்கு சுமார் ரூபாய் 5 என்ற விலையில், ஒரு ஏக்கருக்கு அதிகப்படியாக ரூபாய் 3,000 நிகர இலாபம் அடையலாம்!

3. 'வெர்ட்டிசீலியம்' வாடல் நோயைக் கட்டுப்படுத்தும் முறைகள்!

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக உழவர் பயிற்சி மையத் தலைவரான துணை வேளாண்மை இயக்குநரும், தாவர நோயியல்துறையைச் சேர்ந்த இணைப் பேராசிரியர் ஒருவரும், தமிழ்நாடு வேளாண்மைத் துறையின் தீவிர பருத்தி சாகுபடித் திட்டக் கோவை மண்டல துணை வேளாண்மை இருக்குநரும் அண்மையில் தொண்டாமுத்தூர் வட்டாரத்தில் சுற்றுப் பயணம் செய்தார்கள். அப்பொழுது, தொண்டாமுத்தூர் வட்டார வேளாண்மை அலுவலரும் உடன் சென்றார். தொண்டாமுத்தூர், புத்தூர், தென்னமநல்லூர், தேவராயபுரம் ஆகிய கிராமங்களில் பயிரிடப்பட்ட, இரண்டு முதல் மூன்று மாதங்கள் வயதடைந்த,'எம்.சி.யூ.5' பருத்தியில் 'வெர்ட்டிசீலியம்' வாடல்நோய் தாக்கியது அவர்கள் பார்வைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்த நோய் இவ்வட்டாரத்தில் ஏறத்தாழ ஐம்பது ஏக்கர்களில் பரவலாக தோன்றியிருக்கலாம் என்று மதிப்பிடப்படுகிறது. வரும் குளிர்கால மாதங்களில் இந்த நோய் மேலும் பரவப் பல சாத்தியக்கூறுகள் உள்ளன. இது தவிர கார்த்திகை, மார்கழி மாதங்களில் பெரிய நாயக்கன் பாளையம், சர்க்கார் சாமக்குளம் ஆகிய வட்டாரங்களில் கடந்த ஆண்டு தோன்றிய தோட்டங்களிலும் 'வெர்ட்டிசீலியம்' வாடல் தோன்றலாம்.

இந்த நோயைத் திறம்படத் தடுக்கும் சக்தியுள்ள ஊடுருவும் பூசண நாசினியான 'பென்லேட்' போன்ற மருந்துகள் இந்தியாவில் எளிதில் கிடைப்பது இல்லை. எனினும், இந்த நோயின் கொடுமையைக் குறைத்து, மகசூல் இழப்பு பெருமளவு ஏற்படாமல் தடுக்க உழவர்கள் கீழ்க்கண்ட முறைகளைக் கடைபிடிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தற்காலத்தில் இம்முறைகளைத்தான் கடைபிடிக்க இயலும்.



தடுப்பு முறைகள்

(1) 'வெர்டிசீலியம்' வாடல் நோய்த் தாக்கினச் செடிகளின் தூரில் வேர்நனையும் அளவில் 0.1 சதவிகித ஈர செரசான் (Wet ceresan) ஊற்ற வேண்டும். ஒரு கிராம் 'ஈரசெரசான்' மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்தால் அது 0.1 சதவிகிதக் கலவையாகும். வயதிற்கேற்ப ஒரு செடிக்கு 150 மில்லி லிட்டர் முதல் 250 லிட்டர் கலவை தேவைப்படும். நோய்த் தாக்கின செடிகளைச் சுற்றிலுமுள்ள நலமுள்ள செடிகளின் வேரிலும் 'ஈர செரசான்' கரைசலை ஊற்ற வேண்டும்.

(2) 2.5 முதல் 3 வாரப் பயிரில் நோய் கண்டிருந்தால், பொட்டாசியம் குளோரைடுடன் (Kcl), யூரியாவையும் (பையூரியட் அளவுகுறைந்தது) கலந்து இலைகளில் தெளிக்கலாம். விசைத் தெளிப்பானில் தெளிக்க ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீர் தேவை. இந்த அளவுத் தண்ணீரில் 2 கிலோ பொட்டாசியம் குளோரைடையும், 3 கிலோ யூரியாவையும் கலந்து தெளிக்கவும். இதனால், செடிகள் ஊட்டம் பெறுவதோடு, நோய்க் கடுமையும் ஓரளவு குறையலாம்.

(3) பூச்சி மருந்துகள் தெளிக்கும்பொழுது ஏக்கருக்கு அரைக் கிலோ 'டீட்டர்' என்ற பூசண நாசினியைக் கலந்து ஒரு மாதம் இடைவெளியில் ஓரிரு முறை தெளிக்கலாம். 'டீட்டர்' தெளித்த பருத்தியில் 'வெர்ட்டிசீலியம்' வாடலினால் இலைகள் கருகுவது ஓரளவு குறைந்துள்ளதை தொண்டாமுத்தூரிலுள்ள ஒரு வயலில் காண முடிந்தது.

(4) நோய்த் தாக்கின வயல்களுக்கு அடிக்கடித் தண்ணீர் பாய்ச்சக்கூடாது. நிலத்தைக் காய விட்டு, வேண்டிய அளவுவுக்குத் தேவையான முறைகள் தண்ணீர் பாய்ச்சினாலே நன்று. மேலும், தண்ணீர் நிலத்தில் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நோய்த் தாக்கின வயலில் பாய்ந்த தண்ணீர், நோய்த் தாக்காத வயல்களுக்குப் பாயாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

(5) இவ்வாண்டு 'வெர்ட்டிசீலியம்' வாடல் நோய்த் தோன்றிய நிலத்தைக் குறித்து வைத்துக் கொள்ள வேண்டும். நோய்க் கடுமையாகத் தோன்றிய நிலத்தில் சில ஆண்டுகளுக்குப் பருத்தி பயிரிடாமல், தானியப் பயிர்கள் விளைவிக்கலாம். நோய் குறைந்து தாக்கிய நிலங்களில், பருத்தி சாகுபடி செய்ய வேண்டிய சூழ்நிலை கட்டாயமாக இருந்தால் 'சி.

பி.எஸ். 156', 'சுவின்', 'சுஜாதா' போன்ற நோய்த் தாக்காத ரகங்களைப் பயிரிடலாம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும், தமிழ்நாடு வேளாண்மைத் துறையும் இணைந்து செயலாற்றியதாலும் உழவர்களின் ஒத்துழைப்பாலும் கோவை மாவட்ட ஏனைய பகுதிகளில் 'வெர்ட்டிசீலியம்' வாடல் நோய் குறைந்து வருகிறது. அதுபோல், தொண்டாமுத்தூர் வட்டார உழவர் பெருமக்களும், தடுப்பு முறைகளைக் கையாண்டு இந்தக் கொடிய வாடல் நோயை அறவே ஒழிக்க உதவும்படி வேண்டப்படுகிறார்கள்.

4. வெண்டையைத் தாக்கும் நூற்புழுக்களும், தடுப்பு முறைகளும் :

வெண்டை, பலவிதமான நூற்புழுக்களின் தாக்குதலுக்குள்ளாகிறது. அவற்றுள் வேர் முடிச்சு (Root-Knot) நூற்புழுவான 'மெலாய்டோகைனி (Meloidogyne Spp) இனமும், மொச்சை வடிவ (Reni form) நூற்புழுவான 'ரோட்டிலெங்குலஸ் ரெனிபார்மிஸ்' (Rotylenchulus reniformis) இனமும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை.

வெண்டை விதை நடும் சமயத்தில் வேர்முடிச்சு நூற்புழுக்கள் தன் பருவ மெய்தா நிலையில் மண்ணில்காணப்படும். விதைகள் முளைத்து 7 முதல் 10 நாட்களுக்குள் இந்நூற்புழுக்கள் வேர்பகுதிக்குள் சென்று அங்குள்ள செதில்களில் உள்ள சாறுகளை உறிஞ்சி சாப்பிட ஆரம்பிக்கும். இவ்வாறு உணவு உட்கொள்ளும் சமயம் ஒருவகை நச்சு நீர் வேர் முடிச்சு நூற்புழுக்களால் சுரக்கப்பட்டு, செதில்களினுள்ளே செலுத்தப்படுகிறது. இதனால் தாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள செதில்கள் அசாதாரண வளர்ச்சியடைந்து மூண்டு முண்டாகத் தோற்றமளிக்கும். மிகவும் அதிக அளவில் தாக்குதலுக்குள்ளாகிய வேர்களில் சிறிதும் பெரிதுமாக அடுத்து அடுத்து இவ்வகை முண்டுகள் தோன்றி முடிச்சுகள் போல் தோற்றமளிக்கும். விதை முளைத்த 15 நாட்களுக்குள் வேர் பகுதிகளில் முடிச்சுகள் காணப்படும். இம்முடிச்சுகள் ஆரம்பத்தில் அளவில்

சிறியதாகவும், பிறகு நாளாக ஆகப் பெரியதாகவும் வளர்ச்சி அடையும். இவ்வகை நூற்புழுக்களால் தாக்கப்பட்ட செடிகள் தன்வீரியத் தன்மையை இழந்து, வளர்ச்சியில் குன்றி, இலைகள் மஞ்சள் நிறமாக மாறி தோற்றமளிக்கும். இந்நூற்புழுக்களின் பாதிப்பு செடியின் ஆரம்பகாலத்தில் மிகுந்திருக்குமாயின், செடிகளின் இழப்பிற்கு ஏதுவாகும். இதனால், ஆங்காங்கே செடிகள் இழந்த இடங்களில் திட்டுத் திட்டாக வெற்றிடம் காணப்படும்.

மொச்சை வடிவ நூற்புழுவினால் தாக்கப்படும் வேர்களில், முடிச்சுகள் உண்டாவதில்லை. எனவே, இவற்றின் தாக்குதலை எளிதாகக் காண இயலாது. விதை முளைத்ததுமே இப்புழுக்கள் பயிரைத் தாக்கத் தொடங்குகின்றன. நூல் வடிவ பெண்புழு தன் தலையை மட்டும் வேர் பகுதியில் நுழைத்து உணவு உட்கொள்கிறது. இப்புழுக்கள் ஒரு வார காலத்தில் முழுப் பருவமான மொச்சை வடிவத்தைப் பெற்று, முட்டையிட ஆரம்பிக்கின்றன. தாக்கப்பட்ட வேர்கள் வளர்ச்சி குன்றி கரிய நிறத்துடன் காணப்படும். இதனால் செடிகளின் வளர்ச்சி குன்றி, வீரியமிழந்து, மஞ்சள் நிறத் தோற்றமளிக்கும். இவ்வகை நூற்புழுக்கள், பருத்தி பயிரிடப்படும் நிலங்களில் அதிகமாக காணப்படும்.

தடுப்பு முறைகள்

1. பொதுவாகப் பயிர் சுழற்சி முறையைக் கடைப்பிடித்து இந்நூற் புழுக்களைக் கட்டுப்படுத்தலாம். இந்நூற்புழுக்கள் உள்ள நிலங்களில் தக்காளி, கத்தரி, வெண்டை போன்ற காய்கறிகளைத் தொடர்ந்து பயிரிடுதல்கூடாது.

2. 'கார்போஃயூரான்' 50 சத நனைதூளை 3 அல்லது 6 சத வீரியத்தில் விதையுடன் கலந்து உபயோகித்தால் இந்நூற்புழுக்களைக் கட்டுப்படுத்தலாம்.

கார்ப்போஃயூரானை விதையுடன் கலக்கும் முறை

100 மில்லி கொதிக்கும் நீரில், சலவைக் கஞ்சியைப் (Starch) போட்டுக் கலக்கி, ஆற வைக்க வேண்டும். பின்பு 100 கிராம் வெண்டை விதையை ஆறிய கஞ்சியில் போட்டுக் கலக்க வேண்டும். இவ்விதைகளின் மேல் 6 முதல் 12 கிராம் 'கார்போஃயூரான்' 50 சத நனைதூளை சீராகத் தூவ வேண்டும். மருந்து கலந்த இந்த விதைகளை ஒரு தட்டில் பரப்பி நிழலில் உலரவைக்க வேண்டும். இது உலர்ந்த பின் விதைகள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளாமல் தனித் தனியாக இருக்க வேண்டும்.

'கார்போஃயூரான்' அதிக நச்சுத் தன்மையையுடைய மருந்தாதலால், இதை மிகவும் கவனத்துடன் உபயோகப் படுத்த வேண்டும்.

தகவல்:

தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.

நிறைவான உணவு பெற நீர்வாழ் உயிரினங்கள் வளர்ப்போம்!

உணவாகும் உயிரினங்களை நீரில் வளர்க்கும் தொழில் தொன்றுதொட்டு பழக்கத்தில் இருந்து வருகிறது. வேளாண்மை துவங்கிய காலம் முதற்கொண்டே - ஏறக்குறைய 8,000 முதல் 10,000 ஆண்டுகட்கு முன்பே-உண்பதற்கென நீரில் உயிரினங்கள் வளர்ப்பும் தொடங்கியிருக்கலாம். எனினும், கடந்த நூற்றாண்டில் தான் இக்கலை அறிவியல் முறையில் வளர்ச்சி பெற்றுள்ளது.

நீர்வளம்

பூமி 71 சதம் அளவுக்குத் தண்ணீரால் சூழ்ந்தது. அவற்றில் 90 சதத்திற்கு மேல் விரிந்த கடற்பரப்பாகவும், எஞ்சியதில் பெரும்பகுதி பனி போர்த்திய சிகரங்களாகவும் திகழ்கின்றன. 0.02 சதம் அளவே பல்வேறு உள்நாட்டு நீர்நிலைகளாக விளங்குகின்றன. உலகத்தின் நன்னீர் நிலைகளின் பரப்பளவு 50 இலட்சம் சதுர கிலோமீட்டர் எனவும். கொள்ளளவு ஏறக் குறைய 5 மீட்டர் ஆழம் கொண்ட 25,000 கன கி.மீ. எனவும் மதிப்பிடப்பட்டுள்ளன.

ஆறுகள், நீர்த்தேக்கங்கள், கிராமியக் குளங்கள், கழிவுநீர் உறையும் குளங்கள், கிணறுகள் ஆகியனவே பல்வேறு நன்னீர் நிலைகளாவன. ஆறுகள், கடல் ஆகிய இரண்டினையும் இணைக்கும் பாலமாக-நன்னீருக்கும், கடல் நீருக்கும் இடைப்பட்ட சற்று உப்புத் தன்மையுடையனவாக — ஆறுகளின் கடலோடு கலக்கும் முகத்துவாரங்கள் திகழ்கின்றன.

உயிரினங்கள் வளர்ப்புக்குச் சாத்தியக் கூறுகள்

மேற்கூறப்பட்ட வளமான நீர்நிலைகளில் உயிரினங்கள் வளர்ப்பது சத்துள்ள உணவுக்கு வழிவகுக்கும்! வேளாண்மை வழங்கும் மாவுச் சத்துணவுக்கு மாறாக, நீரிலிருந்து பெறும் உணவு மிகுதியானப் புரதச் சத்தைக் கொண்டுள்ளது. நீரில் உற்பத்தியாகும் நுண்ணுயிரினங்கள் நேரடியாக உணவாகக் கொள்ள ஏற்றதல்ல. ஆயினும், இந்நுண்ணுயிர்களை உண்டு வளரும் மீன்கள் சத்தும், சுவையும் நிறைந்த உணவாகும்.

நன்னீரில் உயிரினங்களை வளர்க்கும் முறை, கடல்நீர் அல்லது முகத்துவாரங்களில் நன்னீர் கலந்த உப்புநீரில் வளர்க்கும் முறையைக் காட்டிலும் வெகுவாக முன்னேற்றம் அடைந்துள்ளது. இனப்பெருக்கம், அதன் கட்டுப்பாடு, குஞ்சுகள், சூழ்நிலை மாற்றங்களை ஓரளவு தாங்கும் தன்மை, உணவு உண்ணும் பழக்கங்கள் ஆகிய பண்புகளை உயிரினங்களின் வளர்ப்புக்கு முதன்மையாகக் கருதப்பட வேண்டும். மீன்கள், மற்றும் பிற உணவாகும் உயிரினங்களில், பெருமளவு குறிப்பிடத்தக்க உற்பத்தியை, இத்துறையில் முன்னேற்றம் கண்டுள்ள நாடுகள் சில பெற்றுள்ளன. உதாரணமாக, இத்துறையில் முன்னேறிய நாடுகளில், ஓர் ஆளின் ஓராண்டுப் பணிமூலம் கழிவு நீரில் கிடைத்த உற்பத்தி பின்வருமாறு உள்ளன.

மேற்கு ஜெர்மனியில் 30 டன் கெண்டை மீன்கள்,

அமெரிக்காவில் 30 டன் கெளுத்தி மீன்கள்,

பிலிப்பைன்ஸ் நாட்டில் 15 டன் ''பால் கெண்டை'' மீன்கள்,

டென்மார்க்கில் 16 டன் 'ட்ரௌட்'

ஜப்பானில் 4 டன் சிப்பிகள்.

உயிரினங்கள் வளர்ப்பில் தமிழ்நாட்டின் நிலை!

இந்தப் பின்னணியில், தமிழ்நாட்டில் உண்பதற்கெனவும், வருவாய் பெருக்குவதற்காகவும் உயிரினங்கள் வளர்ப்பு பற்றி ஓரளவு இங்கு அறியலாம். நம் ஆறுகளும், தேங்கிய நீர்நிலைகளும் இயற்கையாகப் பெற்றிருக்கும் மீன்வளத்தை மேலும் பெருக்க வேண்டும் என்ற அடிப்படையில், மிகவும் வேகமாக வளரக்கூடிய கங்கை நதியைச் சார்ந்த கெண்டை மீன் வகைகளான 'தோப்பா', 'ரோகு', 'மிர்கால்' ஆகிய இனங்களைத் தமிழ்நாட்டு நீர்நிலைகளில் இருப்பு செய்து நிலை பெறச் செய்யப்பட்டன!

இலங்கையிலிருந்து 1939-ஆம் ஆண்டில் 'கண்ணாடிக் கெண்டை' எனும் மீன் கொண்டுவரப்பட்டு, நீலகிரி, கோடைக்கானல், ஏற்காடு ஆகிய மலைப் பிரதேசத்துக்குரிய குளிர்ந்த நீரில் வளர்த்து பின், இயற்கையான இனப்பெருக்கத்தினால் இம்மீன் வளம் பெற்றதுடன், இந்தியாவில் பிற மாநிலங்கட்கும் பரவும் நிலை எய்தியது!

'சாதாக் கெண்டை' எனும் மீன், தமிழ்நாட்டிற்கு கொண்டு

வந்தபின், தற்போது பெருமளவு இனப்பெருக்கம் செய்வதன் மூலம், குளங்களிலும், சில நீர்த் தேக்கங்களிலும் வளர்ப்பதற்கு ஏற்ற மீனாகத் திகழ்கிறது!

அதேபோன்று, 'திலேபியா' எனும் மீனும், அதற்கே உரிய தனித்த பெருக்கத்தினால், எல்லாத் தன்மையான நீர் நிலைகளிலும் நிலைபெற்று, பெருமளவு மீன் உற்பத்திக்கு வழி கோலியுள்ளது!

தமிழ்நாட்டு மீன்கள், பின்னர் கொண்டு வரப்பட்ட வேகமாக வளரும் மீன் வகைகள் ஆகியவற்றை 'தூண்டுமுறை மூலம், இனப்பெருக்கம் செய்ததன் பலனாக ஏறக்குறைய மூன்று இலட்சம்எக்டேர் பரப்பளவுள்ள உள்நாட்டு நீர் நிலைகளில் இருப்புச் செய்யத் தேவையான மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்ய முடிந்தது.

உப்புநீர் மீன் வகைகளான 'பால் கெண்டை', 'மடவை', 'செத்தகெண்டை', ஆகியனவற்றை உப்புநீர் அல்லது நன்னீர்க் குளங்களில் வளர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தூண்டில் மூலம் மீன் பிடிக்கும் தொழிலை வளர்ப்பதற்கென, நீலகிரி, கோடைக்கானல் நீர் நிலைகளில் 'ட்ரௌட்' எனப்படும் சிறந்த மீனை இருப்பு செய்து வளமாக்கப்பட்டுள்ளது. உதகையை அடுத்துள்ள 'அவலாஞ்சி' என்னுமிடத்தில் உள்ள 'ட்ரௌட்' மீன் குஞ்சு பொறிப்பு நிலையம், இம்மீன்களின் இனப் பெருக்கம், குஞ்சுகள் வளர்ப்புக்காக இயங்கி வருகிறது.

வீணாகும் கழிவு நீரில் வளமான மீன் உற்பத்தி செய்திடவும், வேளாண்மைக்குப் பயன்படுத்துமுன், நீரில் மீன் வளர்க்கவும், வேகமாக வளரும் பல வகை மீன்கள் கொண்டு அதிக மீன் உற்பத்தி செய்திடவும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிகள் துவங்கப்பட்டுள்ளன. உப்புத் தண்ணீரிலும், நன்னீரிலும் இறால்களின் இனப்பெருக்கம் செய்யவும், குஞ்சுகளை வளர்க்கவும், பவானிசாகர், சென்னை ஆகிய இடங்களில் பரிசோதனைகள் நடந்து வருகின்றன.

அதே போன்று பழவேற்காட்டில் உணவாகும் சிப்பிகள் வளர்ப்பு, மண்டபத்தில் கடல் பாசி வளர்ப்பு ஆகிய ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன.

தூத்துக்குடியில் உள்ள முத்து, மற்றும் சங்கு வளம் உலகப் புகழ் பெற்றதாகும்! இதுவரை இயற்கை முத்துக்களுக்காகவே, முத்துச் சிப்பிகள் பிடிக்கப்பட்டன. தற்போது, வளர்ப்பு முத்துக்கள் பெறச் செய்த ஆராய்ச்சிகள் வெற்றி பெற்று, அவைகளின் அதிக உற்பத்திக்கு வாய்ப்புகள் உள்ளன!

நீரில் உயிரினங்கள் வளர்ப்பின் இன்றியமையாமை

வளர்ந்து வரும் மக்கட் தொகைக்கு உணவளிக்க வேளாண்மைக்கு மாற்றாக, மீன் வளர்ப்போ அல்லது நீரில் பிற உயிரினங்கள் வளர்ப்போ இருக்க இயலாது! எனினும், நம் மக்களின் குறைந்த புரதச் சத்துணவைச் சரிசெய்ய, இவ்வளர்ப்பு முறைகள் பெருமளவு துணை புரியும். இந்தியாவில் கடலிருந்தும், நன்னீர் நிலைகளிலிருந்தும் தற்போது பிடிபடும் 18 இலட்சம் மெட்ரிக் டன் மீன்களுக்கு மாறாக, மக்களின் புரதச் சத்துக் குறைவை நிறைவு செய்வதற்கு, ஆண்டொன்றுக்கு 50 இலட்சம் மெட்ரிக் டன் மீன்கள் தேவைப்படும். இதன் தேவையே, கி.பி. 2000-ஆம் ஆண்டில் 80 இலட்சம் மெட்ரிக் டன்களாக பெருகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டில் பெரும்பகுதி கடலிலும், உள்நாட்டு நீர்நிலைகளிலும் மீன் பிடிப்பதனால் கிடைக்குமாயினும், நீரில் உணவாகும் உயிரினங்கள் வளர்ப்பு, மேம்படுத்தப்பட்ட வழிமுறைகளினால் உற்பத்தி பன்மடங்குப் பெருக வழி வகுக்கும். இவ்வளர்ப்பு முறைகள் பற்றி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலிருந்து இனி வரவிருக்கும் வெளியீடுகள் விளக்கும்.

தகவல்: என். வி. சூடாமணி, பேராசிரியர்,
வே. நடராசன், துணைப்பேராசிரியர்
மீன்வள அறிவியல் துறை
வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோவை-3.

வேளாண்மைக்குக் கடல்நீர்

கருங்கடல், காஸ்பியன், பால்டிக் ஆகிய கடற்கரைப் பகுதிகளில் கடல்நீரைக் கொண்டு பயிர் செய்யும் ஆராய்ச்சி வெற்றிகரமாக முடிந்துள்ளது என்று சோவியத் நீர்த் தேக்க அமைச்சகம் அறிவித்துள்ளது. சோவியத் ஒன்றியத்தில் இவ்வாராய்ச்சியில் விளைவிக்கப்பட்ட பயிர்களில் சில அதிக மகசூலைத் தந்தனவாம்; சிலவற்றில் நிறைய சர்க்கரை அடங்கி இருந்ததாம்.

பால்டிக் பகுதிகளில் கடல்நீரைப் பயன்படுத்திப் பயிரிடப்பட்ட பார்லி நிறையக் கதிர்களைக் கொண்டிருந்ததாம்.

தானியங்களின் இரசாயன அமைப்பு அல்லது நில வளம் கடல் நீரால் பாதிக்கப்படலாம் என்ற அச்சம் ஆதாரமற்றது என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. சோவியத் நாட்டில் இலையுதிர் காலத்தில் மழையினாலும் வசந்த காலத்தில் உருகும் பனியாலும் கடல்நீர் சுத்தமாகக் கழுவப் படுவதால் பயப்படத் தேவையில்லையாம்.

எஸ்தோணியாவில் கடல்நீர் விவசாயம் இன்னும் 80 சதுர மைல்களுக்கு விரிவாக்கப் படுமாம்.

இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இந்தியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, இத்தாலி, அமெரிக்கா போன்ற இதர நாடுகளுக்கும் சோவியத் நாட்டில் நடத்தப்பட்ட கடல்நீர் விவசாய ஆராய்ச்சியின் முடிவுகள் தெரிவிக்கப்பட்டுள்ளதாக சோவியத் செய்திகள் அறிவித்துள்ளன.

ஐம்பது ரூபாய்

-பி.வி.ஜி-

ஐந்து விரல்களும் ஒரே மாதிரியாகவா இருக்கின்றன ?

அப்படித்தான் நினைத்தார் துரைக்கண்ணு.

ராமுவும், சோமுவும் அண்ணன் தம்பிகள். துரைக்கண்ணுவின் மகன்கள். அண்ணன் படிப்பிலே மட்டு என்றால், தம்பி படுசுட்டி!

'இளமையில் சோம்பல் முதுமையில் வறுமை' என்பதை ஓயாமல் படித்துக் கொண்டிருந்தானே தவிர, ராமுவுக்கு இருந்ததெல்லாம் சோம்பல் ஒன்றுதான். ஆனால், சோமு இதற்கு எதிர்ப்பதமாக இருந்தான்.

வீட்டிலும் சரி, பள்ளியிலும் சரி சோமு பம்பரம்போலச் சுழன்று வருவான். இதனால் பெற்றோரும் ஆசிரியர்களும் அவனை விரும்பினர்.

துரைக்கண்ணுவுக்கு இருந்த கவலையெல்லாம் மூத்த மகன் ராமுவைத் திருத்த முடியவில்லையே என்பதுதான்.

'முயற்சி திருவினை ஆக்கும்' அல்லவா? அதனால் தன்னாலான மட்டும் அவனைத் திருத்த முயன்று வந்தார். ஆனால், இரண்டு பிள்ளைகளையும் அவர் தனது இரண்டு கண்களாகவே பாவித்து வந்தார்.

ராமுவும், சோமுவும் பள்ளிக்கூடம் போகும்போதெல்லாம் துரைக்கண்ணு ஒவ்வொருவருக்கும் 25 காசு கொடுப்பார். ராமு '25 காசு போதாது 50 காசு கொடு' என்று அடம் பிடிப்பான். சோமுவோ கொடுத்ததை வாங்கிக் கொண்டு போவான்; அவன் எதையும் வற்புறுத்தி எவரையும் தொந்தரவு செய்ததில்லை.

ஒருநாள் வீட்டில் வழக்கம் போல உணவு இல்லை. பழைய சோறும், எலுமிச்சை ஊறுகாயுமே இருந்தன. மத்தியானம் ராமு பள்ளியிலிருந்து வீட்டுக்கு வந்தான். பழைய சோற்றைக் கண்டதுமே அவன் முகம் விளக்கெண்ணெய் குடித்தது போல ஆயிற்று!

''இன்றைக்கு மட்டும் இதை சாப்பிடு ராமு ! நாளைக்கு நல்ல சாப்பாடு சாப்பிடலாம்'' என்றாள் அவன் அம்மா.

ராமுவா அதற்கு இணங்குவான்? வெறும் தண்ணீரை மட்டும் குடித்துவிட்டு பையைத் தூக்கிக் கொண்டு 'விர்' ரென்று பள்ளிக்குச் சென்றுவிட்டான்.

சோமுவோ பழைய சோற்றை அமுதமாக நினைத்து வயிறாரச் சாப்பிட்டான்.

பெற்றோருக்கு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

துரைக்கண்ணு ஒரு அச்சகத்தில் எழுத்துக் கோப்பவராக வேலை செய்து வந்தார். குறைந்த வருமானம்தான். என்றாலும் குடும்ப வண்டியைச் சாமர்த்தியமாக ஓட்டி வந்தார்.

ராமுவுக்கும், சோமுவுக்கும் பள்ளிச் சீருடை தைப்பதற்காகத் தாம் குடியிருக்கும் வீட்டில் உள்ள ஒருவரிடம் ஐம்பது ரூபாய் கடன் வாங்கியிருந்தார். ஒவ்வொரு மாதமும் அந்தக் கடனைத் திருப்பித்தர எவ்வளவோ முயன்றும், குடும்பச் செலவுகள் அதற்குக் குறுக்கே வந்து நின்றன.

கடன் தந்தவருக்குச் சாக்கு போக்குச் சொல்லி, ஒவ்வொரு மாதத்தையும் தள்ளிக் கொண்டே வந்தார். ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணம் துரைக்கண்ணுவுக்குத் துளி

கூட இல்லை. எல்லாம் இல்லாத குறைதான்!

கடன் தந்தவர் எத்தனை நாளைக்குத்தான் பொறுப்பார்?

அன்று மாதக்கடைசி!

கடன் கொடுத்த ஆசாமி ஐம்பது ரூபாயை நாளைக்குக் கொடுத்துதான் ஆகவேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்றார். துரைக்கண்ணு எவ்வளவோ சமாதானம் சொல்லிப் பார்த்தார். ஆனால் எதற்கும் அவர் மசியவில்லை.

''நாளைக்குப் பணம் என் கைக்கு வந்தாக வேண்டும். எனக்குச் செலவு இருக்கிறது.' என்று பிடிவாதம் பிடித்தார் கடன் தந்தவர்.

மறு நாள் மாலை....

துரைக்கண்ணு வேலையிலிருந்து வந்ததும் வராததுமாகக் கடன் தந்த ஆசாமி, ''எங்கே பணம்?'' என்று உரக்கக் கேட்டார். துரைக்கண்ணு உருக்கத்துடன், ''மாதக் கடைசி ஐயா! கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். முதல் தேதிக்கு எப்படியாவது தந்துவிடுகிறேன்....'' என்றார்.

''அதெல்லாம் முடியாது. நான் நேற்றே சொல்லிவிட்டேன். பணம் இப்போது எனக்கு அவசரமாகத் தேவையாய் இருக்கிறது...'' என்றார் கொஞ்சங்கூட இரக்கம் இல்லாமல்.

ராமுவும், சோமுவும் அப்போது அங்கே இருந்தனர். அவர்களுடைய அம்மாவும் கவலையுடன் தூணைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தாள். துரைக்கண்ணுவோ செய்வதறியாமல் சிலைபோல நின்றிருந்தார்.

கடன் கொடுத்தவர் இந்த நிலைமையைக் கண்டதும், பணம் கைக்கு வராது போலிருக்கிறது என்று கண்டுகொண்டு 'ஓ' வென உரக்கக் கத்தினார். சமாதானம் செய்ய முயன்ற துரைக்கண்ணுவின் கையைப் பிடித்துத் தள்ள முயன்றார்.

பொறுமையாக இருந்த சோமுவுக்குக் கோபம் பொத்துகொண்டு வந்தது.

''ஐயா! உங்களுக்குப் பணம் தானே வேண்டும்? கொஞ்சம் இருங்கள், இதோ வருகிறேன்!' என்று விறுவிறுவென அறைக்குள் சென்றான். ராமு உட்பட எல்லாரும் ஒன்றும் புரியாமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தனர். சிறிது நேரத்திற்கெல்லாம் சோமு திரும்பி வந்தான்.

''இந்தாய்யா, உன் பணம்! சரியா ஐம்பது இருக்குதான்னு எண்ணிக்கோ!'' என்று வீராப்புடன் பணத்தை வீசியெறிந்தான், சோமு.

சோமுவுக்குப் பணம் எப்படி வந்தது என்று அனைவரும் புரியாமல் விழித்தனர்.

''டேய், சோமு! ஏதுடா இந்தப் பணம்? சொல்லுடா?'' என்று துரைக்கண்ணு கேட்டுக் கொண்டிருந்தபோது, கடன் தந்தவர் குறுக்கிட்டு, ''அந்தப் பணம் அவனுக்கு எப்படிக் கிடைச்சுதுன்னு நான் சொல்றேன். அது திருடின பணம்'' என்றார் அலட்சியமாக.

உடனே சோமு, ''என்ன சொன்னே, என்னை யா திருடன்னு சொன்னே?'' என்று கையை ஓங்கிக்கொண்டு அந்த ஆசாமிமீது பாய்ந்தான்.

அப்போது—

''சோமு! நில்!'' என்ற குரலைக் கேட்டு அனைவரும் வாசல்பக்கம் பார்த்தனர். துரைக்கண்ணுவின் நண்பர் மாணிக்கம் வந்து கொண்டிருந்தார்.

''எல்லாவற்றையும் நான் கேட்டுக் கொண்டுதானிருந்தேன். இந்தாப்பா! கடன் கொடுத்தவரே .....யாரைப் பார்த்து திருடன் என்று சொன்னாய்? சோமுவா திருடன்?''

''ஆமாய்யா, சோமு திருடன்தான்..இல்லேன்னா இவ்வளவு பணம் அவனுக்கு எப்படிக் கிடைச்சுது?''

''சொல்றேன் ஐயா! அவன் உங்க கையிலே வீசியெறிந்தானே அந்தப் பணம் அதை அவன் எங்கேயும் திருடலே..''

''அப்படீன்னா?''

''அந்தப்பணம் பாங்கிலே இருந்து கொண்டு வந்தது!''

''நீங்க என்ன சொல்றீங்க மாணிக்கம்?'' என்று துரைக்கண்ணு திகைப்புடன் கேட்டார்.

அதற்கு மாணிக்கம், ''ஆமாம் துரைக்கண்ணு! அவன் பாங்கிலே சேர்த்து வைத்த பணத்திலிருந்துதான் கொண்டு வந்திருக்கிறான். அது எப்படி திருடினதாக ஆக முடியும்?'' என்று திருப்பிக் கேட்டார்.

''அப்பா! நீங்க எனக்குத் தினந்தோறும் 25 காசு கொடுப்பீங்க இல்லியா? அதை நான் தின்பண்டம் எதுவும் வாங்கிச் சாப்பிடாமல் எங்க பள்ளிக்கூடத்துக்கு அருகிலே இருக்கிற ஒரு பாங்கிலே சேமித்து வந்தேன். இப்படி நான் சேமிக்கிறதுக்கு உதவியா இருந்தவரு நம்ம மாணிக்கம் சார்தான்!'' என்று சோமு சொன்னதும் துரைக்கண்ணு தன் மகனை வாரி அணைத்துக் கொண்டார்.

''துரைக்கண்ணு! அந்தப் பாங்கிலே பிக்மி டெபாசிட் திட்டம்னு ஒண்ணு இருக்கு. இந்தச் சேமிப்புத் திட்டத்திலே குறைந்தது 25 காசிலிருந்து நாள்தோறும் சேர்க்கலாம். இந்தத் திட்டத்திலே என்னுடைய பிள்ளைகளும் சேர்ந்திருக்காங்க. அதைப்பார்த்துத்தான் நம்ம சோமுவும் அப்படிச் சேமிக்கத் தொடங்கினான் ... இப்ப அவன் கணக்கிலே எழுபத்தைந்து ரூபாய் இருக்கிறது. காலையிலேதான் ஐம்பது ரூபாய் எடுத்து வந்திருக்கிறான் என்று மாணிக்கம் சொன்னதும், கடன் கொடுத்தவர் வெட்கத்தால் தலை குனிந்து கொண்டார்.

என்
கிர்லோஸ்கர் ஸ்பிளிட் கேஸ் பம்பு
என்னுடைய பெருநிதியாகும்



''உண்மையில் இந்தப் பம்புதான் என் பெருஞ்செல்வம். அமோகமான விளைச்சலிலிருந்து கணிசமான லாபம் கிடைத்ததில் எனக்கு பரம சந்தோஷம். நெடுங்காலமாக நான் பெற விரும்பியது இதுதான்—மிகக் குறைந்த மின்சக்தி தேவைப்படும், அதேசமயம் பராமரிப்பே பெரும்பாலும் தேவையற்ற திறன்மிக்க பம்பு. எனது 20 ஏக்கரா நிலத்திற்கு மிகவும் பொருத்தமான பம்பு இதுவே. இன்னும் அதிக பரப்புள்ள நிலங்களுக்கும் பம்பு ஒரு பிரச்னையில்லை. கிர்லோஸ்கர் தயாரிக்கும் பற்பல வகைப் பம்புகளில் உங்களுக்கு ஏற்ற ப்ம்பு ஒன்று நிச்சயமாக இருக்கும்.

20 ஏக்கர் அல்லது மேற்பட்ட பரப்புள்ள நிலத்தையுடைய விவசாயிகளுக்கும், பெரிய அல்லது சிறிய கூட்டுறவுச் சங்கங்களுக்கும், ஏற்றப் பாசனத்திற்கு நான் ஒருவித தயக்கமுமின்றி கிர்லோஸ்கர் ஸ்பிளிட்-கேஸ் பம்புகளைச் சிபாரிசு செய்கிறேன்''.

இந்தியாவெங்குமுள்ள எமது டீலர்கள் மற்றும் வியாபாரிகள் மூலம் நம்பகமான, விற்பனைக்குப் பிந்திய சர்வீஸ் வசதி கிடைக்கிறது.

STUSA 760

Kirloskar®



UP



DSM



KB

அதிகப்படி விவரங்களுக்கு தொடர்பு கொள்க:

கிர்லோஸ்கர் பிரதர்ஸ் லிட்., உத்யோக பவன், திலக் ரோடு, பூனா-2.

® டிரேட் மார்க்கின் பதிவுபெற்ற உபயோகிப்பாளர்கள்.



மக்கள் நல அரசு தமிழக அரசு

மத்திய உணவு அமைச்சர் ஜகஜீவன்ராம் புகழ் மாலை

இந்த இனிய விழாவில் கலந்து கொள்வதில் எனக்குப் பெரும் மகிழ்ச்சி ஏற்படுகிறது. இந்த விழாவில் நூறு வீடுகள் அரிசன சகோதரர்களுக்காகக் கட்டப்பட்டு இலவசமாக வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு அரசு துணிவுடன் செயல்படுத்தி வருகின்ற நிர்மாணத் திட்டப் பணிகளையும் ஆக்க வேலைகளையும் நான் கவனத்துடன் கண்டு, பாராட்டிப் போற்றி வருகிறேன்.

தமிழக அரசு குடிசை வர்ழ் மக்களுக்காகக் கட்டிய வீடுகளையும், தொழிலாளர்களுக்காகக் கட்டிய வீடுகளையும் நான் பார்த்திருக்கிறேன். இப்போது இங்கே தாழ்த்தப்பட்ட சகோதரர்களுக்காகக் கட்டப்பட்டுள்ள வீடுகளைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மாநிலத்தின் ஏழை எளிய மக்கள் வீட்டுவசதியின்றி வாடுகின்ற அவல நிலையிலிருந்து அவர்களை விடுவித்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தச்செய்யப்படுகின்ற முயற்சிகளில் இந்தப் பணிகளும் ஒரு அம்சமாகும். எதிலும் பொறுப்பான மக்கள் நல அரசு ஏற்றுக் கொள்ள வேண்டிய இன்றியமையாத கடமைகளாகும் இவைகள். மக்கள் நல அரசை, ஆட்சியை நாம் நடத்துகிறோம் என்றுதான் இந்தியாவில் கூறிவருகிறோம். மக்கள் நல அரசு என்ற வார்த்தைக்கு உண்மையான விசு

செங்கற்பட்டு மாவட்டம் காட்டுப்பாக்கத்தில் அரிசனவீட்டு வசதிக் கழகத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளை திறந்து வைத்து மத்திய அமைச்சர் ஜகஜீவன்ராம் அவர்கள் ஆற்றிய உரை

வாசத்துடன் தமிழக அரசு பணியாற்றி வருவதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

வாடகை எதுவும் இல்லாமல் இலவசமாக இந்த வீடுகளை அரிசனச் சகோதரர்களுக்கு வழங்குவது என்று தமிழக முதலமைச்சர் முடிவு செய்திருப்பது, அவருடைய சீரிய ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். தமிழ்நாடு காட்டியுள்ள இந்தச் சிறந்த முன் உதாரணத்தை மற்ற மாநிலங்களும் பின்பற்ற முயலும் என்று நம்புவோமாக.

இங்கு திடீரென விளக்குகள் அணைந்து விட்டன. ஆனால் இருள் சூழ்ந்த நேரத்திலும்கூட ஆக்கப்பணிகள் தடையில்லாமல் நடந்து கொண்டுதான் இருக்க வேண்டும். இருள் சூழ்ந்த போதிலும் சரி, ஒளிமயமான நேரத்திலும் சரி, ஏழை மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பணி தொடர்ந்து ஆர்வத்துடன் நடைபெற்றுத்தான் ஆக வேண்டும்.

மழை பொய்த்துவிட்ட காரணத்தால் தமிழகத்தில் பெரும்பகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. சாதாரணமாக நல்ல பருவ மழை இருக்கும்போது இந்த மாநிலத்தில் கிடைக்கும் உணவு உற்பத்தி இந்த ஆண்டு கிடைக்காது என்பது உண்மைதான் இன்று இந்திய நாடு முழுவதும் உணவு நிலைமை சிரமமாகத்தான் இருக்கிறது. ஆனாலும் சென்ற இரண்டு மாதங்களுக்கு முன்பு நாட்டில் இருந்த கவலைக்கு இடமான ஒரு சூழ்நிலை இப்போது பெருமளவுக்கு மாறி கட்டுப்படுத்தப்பட்டு விட்டது.

இந்திய நாட்டின் பெரும் பகுதிகளில் அண்மையில் பெய்த மழை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பெரும் நம்பிக்கையையும், உற்சாகத்தையும் ஊட்டியுள்ளது. இரண்டு நாட்களுக்கு முன்புகூட வட இந்தியாவில் பரவலாக நல்ல மழை பெய்துள்ளது. ஆகவே 'ராபி' அறுவடையில் நல்ல கணிசமான மகசூல் கிடைக்கும் என்பது உறுதியாகிவிட்டது.



உணவில் அரசியலுக்கு இடமே இல்லை. ஒரு தனி மனிதனுடைய அரசியல் கருத்துக்களும், கொள்கைகளும், எதுவாக இருந்தாலும், அவன் உயிர் வாழ அவனுக்கு உணவு தேவை. ஆகவே தமிழ்நாட்டின் நியாயமான கோரிக்கைகளையும், தேவைகளையும் நிறைவு செய்வதற்கு என்னால் இயன்ற அனைத்தையும் நான் செய்ய முயலுவேன்.

நான் வயதில் முதியவன் என்ற முறையில் உங்கள் முதலமைச்சர் கருணாநிதி அவர்களுக்கு ஆசி கூற எனக்கு அருகதை உண்டு. திடமான உடலும், அமைதியான மனமும் பெற்று மக்களுக்கு நீண்ட காலம் சிறந்த தொண்டாற்ற வேண்டும் என்று நான் அவரை மனமார வாழ்த்துகிறேன்.

தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல; இந்திய நாட்டு மக்களுக்கும் அவர் தொண்டாற்ற வேண்டும். ஏனென்றால் தமிழ்நாடும் இந்தியாவின் ஒரு பகுதிதானே! தமிழ்நாடு செழித்து ஓங்கினால், இந்தியாவும் அந்த அளவுக்குச் செழித்து ஓங்கும். ஆகவே மீண்டும் அவர் துணிவுடனும், இலட்சிய ஆர்வத்துடனும் தமிழ்நாட்டிற்குத் தொண்டாற்ற வேண்டும் என்று நான் மனமார வாழ்த்துகின்றேன்.



குமார்

முதல்வர் கலைஞர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது :

தமிழக அரசின் சார்பில் தீட்டப்பட்டுள்ள — இரண்டு ஆண்டுக் காலத்தில் இலட்சம் அரிசன வீடுகள் என்ற சீரிய திட்டத்தின் அடிப்படையில் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்ற பத்தாயிரம் வீடுகளில் நூறு வீடுகளுக்கான திறப்பு விழாவினை பாபுஜி ஜெகசீவன்ராம் அவர்கள் இங்கே நிகழ்த்தி வைத்திருக்கிறார்கள், அவர் இந்த இல்லங்களைத் திறந்து வைத்திருப்பது அனைவரும் பெருமைப்பட வேண்டிய காரியமாகும். ஏனென்றால் இன்றைக்கு இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்களுடைய விடிவெள்ளியாகவும், நம்பிக்கை நட்சத்திரமாகவும் விளங்கக் கூடிய தலைவர் பாபுஜி அவர்களாகும்.

கடந்த திங்கள் தஞ்சை மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான வீடுகளைத் திறந்து வைக்கும் நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டபோது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியைவிட, உணர்ச்சியைவிட மன எழுச்சியை விட, இரண்டு மூன்று மடங்கு அதிகமாக இப்போது ஏற்படக்காரணம், யார் நம்முடைய காரியங்களை நல்ல உள்ளத்தோடு பாராட்டுவாரோ, யார் நம்முடைய செயல்கள் அப்பழுக்கற்றவை யென்று கருதுவாரோ, யார் நம்முடைய செயல்களால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விமோசனம் தேடப்படுகிறது என்று உறுதியாக எண்ணுவாரோ, அப்படிப்பட்ட ஒரு பெரியவர் இந்த விழாவில் கலந்து கொள்கிறார் என்பதுதான்.

அவர் தமிழகத்திற்கு வந்திருக்கின்ற இந்த நேரம் மிக நெருக்கடியான நேரம். எப்படிப்பட்ட நேரம் என்பதை, இங்கு விளக்குகள் எல்லாம் அணைந்து இருளாகி, இப்படிப்பட்ட நேரத்தில்தான் நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்பதை அவருக்குக் காட்டிக் கொண்டிருக்கிறது. ஒரு வேளை அவர் பேச ஆரம்பிப்பதற்கு முன்பு விளக்குகள் வந்து விடலாம். அது அவரால் வந்தது, அல்லது அவர் அளிக்கப் போகிற உறுதிமொழிகளால் வந்தது என்றுதான் நாமெல்லாம் எண்ணிக் கொள்ள வேண்டும்.

அமைச்சர் மாதவன் மிக உருக்கமாகத் தமிழகத்தின் தேவைகளை எடுத்துச் சொன்னார். பாபுஜி அவர்களே, எங்களுடைய தமிழகத்தின் உணவு நிலைமை மன்னை நாராயணசாமியைப் போல இருந்து இன்றைக்கு மாதவனைப்போல சுருங்கியிருக்கிறது. மத்திய அரசின் உணவு நிலைமை தங்களைப் போல இருக்கிறது. நண்பர் மாதவன் அவர்கள் இந்த மாநிலத்திற்கு உணவு வேண்டுமென்று தங்களிடம் மாதவம் புரிந்த காட்சியைக் கண்டீர்கள். அவர் இங்கே மாத்திரமல்ல, டெல்லிக்கும் வந்து தமிழகத்தின் தேவைகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டு வந்திருக்கிறார்.

தாங்களும் தமிழகத்திற்கு எந்தவிதமான ஆபத்தும் வராமல், இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற உணவு நெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்கு இயன்ற அளவு உதவி செய்வதாக வாக்களித்திருக்கிறீர்கள். தங்களுடைய உறுதிமொழியில் எங்களுக்கு நிச்சயமாக நம்பிக்கை உண்டு.

இப்போது தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிற வறட்சி, மழையில்லாத கொடுமை, நூறு ஆண்டுக் காலமாகத் தமிழகச் சரித்திரத்தில் இல்லாத நிகழ்ச்சியாகும். 35 சதவிகித மழைதான் இந்த ஆண்டு கிடைத்தது. இதையெல்லாம் நீங்கள் நன்கறிவீர்கள். விரிவாகச் சொல்லித்தான் உங்களிடம் உதவிகளைக் கேட்க வேண்டுமென்பதில்லை.

தமிழகத்தில் இருக்கிற இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்காக — பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக நடைபெறுகிற அரசு, பிற்படுத்தப்பட்டவர்களுக்காக, பிற்படுத்தப்பட்டவர்களால், உருவாக்கப்பட்டு, நடைபெறுகின்ற அரசின்பால் நீங்கள் நிறைந்த நம்பிக்கை வைத்திருக்கிறீர்கள். அதனால்தான் கடந்த பல ஆண்டு காலமாக கவனிக்கப்படாமல் இருந்த தாழ்த்தப்பட்ட மக்களுடைய முறையீடுகள் அவர்கள் சொன்னாலும், சொல்லாவிட்டாலும், வலிய கவனிக்கப்பட வேண்டும் என்கிற முடிவு மேற்கொள்ளப்பட்டு, தமிழக அரசின் சார்பில் இதற்கென ஒரு தனி வாரியம் அமைக்கப்பட்டு 10 இலட்சம் வீடுகள் அரிசன மக்களுக்காகக் கட்டப்பட வேண்டுமென்று திட்டத்தை வகுத்துக்கொண்டு வேலையைத் தொடங்கியிருக்கிறோம். அதிலே நான் மகிழ்ச்சி அடையத்தக்க வண்ணம், இந்த அரிசன வீட்டு வசதிக் கழகத்தினர், அதனுடைய தலைவர், ஏனைய அதிகாரிகள், அதனுடைய அமைச்சர், அரிசன நலத்துறை இலாகா, ஆங்காங்கு இருக்கிற மாவட்ட அதிகாரிகள் அத்தனை பேருடைய ஒத்துழைப்போடும் பத்தாயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. அடுத்து வருகிற



பிப்ரவரி மாதம் முடிவதற்குள் மேலும் ஐந்தாயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த வீடுகளில் குடியிருக்கிற அரிசன சகோதரர்களுக்கே இந்த வீடுகள் உடைமை என்ற வகையில் வாடகை எதுவும் வசூலிக்காமல், அவர்கள் குடியிருக்க ஒரு திட்டத்தை இந்தியாவிலேயே தமிழக அரசு தான் முதன் முதலாகச் செய்திருக்கிறது.

இந்தியாவின் பொருளாதார நிலைமையை, விலைவாசி உயர்வை, மக்களுடைய கஷ்டங்களை அனைவரும் அறிவார்கள். தமிழக அரசு விலைவாசிகளைக் குறைக்க அதிகாரத்தைப் பெற்றிராவிட்டாலும், பல முனைகளில் விலைவாசிக் கொடுமையிலிருந்து மக்களை ஓரளவு விடுவிக்க இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிறது.

சென்னையில் - திருச்சியில்- மதுரையில்-கோவையில் சேலத்தில், குடிசையில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்காக காற்றோட்டமும், தூய்மையும் நிறைந்த வீடுகளை, குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் கட்டித் தந்திருக்கிறோம். மிகக் குறைந்த பட்சம் அந்த வீடுகளுக்கு 70. ரூ. வாடகையாக வசூலிக்க வேண்டுமென்றாலும் பதினைந்து ரூபாய்தான் தமிழக அரசு வசூலிக்கிறது.

இங்கே கட்டித் தரப்பட்டிருக்கிற வீடுகளைப்போல உள்ளவைகளுக்குக்கூட கிராமங்களில் பத்து ரூபாய் அளவிற்குத் தர வேண்டும் என்றாலும்கூட, இனமாக வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள்வீட்டு வாடகையாகச் செலுத்தப்பட வேண்டிய பணம் அவர்களுக்கு மீதப்படுகிறது. அந்த வகையில் இன்றிருக்கிற பொருளாதார கஷ்டங்களை, விலைவாசி உயர்வைச் சந்திக்கத் தமிழக அரசு உதவியாக இருக்கிறது.

இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை நாங்கள் நிறைவேற்ற தங்களைப் போன்ற நல்ல உள்ளம் படைத்தவர்களுடைய வாழ்த்து தேவை என்பதை முன்னால் பேசிய அமைச்சர்கள் தெரிவித்தார்கள்.

நாங்கள் கேட்டு நீங்கள் தருவதல்ல அந்த வாழ்த்து. நீங்கள் யாருக்கும் அஞ்சாமல், எதற்கும் பயப்படாமல், நல்லவைகளைப் பாராட்டக்கூடிய நெஞ்சுரம் படைத்தவர் என்ற வகையில் நாங்கள் உங்களிடம் வைத்திருக்கிற அபிமானம் எந்தச் சூழ்நிலையிலும் என்றைக்கும் மாறாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய வேளாண்மைத்துறை இணை அமைச்சர் ஏ.பி. உஷிண்டே 20-1-75 அன்று தலைமைச் செயலகத்தில் முதல்வர் கலைஞர் அவர்களைச் சந்தித்து, தமிழகத்தில் நிலவும் வறட்சி நிலைபற்றி விவாதித்தார். உணவு அமைச்சர் மாதவன், வருவாய்த் துறை அமைச்சர் சாதிக்பாட்சா, வேளாண்மைத்துறை அமைச்சர் சி.பா.ஆதித்தனார் ஆகியோரும் மற்றும் தமிழக அரசு தலைமைச் செயலாளரும், மாநில அரசு, மத்திய அரசு உயர்நிலை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் வறட்சிக்கு உள்ளாகியுள்ள பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து திரும்பிய மத்திய அமைச்சர் உஷிண்டே அவர்கள் 23-1-75 அன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசும்பொழுது 'தமிழக அரசு, வறட்சி நிவாரணப்பணிகளைச் சிறப்பாகச் செய்கிறது' என்று பாராட்டினார்.

நன்செய் தரிசுக்கு ஏற்ற நல்ல பருத்தி!



தஞ்சை மாவட்டத்தில் நன்செய்த் தரிசு நிலங்களில் 'பி. ஆர்.எஸ். 72' பயிரிடுவது போல, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலும் சம்பா நெல் அறுவடைக்குப் பிறகு, தண்ணீர் வசதியுள்ள இடங்களில், நன்செய்த் தரிசில் குறுகிய காலப் பருத்தி பயிரிட்டால், உழவர் பெருமக்களுக்கு அதிக வருவாயும், பலருக்கு வேலை வாய்ப்பும் கிடைப்பதுடன், நம் நாட்டில் நிலவும் பருத்தி பற்றாக் குறையும் ஓரளவு நீங்கி விடும்! மேற்கூறிய 4 மாவட்டங்களிலும் நெல் தரிசு நிலங்களில் இறவையாகப் பயிரிட 'எம்.சி.யு. 7' என்னும் பருத்தி மிகவும் ஏற்றது.

எம்.சி.யு. 7 பருத்தி பயிரிட்டால் ஏக்கருக்கு சராசரியாக ரூபாய் 1,250 வருவாய் பெறலாம். செலவு ரூபாய் 600 போக, ஏக்கருக்கு ரூபாய் 650 நிகர இலாபம் கிடைக்கக் கூடும்! 'எம்.சி.யு. 7' பருத்தி பயிரிடுவதன் மூலம், தமிழ் நாட்டில் ஏறத்தாழ 18,500 பேல்கள் நீண்ட இழைப்பஞ்சு உற்பத்தி செய்ய முடியும் என்றும், அதனால் தமிழ்நாட்டு உழவர் பெருமக்களுக்கு மொத்தம் 50 இலட்சம் ரூபாய் அதிக வருவாய் கிடைக்கும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே குறைந்த வயதும், நீண்ட இழையும், அதிக மகசூலும், அதிக இலாபமும் தரக்கூடிய 'எம்.சி.யு. 7' பருத்தியை நீர்ப்பாசன வசதியுள்ள நெல் தரிசு நிலங்களில் கீழ்க்கண்டவாறு பயிரிட்டுப் பயன் அடையுமாறு செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்ட உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

எம்.சி.யு.7 சாகுபடிக் குறிப்புகள்

பருவம்: *பிப்ரவரி மாதத்தில் (மாசிப்பட்டம்) விதைக்க வேண்டும்.*

வயது: *135 நாட்கள்.*

விதையளவு: *10 கிலோ.*

விதையுடன் மருந்து கலத்தல்: *ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' அல்லது 'டீ.எம். டீ. டி' வீதம் கலந்து விதைக்க வேண்டும்.*

நிலம் தயாரித்தல்: *நெல் அறுவடையான பிறகு நிலத்தில் 4 முறை நன்கு உழுது பண்படுத்தவும். பிறகு 60 சென்டி மீட்டர் (2 அடி) இடைவெளியில் பார்கள் அமைத்துக் கொள்ளவும்.*

அடியுரம் இடுதல்: *'கடைசி உழவில் ஏக்கருக்கு 14 கிலோ தழைச்சத்து (70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 31 கிலோ யூரியா), 7 கிலோ மணிச்சத்து (44 கிலோ சூப்பர் பாஸ்பேட்), 7 கிலோ சாம்பல் சத்து (12 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ்) ஆகியவை களை இட வேண்டும். அல்லது பார்களின் சரிவில் விதைகளை நடும் வரிசைக்குக் கீழே 3 அங்குல ஆழத்தில் உரங்களைச் சரிவில் இட்டு மண்ணால் மூடலாம்.*

விதைத்தல்: *பார்களின் ஒரு பக்கச் சரிவில், உரமிட்ட வரிசைக்கு 3 அங்குல உயரத்தில் குழிக்குக் குழி 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளிவிட்டு குழிக்கு 3 விதை வீதம் ஊன்ற வேண்டும்.*

நீர்ப்பாசனம்: *விதை ஊன்றிய உடன் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். விதை ஊன்றிய 4-வது நாளில் முளைநீர் விட வேண்டும். பிறகு 10 நாட்களுக்கு ஒருமுறை வீதம் பூ பூக்கும் வரை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பூப்பூத்த பிறகு ஏழு நாட்களுக்கு ஒரு முறை வீதம் விதைத்த 110 நாட்கள் வரை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பிறகு தண்ணீர் பாய்ச்ச வேண்டிய தில்லை.*

களை எடுத்தல்: *விதைத்த 15-வது 30-வது நாட்களில் கொத்திவிட்டுக் களை எடுக்க வேண்டும்.*

மேல் உரம்: *விதைத்த 30 முதல் 35-வது நாட்களில் 14 கிலோ தழைச்சத்தை (70 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 31 கிலோ யூரியா) மேலுரமாக இட்டு, மண் அணைத்துத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.*

பயிர்ப் பாதுகாப்பு: *விதைத்த 10-வது நாளில் தத்துப் பூச்சிகளின் தாக்குதலைத் தடுக்க டி.டி.டீ. 5 சதத் தூளையும், பி. எச்.சி. 10 சதத்தூளையும் 1:1 என்ற அளவில் கலந்து, அக்கலவையை ஏக்கருக்கு 10 கிலோ வீதம் தூவி விட வேண்டும்.*

விதைத்த 30-வது நாளில் 0.25 சத பாரத்தியான் மருந்துக் கலவையைத் தெளிக்க வேண்டும். விதைத்த 45-வது நாளில் இருந்து 10 முதல் 15 நாட்கள் இடைவெளியில் 2:1 என்ற விகிதத்தில் கலந்த செவின் கந்தகக் கலவையையும், 'மெட்டாசிஸ்ட் கோம்பி' மருந்தையும் மாற்றி மாற்றி 110 நாட்கள் வரை தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளிப்பதால் காய்ப் புழுக்கள், சிவப்பு உண்ணிகள் ஆகியவற்றின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்.

மகசூல்: *ஏக்கருக்குக் குறைந்தது 590 கிலோ பருத்தி கிடைக்கும்.*

ஒரே வழி
புதிய திட்டங்களால் வெற்றிகள் குவிந்தும்
நிறைவை முழுமையாகக் காண முடியவில்லையே !
ஏன்? ஏன்? ஏன்?
இதுபோன்ற வினாக்களுக்கு விடை
பெருகிவரும் மக்கள் தொகையே !
நாடும் நாமும் வாழ ஒரே வழி
குடும்ப நலத்திட்டம்
அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம் !
குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு



வேடந்தாங்கலில் விதவிதமான பறவைகள்!

விண்ணில் சிறகடித்துப் பறக்கும் பறவைகளைப் பார்க்கும்போது யாருக்குத்தான் பரவசம் ஏற்படாது?

பன்னிறப் பறவைகள் சிறுவர்களை மட்டுமல்ல, பெரியவர்களையும் அல்லவா தம்பால் ஈர்க்கின்றன!

இன்று ஆகாயத்தில் வட்டமிடும் விமானம் உருவாவதற்குப் பறவையே மூலகாரணமாய் அமைந்திருக்கிறது என்பதை அறிகிறோம்.

குழந்தையைக் கொஞ்சும்போதுங்கூட கிளியே, மயிலே என்கிறோம். பெண்களை வருணிக்கும் போதும் பறவைகளை உவமையாகக் கூறுகின்றனர் புலவர்கள்.

விலங்குக் காட்சிச் சாலையில் அடைபட்டுக் கிடக்கும் பறவைகளைப் பார்ப்பதைவிட, தன்னிச்சையாகப் பறந்து திரியும் பறவைகளைப் பார்க்கும்போது எத்தனை இன்பமாக இருக்கின்றது!

பறவை இனங்கள் நாட்டுக்கு நாடு வேறுபடுவதைப் பார்க்கிறோம். நம் நாட்டுப் பறவைகளைப் பார்த்துப் பழக்கப்பட்ட நமக்குப் பிறநாட்டுப் பறவைகளைத் திரைப்படங்களிலோ, புத்தகங்களிலோ பார்க்கும்போது புதுமையாக இருக்கிறது. ஆனால், எல்லா நாட்டுப் பறவைகளையும் ஒரே சமயத்தில் நேரில் பார்த்தால் எப்படி இருக்கும்? இது நடக்குமா? என்ற நம் ஆவலை நிறைவேற்றுகின்ற வகையில் 'வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம்' விளங்குகின்றது!

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள வேடந்தாங்கல் மேலைநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை மட்டுமல்ல, உள்ளூர்க்காரர்களையும் வெகுவாகக் கவர்ந்து வருகின்றது. சென்னை நகரிலிருந்து 53 மைல் தொலைவில் உள்ள வேடந்தாங்கலில் பன்னிறப் பறவைகள் வந்து கூடி கலகலவென ஒலிக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக மட்டுமல்ல, நம் வாழ்க்கையிலும் கலகலப்பாக இருக்க வேண்டும் என்பதனையும் உணர்த்துகின்றது.

வேடந்தாங்கலுக்குச் செல்கிறோம். அங்கே வந்து கூடும் அழகிய பறவைகளைக் காண்கிறோம். அவற்றில்தான் எத்தனை வகை!

நத்தைக் குத்தி, நாரை, கங்கணம், நீர்க்காக்கை, வெண்கொக்கு, மத்தாளிக் கொக்கு, பாம்புத்தாரா, இளம் வக்கா, வயது வந்த வக்கா, துடுப்பு மூக்கு நாரை, நாமக்கோழி, முக்குளிப்பான், சிறவி இப்படிப் பல்வேறு வகையான பறவைகள் இங்கே வந்து கூடு கட்டிக் கூடி வாழ்கின்றன.

வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் அழகிய நீர்ப் பரப்புள்ள ஏரியாகும். இந்த ஏரியில் அமிழ்ந்து மேல் நோக்கி வளர்ந்துள்ள மரக்கிளைகளில் வண்ணப் பறவைகள் வந்து தங்கிய வண்ணமுள்ளன.

வேடந்தாங்கலில் சுமார் 30 ஏக்கர் பரப்புள்ள தோப்புகள் உள்ளன. கடந்த இருநூறு ஆண்டுகட்கு முன்பிருந்தே இங்குப் பறவைகள் கூடு கட்டி இனம்பெருக்கி வருவதாகக் கூறுகின்றனர். ஏரியின் நடுவே 500-க்கு மேற்பட்ட கடப்ப மரங்கள் அடங்கிய தோப்பு உள்ளது. இவற்றின் கிளைகளில் வந்துதான் இந்த நீர்ப் பறவைகள் தங்குகின்றன.

வேடந்தாங்கலைப் பற்றிய விவரமான வரலாற்றுக் குறிப்புகள் எதுவும் நமக்குக் கிடைக்கவில்லை என்றாலும், கி.பி. 1798 ஆம் ஆண்டில் இங்கே ஏரி நடுவில் ஒரு கடப்ப மரத் தோப்பு இருந்தது என்றும், அதில் நீர்ப்பறவைகள் வந்து தங்கிக் கூடு கட்டியது என்றும், இப்பறவைகளை ஊர்மக்கள் பாதுகாத்து வந்தார்கள் என்றும் நாம் அறிகிறோம். இதற்கான சான்றுகள் இருக்கின்றன.

செங்கற்பட்டு மாவட்டத்தின் முதல் மாவட்ட ஆட்சியாளராக நியமிக்கப்பட்டவர் லயனல் ப்ளேஸ் என்பவராவர். மதுராந்தகத்திலுள்ள பெரிய





ஏரியைக் கட்டிய பெருமை இவரையே சாரும். இவர் வேடந்தாங்கல் கிராமத்தாரின் விருப்பப்படி, கடப்பந் தோப்பில் கூடுகட்டும் பறவைகளைப் பாதுகாக்கும் உரிமை இந்த ஊர் மக்களுக்கு உண்டு எனும் பத்திரம் ஒன்றை வழங்கினார். ஆனால் இந்தப் பத்திரம் எப்படியோ தொலைந்துவிட்டது. பிறகு கிராம மக்கள் காணாமல் போன பத்திரத்தைப் புதுப்பித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். செங்கற்பட்டு மாவட்ட உதவி மாஜிஸ்திரேட் ஜி.பி. டாட் என்பவர், 1858 ஆம் ஆண்டு சனவரி 7 ஆம் நாளன்று ஒரு பத்திரத்தை இம்மக்களுக்கு வழங்கினார். அந்தப் பத்திரம்தான் இது:

''கருங்குழி தாலூகாவைச் சார்ந்த வேடந்தாங்கல் கிராமத்தாருக்குக் கொடுத்த கவுல் என்னவென்றால்,

''உங்கள் கிராமமாகிய மேற்குறித்த வேடந்தாங்கல் ஏரியிலிருக்கின்ற கடப்ப மரங்களில் நானாவித பட்சி சாதிகள் அனாதியாய் வாசஞ் செய்வதாயும் அவைகளை ஒருவருஞ் சுடாமலும் பிடியாமலுமிருக்கும் பொருட்டு முன்னாலேயே மேஸ்தா ப்ளேஸ் துரையவர்கள் கவுல் கொடுத்ததாயும் அது கை சோர்ந்து போனதாயும் அதற்குப் பதில் வேறு கவுல் கொடுக்க வேண்டுமென்றும் நீங்கள் நம்மைக் கேட்டுக் கொண்டமையால் அந்தப்படி இதை உங்களுக்குக் கொடுக்கலாயிற்று.

''யாராவது துரைகளாவது வேட்டைக்காரர் முதலியவர்கள் மேற்குறித்த உத்தரவுக்கு விரோதமாய் மேற்குறித்த ஏரி வந்து மேற்குறித்த பட்சிகளைச் சுட அல்லது பிடிக்க எத்தனப்படுவார்களேயாகில், அவர்களுக்கு இதைக் காண்பித்து அப்படிச் செய்ய ஒட்டாமல் தடுத்துப் போட வேண்டியது அறியவும்.''

இதற்குப் பிறகு 1836-ஆம் ஆண்டில் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியாளர் ஏ.எச்.ஏ. டாட் வெளியிட்ட அறிக்கையொன்றில், வேடந்தாங்கல் நூறாண்டுகளுக்கு மேலாகவே பறவைகள் வந்து தங்குமிடமாக இருந்து வருகிறது. இதனை அரசினர், பறவைகள் சரணாலயமாக விளம்பரப்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

வேடந்தாங்கலில் மட்டும் பறவைகள் வருவதேன்?

பறவைகளிடம் ஒரு இயல்பு உண்டு. ஓரிடத்தில் அவை கூடு கட்டினால் அதே இடத்தில் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து இனம் பெருக்கும். இந்தப் பழக்கத்தின் அடிப்படையில்தான் அவை இந்த ஏரிக்கு வருகின்றன. இதே ஏரியில் அவற்றுக்கு ஏதேனும் இடையூறு ஏற்பட்டால் உடனே அவை வேறிடத்தை நாடும் இயல்புடையன. நெடுங்கால



மாய் இந்த நீர்ப்பரப்பு பறவைகளுக்கு உகந்த இடமாகவும், தொல்லை இல்லாத நல்ல இடமாகவும், அதே சமயத்தில் கிராம மக்கள் இவற்றுக்குப் பாதுகாப்பாக இருப்பதாலும் தொலை தூரங்களிலுள்ள பறவைகள் இதனை நாடி வந்து கொஞ்சிக் குலவுகின்றன.

பறவைகள் இங்கே வந்து தங்குவதற்கு இன்னொரு காரணமும் உண்டு.

பறவைகள் உயிர் வாழ்வதற்குத் தேவையான உணவு வகைகள் இங்கே நிறைய கிடைக்கின்றன. மீன்கள், பூச்சிகள், தவளைக்குட்டிகள், நத்தைகள் முதலியவை பறவைகளின் உணவுகளாகும். ஏரியைச் சுற்றியுள்ள சதுப்பு நிலங்களில் இந்த உணவுப் பொருள்கள் போதுமான அளவில் கிடைக்கின்றன. மழைக் காலங்களில் ஏற்படும் குட்டை குளங்களில் தவளை போன்ற உயிர்கள் தோன்றும். பிறகு கோடை காலத்தில் இவை வற்றியதும் பறவைகளுக்குப் பஞ்சமில்லாமல் உணவு கிடைக்கிறது.

வேடந்தாங்கலில் பறவைகள் எப்போது வருகின்றன?

ஆவணித் திங்களில் அடைமழை இருந்தால், புரட்டாசிக்கு முன்போ இவை வரத் தொடங்குகின்றன. வந்ததுமே அல்லது வந்த சில நாட்களுக்குப் பிறகோ இவை கூடுகட்ட ஆரம்பிக்கின்றன. ஒவ்வொரு ஆண்டிலும் நவம்பர் முதல் மார்ச் முடிய இங்கே பறவைகளின் பெருங்கூட்டத்தைக் கண்டு மகிழலாம். வேடந்தாங்கல் கடப்பமரத் தோப்பில் சுமார் ஆறுயிரத்துக்கு மேற்பட்ட பறவைகள் இருக்கின்றன என்று மதிப்பிடுகிறார்கள்.

'உயிர்களிடத்தில் அன்பு வேணும்' என்ற பாரதியின் வாக்கை உணர்த்துகின்ற வகையில், வேடந்தாங்கல் பறவைகள் பார்த்து மகிழ்வதற்கு மட்டுமே. அவற்றைப் பிடிக்கவோ, சுடவோ கூடாது என்ற கண்டிப்பான உத்தரவை அரசு பிறப்பித்திருக்கிறது.

இவ்வாறு இங்கு வரும் பறவையினங்களைப் பாதுகாத்து வருவதால் எத்தனை நன்மைகள் நமக்குக் கிடைக்கின்றன!

வேடந்தாங்கலிலுள்ள ஏரியின் தண்ணீர் சுற்றுப்புறமுள்ள வயல்களுக்குப் பாய்ச்சப்படுகிறது. அந்த நீரில் பறவைகளின் எச்சமும் கலந்திருப்பதால் இது பயிர்களுக்குச் சிறந்த உரமாகப் பயன்படுகிறது.

இங்குள்ள பறவையினங்களைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்வோமா?

நீர்க்காகம் — இது வாத்து போன்ற கருமையினைக் கொண்டிருக்கும். நீரில் மூழ்கி மீனை விட விரைவாக நீந்தும் தன்மையுடையது.

நீர்க்காகத்தின் அளவில் காணப்படுவது, பாம்புத்தாராவாகும். இது நீரில் மூழ்கி நீந்தி இரை பிடிப்பதில் இதற்கு நிகர் இதுவே! நீந்தும்போது பாம்புபோல் தென்படுவதால் இதற்கு இப்பெயர் வந்தது இது சிறகடிக்காமல் வானத்தில் வட்டமிடும்.

வெண் கொக்கு—வெண்மை பளிச்சிடும் வண்ணமுடையது. அழகிய சிறகை விரித்துப் பறக்கும் காட்சி நம் மனத்தைக் கவரும். ஆழமற்ற இடங்களில் இது மெல்ல நடந்து சென்று மீனைத் தேடிப் பிடிக்கும்..!

மஞ்சள் நிற அலகுள்ள பறவையே, உண்ணிக் கொக்கு. இதை 'மாட்டுக் கொக்கு' என்றும் அழைப்பதுண்டு. மாட்டு மந்தைகளின் பின்னே இவை செல்வதால் இதற்கு இப்பெயர் வந்தது போலும்! இதன் முக்கிய உணவு பூச்சிகளே.

மடையான் — கரையோரங்களில் இது ஆடாமல் அசையாமல் காத்திருக்கும். யார் வரவை நோக்கி? திருவாளர் மீன் வரவைத்தான்! இது மண் நிறத்தை ஒத்திருப்பதால் சில சமயங்களில் இது இருப்பது கூட நமக்குத் தெரியாது. திடீரென வெண்சிறகை விரித்துப் பறக்கும்போதுதான் இதனை நாம் அடையாளம் கண்டு கொள்ள முடியும்!

இருள் என்றால் இதற்கு ரொம்பவும் பிடிக்கும். ஆம். 'வக்கா' எனும் பறவை அப்போதுதான் கூட்டிலிருந்து வெளிவருமாம். இதற்கு அழகிய கொண்டைகூட உண்டு.

நரையான் — இதுபறக்கும் போது கழுத்தை மடக்கித் தலையை முதுகுப்புறமாக இழுத்துக் கொள்ளும். இதை 'நாரையான்' என்றும் வழங்குவர்.

நாரை இனங்களில் மிகச் சிறியவை. நத்தைக் குத்தி நாரைகள். நத்தையே இதன் முக்கிய உணவு. இவை வானில் மிக உயரத்தில் பறக்கும்.

துடுப்பு மூக்கு நாரை-இதற்கு 'மண்வெட்டுவாயன்' என்ற திருநாமமும் உண்டு. இலங்கையில் இதனைச் 'சப்பைச் சொண்டான்' என்றழைக்கின்றனர்.

இரவில் வெளிவரும் பறவைகளில் கங்கணமும் ஒன்று. இதை 'அரிவாள் மூக்கன்' என்கின்றனர்.

இவ்வாறு சிறிய, பெரிய, பலவண்ணப் பறவை இனங்கள் எல்லாம் ஒரு சேர, ஒரே இடத்தில் வந்து தங்குவதைப் பார்க்கும்போது, வேடந்தாங்கல் ஏதோ பறவைகள் தங்கும் இடமாக மட்டுமல்லாது, ஒருமைப் பாட்டை நமக்கெல்லாம் உணர்த்தும் ஓர் உன்னதமான இடமாகவும் விளங்கி வருகின்றது எனலாம். இவையன்றிப் பன்மொழி பேசும் மக்களும், பல இனத்தவரும் ஒன்றுகூடும் இடமாகவும் அல்லவா வேடந்தாங்கல் விளங்குகின்றது !

—பி.வி.ஜி

காவல் தெய்வம்

திருமதி கஸ்தூரிராஜ்

அது ஓர் ஆண்கள் கல்லூரி. வகுப்புகள் முடிந்து மணி அடித்தது. மாணவர் குழாம் கலைந்து வெளியே வந்த வண்ணம் இருந்தது. மாணவர்களுக்கே உரிய ஒரு கலகலப்பு—வாலிபத்திற்கே உரிய ஒரு துறுதுறுப்பு— இளைய மனங்களுக்கே உரிய ஒரு சுறுசுறுப்பு—அந்தக் கலைந்த கூட்டங்களில் தெரிந்தது.

''டேய் இன்று எங்கே போகலாம்'' என்றான் ஹிப்பி கிராப்.

'' 'காஸினோ'வில் நல்ல படம் ஒன்று வந்திருக்கிறது. போகலாமே'' என்றான் சைட் பர்ன்ஸ்.

'' 'ஏ' சர்ட்டிபிகேட் படம் என்றால்தான் நான் வருவேன்'' என்றான் பெல் பாட்டம்.

''அப்ஸல்யூட்லி கரெக்ட். ஐ அக்ரீ வித் யூ'' என்றான் காவிச் சட்டை மொட்டைச் சாமியார்.

''டேய்! அவன நல்ல படம் என்று சொன்னாலே, அது 'ஏ' சர்ட்டிபிகேட் படமாகத்தான் இருக்கும்'' என்றான் தாடி மீசை.

கடைசியில் அந்த மாணவர் குழாம்'காஸினோ'வுக்கே செல்ல முடிவு செய்தது.

''டேய்! 'சீக்கா' ஒன்றுமே சொல்ல வில்லையே'' என்றான் ஒருவன். சீ. கார்த்தி என்ற நல்ல தமிழ்ப் பெயரைத்தான் சுருக்கி அவன் 'சீக்கா' என்றது.

''அதுதானே! ஏண்டா 'சீக்கா' நீ வரப் போகிறாயா இல்லையா?''

கார்த்தி ஒன்றுமே பேச வில்லை.

''டேய்! அவன் 'சீக்கா' இல்லேடா! சரியான 'புண்ணுக்கு' என்றான் மற்றொருவன். எல்லோரும் 'கொல்'லென்று சிரித்தனர்.

''அதான் சாக்கென்று அவன் மனத்தை நீ புண்ணுக்கு'' என்றான் இன்னொருவன். இதற்கும் அவர்கள் சிரித்தனர்.

'பின்னே என்னடா! ஆஃப்டர் ஆல் ஒரு சினிமாவுக்குக் கம்பெனி கொடுக்க முடியவில்லை யென்றால் என்னடா ஃபிரண்ட்ஷிப் வேண்டிக் கிடக்கு''.

''நான் என்ன செய்வேன்.? என்னிடம் காசு இல்லை'' கார்த்தியின் தொண்டைக்குள்ளிருந்து வார்த்தைகள் வந்தன.

''காஸினோவுக்குப் போகலாம் வா என்றால் காசு 'நோ' என்கிறானே?' என்றான் ஒருவன். மறுபடியும் 'குபீர்' சிரிப்பு எழுந்தது.

''அவனை விட்டுடுங்கடா. மனசு சரியில்லை போலிருக்கு'' என்றான் காவிச் சட்டை.

"அவனுக்குக் காவிச் சட்டை தான் பொருத்தம்—கழற்றிக் கொடுத்து விட்டு வாடா'' என்றான் பெல்ஸ். இதற்கும் அவர்கள் சிரித்தனர். சிரித்துக்கொண்டே அவர்கள் பிரிந்தனர் 'காஸினோ'வுக்கு.

கார்த்தி குனிந்த தலையோடு வீடு நோக்கி நடந்தான். நண்பர்கள் 'சுருக், சுருக்' என்று சூடு போட்டது போல் கேட்ட போது ஏதாவது சமாதானமாவது அவன் சொல்லியிருக்கலாம். எதைச் சொல்லுவான்? அவன் தந்தை அவனுக்கு 'பாக்கெட் மணி' கொடுப்பதில்லை 'என்பதைச் சொல்ல முடியுமா? அல்லது ''பாக்கெட் மணி'' கொடுக்குமளவுக்கு அவரிடம் 'வசதி' இல்லை என்பதைச் சொல்ல முடியுமா? அவனுக்குப் புரிந்த வரை நண்பர்களிடம் 'சீக்கா' என்றோ 'புண்ணுக்கு' என்றோ பெயரெடுத்துக் கொண்டு அவர்களின் கேலிக்கும் கிண்டலுக்கும் மையமாக இருந்து விட்டுப் போவதுதான் ஒரே வழி.

அது ஒரு பெண்கள் உயர் நிலைப் பள்ளி. இன்னும் முதல் மணி அடிக்கவில்லை. புல்வெளியில் மாணவிகள் அங்குமிங்குமாக நடமாடிக் கொண்டிருந்த காட்சி, பச்சைக் கம்பளத்தில் வண்ணத்துப் பூச்சிகள் சிறகடித்துப் பறந்து கொண்டிருப்பதைப் போன்று இருந்தது.

ஒரு மரத்தடியில் நான்கு, ஐந்து மாணவிகள் அமர்ந்து இருந்தனர்.

''டீ கமலா! இந்தத் தாவணி எங்கே வாங்கினாய்?'' என்றாள் ஒருத்தி.

''இது இங்கே கிடைக்கிறதில்லேடீ. எங்க சித்தப்பா போன மாதம் சிங்கப்பூருக்குப் போயிருந்தபோது எனக்காக வாங்கி வந்தார்'' என்றாள் அடுத்தவள்.

அவர்கள் பேச்சு ஒவ்வொருவரின் ஆடைகளிலும் ஏறி இறங்கி 'தமிழ்ச் செல்வி'யிடம் வந்து நின்றது.

''ஏண்டி செல்வி! நீ ஏன் மாடர்னாக' உடை உடுத்துவதில்லை? உன்னிடம் இல்லையா? அல்லது உனக்குப் பிடிக்காதா? தமிழ்ச் செல்விக்குக் கண்களில் நீர் முட்டியது. அடக்கிக் கொண்டாள். அந்தக் கேள்விக்குப் பதில். அவள் எப்படிச் சொல்வாள்? அழகான ஆடைகள் அவளிடம் இல்லை என்பதைச் சொல்வாளா? அல்லது உயர்ந்த விலையில் ஆடைகள் வாங்கித் தர அவள் தந்தைக்கு வசதிகள் போதா என்பதைச் சொல்வாளா? அவளால் கண்ணீர் விடத்தான் முடிந்தது. பள்ளி முடிந்ததும் நடைப்பிணமாக வீடு நோக்கி நடந்தான்.

அன்று இரவு.

சீனுவாசன் சாய்வு நாற்காலியில் அமர்ந்து ஏதோ அலுவலக ஏடுகளைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

அவர் மனைவி மங்களம் சமையல் அறையில் பாத்திரங்களை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தாள்.

அவர்களது பிள்ளைகள் கார்த்தியும் செல்வியும் அவரவர் மேசைகளின் முன் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தனர்.

யாரோ சீனுவாசனைத் தேடி வந்தனர்.

அவர் எழுந்து வெளியே சென்றார்.

இதுதான் சமயமென்று செல்வி கார்த்தியிடம், ''அண்ணா ஏன் இன்று நீ 'இஞ்சி தின்றது' போல் இருக்கிறாய்?'' என்றாள் ரகசியமான குரலில்.

''நானும் அதைத்தான் உன்னிடம் கேட்க வேண்டும் என்றிருந்தேன். ஏன் இன்று நீ விளக்கெண்ணெய் குடித்தது போல் இருக்கிறாய்?'' என்றான். கார்த்தி பதிலுக்கு.

''போ அண்ணா! நீ எப்போதும் என்னைப் பதிலுக்குப் பதில் ஏதாவது சொல்லி விடுகிறாய்'' என்று சிணுங்கியவள், அன்று காலை பள்ளியில் நடந்ததை வார்த்தைக்கு வார்த்தை கூறி

விட்டு, ''உடுத்துவதற்குச் சரியான உடை கூட இல்லாமல் என்ன படிப்பு வேண்டிக் கிடக்கு? ஒவ்வொரு நாளும் மற்றப் பெண்களிடையே அவமானப்பட்டதுதான் மிச்சம்'' என்றாள் கண்ணீர் மல்க.

''இங்கும் அதே கதைதான்'' என்று ஆமோதித்த கார்த்தி, அன்று கல்லூரியில் அவன் நண்பர்கள் அவனைக் கேலி செய்ததைக் கூறி ''ஒவ்வொரு பையனும் எப்படி யெல்லாம் செலவு செய்கிறார்கள்? நமக்கு ஒரு நாளைக்காவது ஒரு பத்துப் பைசாவையாவது பாக்கெட்டில் போட்டுக் கொண்டு போக முடிகிறதா?'' என்று சலித்துக் கொண்டான். எத்தனையோ பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு என்னென்ன வசதிகளெல்லாம் செய்து கொடுக்கிறார்கள் என்று எண்ணிப்பார்த்த போது அவனுக்குத் தம் பெற்றோர் மீது வெறுப்புத்தான் உண்டானது.

கதவு 'கிரீச்' என்றது.

சீனுவாசன் திரும்ப உள்ளே வந்தார். பிள்ளைகள் படிக்கத் தொடங்கினர். ஆனால் கார்த்தி படித்த பின் படுக்கைக்குப் போகும் போது எப்படியும் ஒரு நாள் அம்மாவையும் அப்பாவையும் சூடாக நான்கு வார்த்தைகள் கேட்டு விட வேண்டும் என்று முடிவு செய்து கொண்டான்.

நடு இரவு.

கார்த்தியும் செல்வியும் தூங்கிப் போய் விட்டனர்.

மங்களம் கணவனை எழுப்பினாள்.

''ஏங்க! எழுந்திருங்க!''

''என்ன! என்ன!'' என்று பதறிக்கொண்டு எழுந்தார் அவர்.

''ஒன்றுமில்லை, பதறாதீர்கள்! ஒரு முக்கியமான விஷயம் பேச வேண்டும். அதற்காகத் தான் எழுப்பினேன்.''

''அப்படி என்ன தலை போகிற விஷயம்?''.

''வேறொன்றுமில்லை. இன்று நம் பிள்ளைகளின் போக்கைக் கவனித்தீர்களா?''

''இல்லையே! என்ன அவர்களுக்கு ?''

''உங்களுக்கு எந்த மாறுதலும் தெரியவில்லையா?''

''இல்லையே!''

''உங்களுக்கு உங்கள் அலுவலக சம்பந்தப்பட்ட வேலைகளைப் பார்க்கவே நேரமில்லை. இதை எங்கே கவனிக்கப் போகிறீர்கள்?''.

''நான்தான் கவனிக்கவில்லை; நீ யாவது சொல்லேன்!''.

''இன்று கார்த்தியும் செல்வியும் வீட்டிற்கு வரும்போது அவர்கள் முகமே சரியாக இல்லை. என்னிடம் சரியாகக் கூடப் பேசவில்லை. சரியாகச் சாப்பிடவில்லை. உங்களிடம் ஏதாவது பேசினார்களா?''

''இல்லையே!''

''நீங்கள் சற்று நேரம் வெளியே போனீர்கள் அல்லவா? அந்த நேரம் பார்த்து அவர்கள் ஏதோ ரகசியமாகப் பேசிக் கொண்டார்கள்.''

''அப்படியா?''

''அவர்கள் இருவரும் எதையோ மனத்தில் வைத்துக் கொண்டு வருந்திக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தீர்க்க வேண்டியது நம் கடமை. குழந்தைகள் மனம் துன்பப் படக்கூடாது. என்ன சொல்கிறீர்கள்?''.

''சரிதான், காலையில் கேட்டுக் கொள்ளலாம்! நீ தூங்கு.''

சற்று நேரத்தில் இருவரும் தூங்கிப் போனார்கள்.

அடுத்தநாள் காலை. சீனுவாசன் கார்த்தியையும் செல்வியையும் அழைத்தார்.

''நீங்கள் இருவரும் ஏன் நேற்றிலிருந்து கவலையாக இருக்கிறீர்கள்? என்ன விஷயம்? என்னிடம் சொல்லக் கூடாதா?'' என்று பக்குவமாகக் கேட்டார்.

கார்த்தியும் செல்வியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்களே ஒழிய யாரும் எதுவும் பேசவில்லை.

''செல்வி நீயாவது சொல்லேன்!''.

செல்வி தலையைக் குனிந்து கொண்டாள்.

''மங்களம் நீயாவது கேளேன்'' என்றார்.

இதற்குள் கார்த்தி, கனைத்துக் கொண்டான். சீனுவாசனும் மங்களமும் அவன் வாயையே பார்த்துக் கொண்டு நின்றனர்.

''அப்பா! நானும் செல்வியும் படிப்பை நிறுத்தி விடலாம் என்று முடிவு செய்து விட்டோம்.''

''ஏன்!?''

''எங்களால் பள்ளிக்கு சென்று அவமானப் பட முடியவில்லை.''

''அவமானமா? எப்படி?''

''உடுத்துவதற்குச் சரியான உடை கிடையாது. நண்பர்களுடன் வெளியே செல்லலாம் என்றால் பணமும் கொடுப்பதில்லை. ஒவ்வொரு நாளும் நண்பர்களிடையே இருந்து திரும்பி வருவதென்றால் நரகத்திற்குள் சென்று மீள்வதைப் போன்று உள்ளது. நீங்கள் எங்களுக்காக என்ன செய்துவிட்டீர்கள் ?'' 'சோறு போடுகிறோம். படிக்க வைக்கிறோம்!' என்பீர்கள் இதெல்லாம் ஒவ்வொரு சராசரி மனிதனும் செய்யக் கூடியதுதானே? கேட்டால் 'நான் ஒரு என்.ஜி.ஜி.ஓ., எனக்கு வருமானம் அவ்வளவு தானே! அதற்கு மேல் என்ன செய்ய முடியும்?' என்பீர்கள்.



இரவும் பகலும் எங்களைக்கூடக் கவனிக்காமல் உங்கள் அலுவலக வேலைகளையே கவனித்துக் கொண்டு அரசுக்காக உழைக்கிறேன் என்று அல்லும் பகலும் உழைத்து என்ன கண்டீர்கள்.? அந்த அரசு உங்களுக்காக என்ன சாதித்து விட்டது ?'' என்று 'படபட' வென்று பேசி முடித்தான் கார்த்தி.

செல்வி ஒன்றும் பேசவில்லையென்றாலும் அவளுடைய மௌனமும் பார்வையும் கார்த்தியின் கருத்துக்களை ஆமோதித்தன. இதுவரை பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த சீனுவாசன் பேச ஆரம்பித்தார்:

''கார்த்தி, செல்வி, கேளுங்கள். உங்களுக்கு விலையுயர்ந்த ஆடைகள் வாங்கித் தர முடியவில்லை. உண்மைதான். அதிகப்படியான வசதிகளைச் செய்து தர முடியவில்லை. ஒப்புக் கொள்கிறேன். கார்த்தி சொன்னதுபோல் எனக்கு வருமானம் அவ்வளவுதான். அதற்கு மேல் நான் என்ன செய்ய முடியும்? ஆனால் ஒரு சராசரி மனிதன் செய்வதை விட நீங்கள் எங்களுக்கு என்ன செய்து விட்டீர்கள் என்று கேட்டாயல்லவா? அதற்கு என்னால் பதில் சொல்லாமல் இருக்க முடியாது. உங்களுக்குப் பின் தம்பிகளும் தங்கைகளும் பிறந்திருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதைச் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். அப்போது என்னுடைய இந்த வருமானத்தை வைத்துக் கொண்டு உன்னையும் செல்வியையும் பள்ளியிலும் கல்லூரியிலும் படிக்க வைக்க முடியுமா ? இந்த அளவுக்காவது மூன்று வேளையும் வகையாக உணவு கொடுக்க முடியுமா? இந்தக் குடும்பத்தை உங்கள் இருவரோடு நிறுத்திக் கொண்டோமே—அளவான, அழகான குடும்பமாக அமைத்துக்கொண்டோமே—யாருக்காக? உங்களுக்காக! உங்கள் நன்மைக்காக ! நீங்கள் இருவர் மட்டும் உருப்பட்டால் போதும் என்பதற்காக! நாங்கள் உங்களுக்குச் செய்த கடமைகளிலெல்லாம் உயர்ந்தது அதுதான். இந்த அரசு என்ன செய்தது என்று கேட்டாய் அல்லவா? கேள். குடும்பத்தை அளவானதாக—அழகானதாக வைத்துக் கொள்ள அறிவுரை சொன்னதே அரசுதான். ''இரண்டுக்குமேல் எப்போதும் வேண்டாம்'' ''நாமிருவர் நாம் பெறுவதும் இருவர்'' என்று படித்துப் படித்து அரிச்சுவடி கற்கும் குழந்தைக்குச் சொல்வது போலத் திரும்பத் திரும்பச் சொல்லியிருக்காவிடில் நாங்கள் அந்தக் கொள்கையைக் கடைப்பிடித்திருப்போமா?

இன்னும் கேளுங்கள்: இன்று நீங்கள் கற்கும் இலவசக்கல்வி அரசு கொடுத்த சலுகை. உங்கள் எதிர்காலத்திற்காக நம் பணத்தை அரசு சேமிக்கிறது. இன்று குறைந்த வாடகைக்கு நாம் குடியிருக்கும் வீடு அரசு கட்டித்தந்த வீடு. இவை தவிர நான் திடீரென்று இறந்து விடுகிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள்; — ஒரு பேச்சுக்குச் சொல்கிறேன் — என் மனைவிக்குப் பத்தாயிரம் ரூபாய் அரசு கொடுக்கிறது. அது போதாதா உங்களைக் கரை சேர்க்க ?'' என்றார் சீனுவாசன்.

கேட்கக் கேட்கக் கார்த்திக்கும் செல்விக்கும் மனம் என்னவோ போல் ஆனது. தந்தையும் தாயும் அவர்களுக்குத் தெய்வங்களாகத் தோன்றினர். அரசு, அவர்களுக்குப் பாதுகாப்பாக அமைந்த கோவிலாகத் தோன்றியது.

செய்திகள் செய்திகள்

1974 மார்ச் மாத இறுதியில் தமிழ்நாட்டில் 326 பள்ளிகளில் சேமிப்பு வங்கித் திட்டம் இயங்கி வந்தது. தமிழ் நாட்டில் பள்ளி சேமிப்பு வங்கித் திட்டத்தில் 54,750 உறுப்பினர்கள் உள்ளனர். சேமிப்பு நிதி மொத்தம் 2.51 இலட்சம் ரூபாய்.

* * *

ஐந்தாவது திட்ட கால இறுதிக்குள் 14 கோடி டன் கடன் உணவு தானியங்கள் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற குறியளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்குறியளவை அடைய எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட் வேண்டும்.

* * *

அரசு, மற்றும் தனியார் நிறுவனங்களின் கீழ், மொத்தம் 244 மண்வள ஆய்வுக்கூடங்கள் தற்போது இயங்கி வருகின்றன. ஆண்டிற்கு சுமார் [illegible] லட்சம் மாதிரிகளை இந்த ஆய்வுக்கூடங்கள் பரிசோதித்து [illegible]கின்றன.

உலக சுற்றுலா நிறுவனம் 1975-ஆம் ஆண்டை தெற்கு ஆசிய சுற்றுலா ஆண்டாக மேற்கொள்ள தீர்மானித்துள்ளது. இந்த ஆண்டில் 5 இலட்சத்துக்கும் அதிகமான வெளிநாட்டவர்கள் இந்தியாவில் சுற்றுலா செய்ய வருவார்கள்.

கடந்த ஆண்டு ஜனவரி முதல் அக்டோபர் வரையிலான காலத்தில் இந்தியாவில் சுற்றுலா செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் வந்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை, கடந்த ஆண்டு இதே காலத்தில் வந்தவர்களின் எண்ணிக்கையைவிட 2.3 சதவிகிதம் அதிகமாகும்.

1974-75 -ஆம் ஆண்டின் முதல் 7 மாத காலத்தில், இந்தியா 53 ஆயிரத்து 375 டன் புகையிலை ஏற்றுமதி மூலம் 60 கோடியே 80 இலட்சம் ரூபாய்க்கு வெளிச் செலாவணி சம்பாதித்துள்ளது. இதற்கு முந்தைய ஆண்டின் இதே காலத்தில், இந்தியாவிற்கு இந்த ஏற்றுமதி மூலம் 49 ரூபாய் மட்டுமே அந்நிய செலாவணி கிடைத்தது.

பிரிட்டன் தான் அதிக அளவுக்கு அதாவது, 31 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்புக்கு, 24 ஆயிரத்து 195 டன் இந்தியப் புகையிலையை இறக்குமதி செய்து கொண்டது.

பயன்மிகு மக்காச் சோளம் பயிரிடுவீர்!

நாட்டு மக்களுக்குத் தேவையான ஊட்டச் சத்து மிக்க உணவு தானியங்களை உற்பத்தி செய்யவும், கால்நடைகளுக்குத் தேவையான ஊட்டச் சத்து மிக்க தீவனத்தை உற்பத்தி செய்யவும், உழவர் பெருமக்கள் அதிக வருவாய் பெறவும் வீரிய ஒட்டு மக்காச் சோளம் பயிரிடுவதே மிகவும் சிறந்த வழியாகும். வீரிய மக்காச் சோளம் பயிரிட்டால் 100 முதல் 110 நாட்களில் ஒரு ஏக்கரில் இருந்து 3,000 கிலோ தானியமும், 15 முதல் 20 டன் தீவனமும் வெகு எளிதாகப் பெறமுடியும். ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பே, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு உழவர் பெருமகன், வீரிய ஒட்டு மக்காச் சோளம் பயிரிட்டு, ஏக்கருக்கு 4,360 கிலோ தானிய மகசூல் பெற்று, ஏக்கருக்கு ரூபாய் 4,000 நிகர இலாபம் பெற்றுள்ளார்.

ஒரு ஏக்கரில் நெல் பயிரிடுவதை விட, ஒரு ஏக்கரில் வீரிய மக்காச் சோளம் பயிரிடுதல் நாட்டிற்குச் செய்யும் நல்ல தொண்டு ஆகும்! ஏனெனில் ஒரு ஏக்கரில் நன்றாக விளைந்த நெல் எவ்வளவு மக்களுக்கு உணவு அளிக்குமோ, அதைப் போல் 5 மடங்கு மக்களுக்கு ஒரு ஏக்கரிலிருந்து பெறும் 3,600 கிலோ வீரிய மக்காச் சோளத்தை உணவாக அளிக்க முடியும். மேலும், ஒரு ஏக்கரில் சராசரியாக கிடைக்கும் 1,820 கிலோ நெல் எவ்வளவு மக்களுக்கு உணவு அளிக்குமோ அதைப்போல் எட்டு மடங்கு மக்களுக்கு வேண்டிய உணவை, ஒரு ஏக்கரில் கிடைக்கும் வீரிய மக்காச் சோளத் தட்டையை நல்ல முறையில் பதப்படுத்தி, 'சைலோ' தயாரித்து அவைகளைப் பால் மாடுகளுக்கு அளிப்பதனால் பெறும் பால், வெண்ணெய் போன்றவற்றின் மூலம் அளிக்க முடியும்! மேலும், பல தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருளாகவும் மக்காச் சோளம் பயன்படுகிறது.

எனவே, தற்பொழுது நாடெங்கும் உணவுப் பற்றுக் குறை உள்ளதால், அதை உடனடியாகப் போக்கிட, மக்காச் சோளம் பயிரிடுவது ஒவ்வொரு உழவர் பெருமகனுடைய கடமையும் ஆகும் என்றால் தவறு இல்லை.

வீரிய ஒட்டு மக்காச் சோளத்தை ஆண்டு முழுவதும் பயிரிடலாம்! போதிய தண்ணீர் வசதி இருக்குமானால்ஒரே ஆண்டில் மூன்று போகம் மக்காச் சோளம் பயிரிட முடியும். குறிப்பாக மார்ச்சு—ஏப்ரல் மாதங்களிலும், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களிலும் மக்காச் சோளம் விதைத்தால் உயர்ந்த அளவு மகசூல் பெறலாம்.

ஒரு ஏக்கரில் 3 போகம் வீரிய மக்காச் சோளம் பயிரிட்டால் தற்கால விலைவாசியின் படி, ஒரு ஆண்டில் ஏறத்தாழ ரூபாய் 6,000 நிகர இலாபம் பெற முடியும் !

எனவே நல்ல தண்ணீர் வசதியும், வடிகால் வசதியும், களர் அல்லது உவர் அல்லாத நல்ல நிலமுடையவர்களும் — அதாவது 'பி.எச்.' எனப்படும் கார அமில நிலை 6.2 முதல் 7.5 வரை உள்ள நிலத்தில் மட்டும்—வருகிற மார்ச்சு—ஏப்ரல் பட்டத்தில் வீரிய ஒட்டு மக்காச் சோளம் பயிரிட இப்பொழுதே திட்டமிடுதல் அவசியமாகும்.

ஏற்ற ரகங்கள்

தமிழ் நாட்டில் கீழ்க்கண்ட மக்காச் சோள ரகங்களைப் பயிரிடுவதே சிறந்தது.

ரகத்தின் பெயர்		வயது (நாட்கள்)
அ. வீரிய ஒட்டு ரகங்கள்		
1. தக்காண மக்காச்சோளம்	...	100 முதல் 110
2. ஹை—ஸ்டார்ச்	...	95 முதல் 100
3. கங்கா—5	...	90 முதல் 95
ஆ. கலப்பின ரகங்கள்		
1. விஜய்	...	90 முதல் 100
2. அம்பர்	...	110 முதல் 115
3. கிசான்	...	105 முதல் 110



மேலும், தற்பொழுது பரிசோதனையில் உள்ள '4207' என்ற வீரிய ஒட்டு மக்காச் சோளம், 'தக்காண மக்காச் சோளம்', 'கங்கா—5' என்ற ரகங்களைக் காட்டிலும் முறையே 18 சதம், 12 சதம் அதிக மகசூல் தருவதாலும், 'டௌனி மில்டியூ' என்ற நோயைத் தாங்கிக் கொள்வதாக இருப்பதாலும், '4207' என்ற வீரிய ஒட்டு மக்காச் சோள விதைகள் கிடைத்தால் பயிரிட்டுப் பார்க்க உழவர் பெருமக்கள் முயற்சிக்கலாம்.

வீரிய ஒட்டு ரகங்களைப் பயிரிட ஒவ்வொரு ஆண்டும் புதிதாகச் சான்றிதழ் பெற்ற விதைகளையே வாங்கி விதைக்க வேண்டும்.

கலப்பின ரகங்களைப் பயிரிட்டால், நாம் பயிரிட்ட மக்காச் சோளத்திலிருந்தே தரமான விதைகளைச்சேகரித்து விதைக்கலாம். ஆனல் 4 அல்லது 5 பயிர்க் காலம் வரைப் பயிரிட்ட பிறகு மீண்டும் புதிதாகச் சான்றிதழ் பெற்ற விதைகளை வாங்கி விதைப்பதே சிறந்தது.

வீரிய ஒட்டு மக்காச்சோளத்தில் அதிக மகசூல் பெற பின் கண்ட சாகுபடி முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

சாகுபடி முறைகள்

விதை அளவு : ஏக்கருக்கு 8 கிலோ.

நிலம் தயாரித்தல் : நிலத்தை இரும்புக் கலப்பையால் நன்கு உழுது புழுதியாக்கவும். ஏக்கருக்கு 20 வண்டி தொழு எரு இடவும். உயர்ந்த மகசூல் பெற ஏக்கருக்கு 20 கிலோ துத்த நாகச் சல்பேட் இடுவதும் அவசியமாகும். பிறகு நிலத்தில் 2 அடி இடைவெளிக்கு ஒரு (பார்) சால் வீதம் அமைக்கவும்.

அடி உரம் : ஏக்கருக்கு 18 கிலோ தழைச் சத்து, 27 கிலோ மணிச் சத்து, 18 கிலோ சாம்பல் சத்து அளிக்க 300 கிலோ 6 : 9 : 6 கலப்பு உரத்தை அடியுரமாக இட வேண்டும். அடி உரத்தை பாரின் ஒரு பக்க சரிவில், விதை ஊன்றும் வரிசைக்கு 2 முதல் 3 அங்குலம் தள்ளியும், 2 அங்குல ஆழத்திலும் இட்டு, மண்ணால் மூட வேண்டும். 75 அடி நீளத்திற்கு ஒரு லிட்டர் 6:9:6 கலப்பு உரம் வீதம் இட வேண்டும். அல்லது சமப்படுத்தப்பட்ட வயலில் 2 அடி இடைவெளிக்கு ஒரு சால் எடுத்து அதில் இரசாயன உரமிட்டு, உரமிடப்பட்ட பகுதி பாரின் நடுவில் இருக்கும்படி பார் அமைக்கலாம்.

விதைத்தல்: விதைகளை உரமிடப்பட்ட பாரின் சரிவில், உரமிட்ட இடத்திற்கு 2 அங்குல உயரத்தில் வரிசையாக 22 சென்டி மீட்டர் (சுமார் 9 அங்குலம்) இடைவெளியில் ஊன்ற வேண்டும். குழிக்கு ஒரு விதை போதுமானது. விதைகளை ஒரு அங்குல ஆழத்தில் ஊன்ற வேண்டும்.

இடைவெளி : பாருக்கு பார் 2 அடி. செடிக்குச் செடி 22 சென்டி மீட்டர்.

பயிர்களின் எண்ணிக்கை : ஏக்கருக்கு 29,000 பயிர்கள் இருக்க வேண்டும்.





மேலுரமிடுவதால் மகசூல் பெருகிடும்!

பின்செய்நேர்த்தி : விதைத்த 3-வது வாரத்தில் களையெடுக்கலாம்.

மேல் உரம் : விதைத்த 25 முதல் 30 நாட்களில் ஏக்கருக்கு 36 கிலோ தழைச் சத்து அளிக்க 180 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 80 கிலோ யூரியாவை மேலுரமாக இட வேண்டும். மேலுரத்தைப் பயிர் வரிசைக்கு 10 அங்குல தூரத்தில் ஆழம் குறைவான சால் எடுத்து பட்டையாகத் தூவி மண்ணால் அணைக்கவும். 275 அடி நீளத்திற்கு 1 லிட்டர் யூரியா அல்லது 111 அடி நீளத்திற்கு 1 லிட்டர் அமோனியம் சல்பேட் வீதம் இடவேண்டும்.

நீர்ப்பாசனம் : விதை ஊன்றிய உடன் நீர்ப் பாய்ச்சவும். விதைத்த 4-வது நாள் முளை நீர் விடவும்.

மக்காச் சோளத்தில் நல்ல மகசூல் பெற பாசன நீர் நல்லதாக இருக்க வேண்டும். பாசன நீரில் இ. சி. அளவு 1.5-க்கு அதிகமாக இருந்தால் நல்ல மகசூல் பெற முடியாது.

மக்காச் சோளத்திற்கு 7 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை நீர்ப் பாய்ச்சினால் போதுமானது. ஆனால் வரையறையின்றி நினைத்தபோது தண்ணீர் பாய்ச்சக் கூடாது. ஏனெனில், அதிக ஈரம், தண்ணீர் பற்றுக் குறையின் காரணமாக ஏற்படும் ஈரமின்மை ஆகிய இரண்டுமே மக்காச் சோளத்தின் வளர்ச்சியையும், மகசூலையும் பாதித்துவிடும்.

மக்காச் சோளத்திற்கு விதைத்த 45-வது நாள் முதல் 60-வது நாள் வரையான காலத்தில்—அதாவது ஆண் பூ தோன்றுதல் முதல் மக்காச் சோளக் கதிர்கள் உருவாகுதல் வரையான காலத்தில்—தண்ணீர் பற்றுக்குறை இருக்கக் கூடாது. அக்காலத்தில் தண்ணீர் பற்றுக்குறை இருக்குமானால் மகசூலில் 42 சதஅளவு குறைந்துவிடும் என்பது ஆராய்ச்சி மூலம் தெரியவருகிறது. எனவே அக்காலத்தில் மக்காச் சோளத்திற்குத் தாராளமாகத் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

ஊடுபயிர் : வீரிய ஒட்டு மக்காச் சோளத்தில் ''பூசா சவானி'' வெண்டை, தட்டைப் பயறு ஆகியவைகளை ஊடுபயிராகச் சாகுபடி செய்வதால் அதிக இலாபம் பெற முடியும். இவ்வாறு ஊடுபயிர் செய்வதால், மக்காச் சோள மகசூல் குறையாது.

பயிர்ப் பாதுகாப்பு : தண்டு துளைப்பானைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 3 முதல் 4 கிலோ செவிடால் குருணைகளை விதைத்த 30-வது நாளிலும், 45-வது நாளிலும் ஆக இரு முறை குருத்துக்களில் இட வேண்டும். அல்லது என்ட்ரின் குருணைகளையும் அதே அளவிலும், முறையிலும் இடலாம். அல்லது ஏக்கருக்கு 1.2 கிலோ கார்பரில் 50 சத மருந்தை 600 லிட்டர் தண்ணீரில் கரைத்துத் தெளிக்கவேண்டும்.

கதிரைத் துளைக்கும் புழுக்களைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 800 கிராம் கார்பரில் 50 சத மருந்தை 400 லிட்டர் தண்ணீரில் கலந்து அல்லது 600 மில்லி லிட்டர் 'எண்டோசல்பான்' 35 சத இ.சி. மருந்தை 300 லிட்டர் தண்ணீரில் கரைத்து விதைத்த 60-வது நாளிலும், 75-வது நாளிலும் ஆக இரு முறை தெளிக்க வேண்டும்.

'ஹெல்மின்தோஸ்போரியம்' என்னும் இலைப் புள்ளி நோயைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 800 கிராம் 'டைத்தேன்' எம். 45' என்ற மருந்தை 400 லிட்டர் தண்ணீரில் கரைத்து விதைத்த 45-வது நாளில் துவங்கி, 20 நாட்கள் இடைவெளியில் 3 முறை தெளிக்க வேண்டும்.

மக்காச் சோளத்தில் மகசூல் குவித்திட, மேற்கண்ட முறைகளில் சாகுபடி செய்யும்படி தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

—ஆர். எம்.

சாமந்தியில் அதிக மகசூல் பெற இரு முறைகள்!

1. தழைச்சத்தைச் சாமந்தி செடிகளுக்குத் தெளிப்பதன் மூலம் அதிக விளைச்சல் அடையலாம்!

சாமந்திப் பயிருக்கு, ஒரு ஏக்கராவுக்கு 25 கிலோ தழைச் சத்து அளிக்கவேண்டும். இதில் பாதியை செடி நடும்போதும், மீதி பாதியை 50 நாட்கள் கழித்தும் இடவேண்டும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகத்தில், தழைச் சத்தைச் சாமந்தி செடிகளுக்குத் தெளிப்பதன் மூலம் அதிக மகசூல் பெற முடியுமா என்பது குறித்து கோவையில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. மூன்று ஆண்டுகளாக நடத்திய ஆராய்ச்சியில் தழைச் சத்தின் அளவில் பாதியைச் சாமந்தி செடிகளுக்கு அளிக்க, யூரியாவை நீரில் கரைத்து, (1 சதவிகிதம்) மூன்று தடவைகள் தெளித்தும், மறுபாதியை நடும்போது மண்ணில் இடுவதின் மூலமும்-முழு தழைச்சத்தையும் மண்ணிற்கு இடுவதைவிட-12 சதவிகிதம் அதிக மகசூல் பெற முடியும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

ஒரு ஏக்கராவில், இம்முறையால், அதிக விளைச்சலாக ரூபாய் 440 பெறுமானமுள்ள (100 பூக்களுக்கு 25 பைசா வீதம்) அதிக விளைச்சலைப் பெறலாம் (அதாவது சுமார் 1.75 இலட்சம் பூக்கள் அதிகமாக) எனக்கணக்கிடப்பட்டுள்ளது. பாதி தழைச்சத்தைச் செடிகளுக்குத் தெளிக்க உரமிடும் செலவு மட்டும் ஒரு ஏக்கராவுக்கு ரூபாய் 40தான் செலவாகும். உரத்தின் அளவு இரு முறைகளிலும் ஒன்றே.

அதிக அளவு செடிகளை, குறுகிய இடைவெளி விட்டு நடுவதில் செலவும் மிகக்குறைவே. ஏனெனில், உழவர்கள் நடுவதற்கு வேண்டிய செடிகளைத் தாங்களாகவே உற்பத்தி செய்து கொள்ளுகின்றனர். ஆனால், குறுகிய இடைவெளி விட்டு நடுவதால், அதிகப்படியாக ஒரு ஏக்கராவிற்கு ரூபாய் 3,000 மொத்த வருமானமாக (100 பூக்களுக்கு 25 காசு என்றமிகக் குறைந்த விலையில்) கிடைக்கின்றது.

யூரியாவை நீரில் கரைத்து (1 சதவீதம் அளவில்) செடி நட்டு 50 நாட்கள் கழித்து முதல் தடவையும், பின்னர் 15 நாட்களுக்கு ஒரு முறையாக 2 தடவைகளும் (மொத்தம் மூன்று தடவைகள்) செடிகளுக்குத் தெளிக்கவேண்டும். இதற்கு ஒரு ஏக்கராவுககு 28 கிலோ யூரியாவை உபயோகித்து, மீதியுள்ள 28 கிலோ யூரியாவை நடும்போது பாத்திகளில் இட வேண்டும்.

2. சாமந்தியைக் குறுகிய இடைவெளியில் நட்டு அதிக மகசூல் பெறலாம்!

கோயம்புத்தூர், மதுரை, தருமபுரி மாவட்டங்களில் மஞ்சள், வெள்ளை சாமந்திப் பயிர் வகைகள் பணப்பயிராக பயிரிடப்படுகின்றன. சாதாரணமாகச் சாமந்தி செடிகளை வரிசையில் 30 சென்டிமீட்டரும், வரிசைக்கு வரிசை 30 சென்டிமீட்டரும் இடைவெளி விட்டு நடுவது வழக்கம். ஒரு ஏக்கராவுக்கு 44,000 செடிகள் இவ்வாறு நடலாம். தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கோவையில் கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்திய ஆராய்ச்சியில், இதைவிடக் குறுகிய இடைவெளி (அதாவது செடிக்குச் செடி 15 சென்டிமீட்டரும், வரிசைக்கு வரிசை 30 சென்டிமீட்டரும்) விட்டு ஒரு ஏக்கராவுக்கு சுமார் 87,000 செடிகள் நடுவதால், அதிக விளைச்சல் பெறலாம் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு நடுவதால், பூக்களின் அளவும் அதிகமாக பாதிக்கப்படுவதில்லை. அதன் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

இடைவெளி வரிசை செடி (1)	ஒரு சென்டில் செடிகளின் எண்ணிக்கை (2)	ஒரு சென்டில் மகசூல் எடை (3)	ஒரு பூவின் எடை (கிராம்) (4)	ஒரு பூவின் அகலம் (செ.மீ.) (5)
30 × 30	440	11,440	1.77	3.59
30 × 15	870	23,490	1.72	3.55

எனவே மேற்கூறிய 2 முறைகளையும் மேற்கொண்டு சாமந்தி மகசூலைப் பெருக்கும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

வெளியீடு : தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-3.

தஞ்சை மாவட்டத்தில் சம்பா அல்லது தாளடி நெல் அறுவடைக்குப் பிறகு தண்ணீர் வசதியுள்ள இடங்களில் நெல் தரிசு நிலங்களில் ''பி. ஆர். எஸ். 72'' என்ற 135 நாட்கள் வயதுடைய பருத்தியைப் பயிரிடுவதன் மூலம் ஏக்கருக்கு ரூபாய் 1,500 வரை வருவாய் பெற முடியும்! ''பி.ஆர். எஸ். 72'' ரகப் பருத்தி பயிரிட, ஏக்கருக்குச் சாகுபடிச் செலவு ரூபாய் 500 முதல் 600 வரை ஆகக்கூடும். எனவே ஏக்கருக்கு ரூபாய் 900 முதல் 1,000 வரை நிகர இலாபம் கிடைக்கும். உழவு செய்யும் செலவின்றி, குறைந்த தண்ணீர் வசதியைக் கொண்டே, 135 நாட்களில் ஏக்கருக்கு ரூபாய் 900 முதல் 1,000 வரை நிகர இலாபம் பெற முடிவதால், தஞ்சை மாவட்டத்தில் ''பி.ஆர்.எஸ். 72'' பருத்தியின் சாகுபடி பரவி வருகிறது.

''பி. ஆர். எஸ். 72'' ரகப் பருத்தி, தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்களின் வருவாயைப் பெருக்கிடவும், தமிழ்நாட்டின் பருத்தித் தேவையை ஈடுசெய்யவும் உதவுவதாக இருப்பதால், அதன் உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய ஒருமித்த செய்நேர்த்தி முறைகளை (Package of Practices) தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்களின் நலன் கருதிக் கீழே விவரித்துள்ளோம்.

ஒருமித்த செய்நேர்த்தி முறைகள்

பருவம்: ஜனவரி 15-ஆம் தேதி முதல் பிப்ரவரி 15-ஆம் தேதி வரை விதைப்பது சிறந்தது.

விதை அளவு: ஏக்கருக்கு 9 கிலோ.

விதையுடன் மருந்து கலத்தல்: ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் 'அக்ரசான்' மருந்து வீதம் கலந்து 6 மணிநேரம் வைத்திருந்து, பிறகு செம்மண்ணும் சாணமும் கலந்த கலவையில் (3:1) கலந்து, தேய்த்து எடுத்து, நிழலில் உலர்த்தவும்.

விதைத்தல்: நெல் அறுவடைக்குப் பிறகு, அரிதாள் நிலையிலேயே-வயல் மெழுகுப் பதமாக இருக்கும் பொழுது-பி. ஆர். எஸ். 72 விதைகளை ஊன்ற வேண்டும். வயலில் மிகுந்த ஈரம் இருக்கும்பொழுது அல்லது ஈரம் காய்ந்து விட்ட பிறகு விதைப்பதைத் தவிர்க்க வேண்டும். நெல் அறுவடையாகும் பொழுது நிலம் காய்ந்திருந்தால், தண்ணீர் விட்டு, பிறகு நிலம் மெழுகுப் பதமாக இருக்கும் பொழுதே விதைகளை ஊன்ற வேண்டும்.

வரிசைக்கு வரிசை 1.5 அடி இடைவெளியும், வரிசையில் குழிக்குக் குழி 9 அங்குல இடைவெளியும் விட்டு, விதைகளை ஊன்ற வேண்டும். இவ்வாறு இடைவெளிவிடக் கயிறு பிடித்து விதைகளை ஊன்றுவதே சிறந்தது. வயல் மெழுகுப் பதமாக இருக்கும்பொழுது சிறிய குச்சியினால் அரை அங்குல ஆழக் குழிகளை ஏற்படுத்தி, அக்குழிகள் ஒவ்வொன்றிலும் 2 அல்லது 3 விதைகளைப் போட்டு மணலால் மூடிவிட்டால், விதைகள் நன்கு முளைக்கும். வயலில் உள்ள ஈரத்தைக் கொண்டே விதை முளைத்துவிடுமாதலின், விதை ஊன்றிய உடன் நீர்பாய்ச்சத் தேவையில்லை.

நீர்பாசனம்: வயலில் ஈரம் உள்ள நிலைமைக்கேற்ப 10 முதல் 15 நாட்களுக்கு ஒரு முறை நீர்பாய்ச்ச வேண்டும்.

எப்பொழுது நீர் பாய்ச்ச வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள வயலில் 6 அங்குல ஆழம் தோண்டிப் பார்க்கவும். 6 அங்குல ஆழத்தில் ஈரம் இருப்பின், நீர் பாய்ச்ச வேண்டிய அவசியமில்லை. ஈரம் இல்லாதிருப்பின் உடன் நீர் பாய்ச்ச வேண்டும்.

இரசாயன உரமிட்டவுடன் தவறாமல் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

விதைத்த 95 நாட்களுக்குப் பிறகு தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்திவிடவும்.

10-வது நாள்: விதை முளைக்காத இடங்களில், புதிதாக விதைகளை ஊன்ற வேண்டும்.

21-வது நாள்: மண்வெட்டியால் கொத்தி விட்டுக் களை எடுத்து, பிறகு ஏக்கருக்கு 14 கிலோ தழைச்சத்து, 14 கிலோ மணிச்சத்து, 14 கிலோ சாம்பல் சத்து, ஆகியவற்றை முதல் தவணை மேலுரமாக அளிக்க வேண்டும். இந்த அளவுச் சத்துக்களைக் குறைந்த செலவில் இட ஏக்கருக்கு 30 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட், 20 கிலோ யூரியா, 24 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகியவைகளை இட வேண்டும். பருத்திச் செடியைச் சுற்றிலும் 2 அங்குல தூரம் தள்ளி இரசாயன உரங்களை வட்டமாக இட்டு, மண்ணால் அணைத்துத் தண்ணீர் விட வேண்டும்.

40-வது நாள்: இரண்டாவது முறை களை எடுத்து, 14 கிலோ தழைச்சத்தை மேலுரமாக இடவேண்டும். இச்சத்தினை அளிக்க ஏக்கருக்கு 30 கிலோ யூரியாவினை இடவேண்டும். செடியைச் சுற்றிலும் 2 அங்குல தூரம் தள்ளி யூரியாவை வட்டமாக இட்டு, மண் அணைத்து, தண்ணீர் விடவும். இத்தருணத்தில் நல்ல முறையில் மண் அணைப்பது, செடிகள் நன்கு வளர வழிகோலும். இத்தருணத்தில், நீர் பாய்ச்சுவதற்கு வசதியாக பார் அமைத்துக் கொள்வதும் சிறந்தது.

அறுவடை

விதைத்த 105-வது நாள் பருத்தி வெடிக்கத் துவங்கும். காலை வேளையிலேயே பருத்தியைப் பறிக்க வேண்டும். வாரம் ஒருமுறை பருத்தியை எடுக்க வேண்டும். விற்பனையின்போது அதிக வருவாய் கிடைக்க, பருத்தியை நன்கு காயவைத்து, சேமித்து வைக்க வேண்டும். பருத்தி முழுவதும் எடுக்கப்பட்ட பிறகு, பருத்திச் செடிகளை அப்படியே மண்ணுடன் உழுதுவிட்டுக் குறுவை நெல்லிற்குத் தழை எருவாகப் பயன்படுத்தலாம்.

பி. ஆர். எஸ். 72 பருத்திக்குப் பயிர்ப்பாதுகாப்பு முறைகள்

(1). பி. ஆர். எஸ். 72'' பருத்தியில் அதிக மகசூல் பெறுவதற்குரிய வழிகளில் மிகவும் முக்கியமானது, முறையான பயிர்ப்பாதுகாப்பு முறைகளை மேற்கொள்வதேயாகும். எனவே, பின்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு 7 முறை மருந்து தெளிக்க வேண்டும்.

வ. எண்	மருந்து தெளிக்க வேண்டிய நாள் (விதைத்தது முதல்)	தெளிக்க வேண்டிய மருந்தின் பெயர்	ஒரு ஏக்கருக்குத் தேவையான மருந்தின் அளவு	ஒரு ஏக்கருக்குத் தெளிக்கத் தேவையான தண்ணீர் அளவு	
				கையால் இயக்கும் தெளிப்பானுக்கு (லிட்டர்)	விசைத் தெளிப்பானுக்கு (லிட்டர்)
1.	15-வது நாள்	மெட்டாசிஸ்டாக்ஸ் அல்லது பாஸ்பாமிடான்	150 மில்லிலிட்டர் 110 மி.லி.	220	70—00
2.	25-வது நாள்	டைமிதியோட் அல்லது பாஸ்பாமிடன்	150 மி.லி. 110 மி.லி.	220	70—90
3.	40-வது நாள்	கார்பரில் 50சத கரையும் தூள் + கரையும் கந்தகத் தூள்	1 கிலோ + 0.5 கிலோ	270	90—110
4.	55-வது நாள்	மெட்டாசிட்கோம்பி அல்லது ஹிலியோடாக்ஸ்	1 லிட்டர் 1 லிட்டர்	270	90—110
5.	70-வது நாள்	கார்பரில் 50 சத கரையும் தூள்+கரையும் கந்தகத் தூள்	1.25 கிலோ+ 0.5 கிலோ	360	120—140
6.	85-வது நாள்	மெட்டாசிட்கோம்பி அல்லது 'அசாட்ரின்' 40 சதம்	1 லிட்டர் 400 மி.லி.	480	160—180
7.	100-வது நாள்	கார்பரில் 50சத கரையும் தூள்+கரையும் கந்தகத் தூள்	1.5 கிலோ 0.5 கிலோ	560	180—200

குறிப்பு:—1. கருங்கிளை நோய் தோன்றினால், 55-வது நாளில் 4-வது முறையாக மருந்து தெளிக்கும் பொழுது, 250 கிராம் காப்பர் ஆக்சி குளோரைடு அல்லது 400 கிராம் டைத்தியோ-கார்பமேட் மருந்தையும் கலந்து தெளிக்கவும்.

2. கார்பரில் 50 சத கரையும் தூளையும், கரையும் கந்தகத் தூளையும் தெளிப்பதற்குப் பதில், ஏக்கருக்கு 7 கிலோ கார்பரில் 10 சதத் தூளை தூவலாம்.

—ஆர்.எம்.

தக்காளியைத் தாக்கும் வேர்முடிச்சு நூற்புழுவைக் கட்டுப்படுத்தும் முறை

1. வேர் முடிச்சு நூற்புழுவைக் கட்டுப்படுத்த, தக்காளி நாற்றுக்களை நூற்புழு இல்லாத நிலத்தில் தயாரிக்க வேண்டும். இதற்காகச் சில மாதங்கள் தரிசாகப் போட்டிருந்த நிலத்தை நாற்றங்கால் தயாரிக்க உபயோகிக்கலாம்.

2. நடுவதற்கு முன் நாற்றுகள் வளர்ந்து வேர் முடிச்சுகள் இல்லாது இருக்கின்றனவா என்று பார்த்து நடவேண்டும்.

3. வேர் முடிச்சு நூற்புழுவால் தாக்கப்பட்ட நிலமாக இருந்தால் நாற்றுக்களை நட்டு 10 நாட்களுக்குப் பிறகு ஒவ்வொரு செடிக்கும் சுமார் ஒரு கிராம் வீதம் 'கார்ப்போஃபூரான்' 3 சதம் குருணைகளைப் போட வேண்டும். இக்குருணை மருந்தைச் செடியிலிருந்து 6 முதல் 8 செ.மீ. தூரம் தள்ளி, செடியைச் சுற்றிலும் போட்டு, நன்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டும். ஒரு எக்டேர் நிலத்திற்கு போட 20 கிலோ மருந்து தேவைப்படும். இதற்கு ஆகும் செலவு ரூபாய் 200. தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளில் தக்காளியைத் தாக்கும் வேர்முடிச்சு மற்றும் பல்வித நூற்புழுக்களைக் கட்டுப்படுத்த 'கார்ப்போஃபூரான்' மருந்து சிறந்த பலனளிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. நூற்புழு தாக்கியுள்ள நிலத்தில், இம்மருந்தைப் போடுவதன் மூலம் மகசூல் 40 முதல் 60 சதம் அதிகரிப்பதுடன், கூடுதல் வருவாய், எக்டேருக்கு ரூபாய் 1,000 வரை கிடைப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்



அதிக விலை கொடுக்காதீர்கள்

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை. அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள். எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR IC CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்

175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

IS: 269 ISI மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது.

சங்கர் சிமெண்ட்

தயாரிப்பாளர்கள்

FDSIC/1813TMA

இலக்கியங்களுக்கு

இறவாப் புகழ் தருவது...

காகிதம்

ஹோமர் முதல் ஹெமிங்வே வரை,
காளிதாசர் முதல் காஃப்காவரை,
ஆதிசங்கரர் தொட்டு அரிஸ்டாடில் வரை,
திருவள்ளுவர் தொட்டு தோரூவரை......

தரமான காகிதம், சிந்தனையாளர்களின் எண்ணங்களும், கருத்துக்களும் காலத்தால் அழிவுரு வண்ணம் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கி உதவுகிறது.

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்

பள்ளிப்பாளையம்,
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு

SPB

The Watermark of Quality

எழுத, அச்சிட, உறையிட
உன்னதமான காகிதங்கள்

கோடைப் பருவத்திற்கு ஏற்ற புதிய பருத்தி

குமார்-

தமிழ்நாட்டில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களிலும் வழக்கமாகக் கோடைக் காலத்தில் ஏறத்தாழ 30 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில் இறைவைக் கம்போடியா பருத்தி பயிரிடப்படுகிறது. தற்பொழுது இப்பகுதிகளில் 'எம்.சி.யு. 4' என்னும் பருத்தி பயிரிடப்பட்டு வருகிறது. 'எம்.சி.யு. 4' என்னும் ரகத்தை விட மகசூலிலும், தரத்திலும் உயர்வான ஒரு ரகம் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ரகத்தின் பெயர் 'எம்.சி. 8' எனப்படுகிறது. இந்த ரகப் பஞ்சில் 80-ஆம் எண் நூல் நூற்கலாம். இந்த ரகப் பருத்தியைப் பயிரிட அதிகமாகத் தண்ணீர் பாய்ச்ச வேண்டியதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தென் மாவட்டங்களில் உள்ள உழவர் பெருமக்களின் நிலங்களிலும், கோவில்பட்டி திருவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் உள்ள ஆராய்ச்சி நிலையங்களிலும் பல ஆண்டுகளாக நடத்திய சோதனைகளில் இருந்து—'எம்.சி.யு. 4' பருத்தியைவிட—'எம்.சி.யு. 8' பருத்தி ஏக்கருக்கு ரூபாய் 394 அதிக இலாபம் தரக்கூடியது என்பது தெளிவாகியுள்ளது. எனவே, வருகின்ற மாசிப் பட்டத்தில் வழக்கமாகப் பயிரிடும் 'எம்.சி.யு. 4' ரகப் பருத்தியைப் பயிரிடுவதற்கு மாறாக, பின்கண்ட கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளை மேற்கொண்டு 'எம்.சி.யு. 8' ரகப் பருத்தியைப் பயிரிடுமாறு தென்மாவட்ட உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

கட்டுக்கோப்பு சாகுபடி முறைகள்

பருவம் : மாசிப்பட்டம் (பிப்ரவரி-மார்ச்சு முதல் ஜூலை ஆகஸ்ட் வரை) ஏற்றது. பிப்ரவரி 1 முதல் 15-ஆம் தேதிக்குள் விதைப்பது சிறந்தது.

வயது : 165 நாட்கள்.

ஏற்றமண் : மணல் கலந்த கரிசல் மண் நிலங்களும், செழுமை மிக்க மண் உள்ள நிலங்களும் ஏற்றவை.

விதையளவு : ஏக்கருக்கு 6 முதல் 8 கிலோ விதைகளை விதைக்க வேண்டும்.

நிலம் தயார் செய்தல் : நிலத்தை இரும்புக் கலப்பையால் 3 முறையும், பிறகு நாட்டுக் கலப்பையாலும் நன்கு உழுது புழுதியாக்க வேண்டும். கடை உழவில் அடியுரமிட்ட பிறகு, பார் கலப்பையால் 2.5 அடிக்கு ஒரு பார் வீதம் அமைத்துக் கொள்வது சிறந்தது.

தற்பொழுது நெல், கேழ்வரகு ஆகியவை பயிரிட்டுள்ள நிலங்களில், அவைகளின் அறுவடைக்குப் பிறகு, நிலத்தை உழுது பக்குவப்படுத்தாமலேயே-ஈரம் இருக்கும் பொழுதே-'எம்.சி. யு 8' ரகப் பருத்தி விதைகளை ஊன்றிடலாம்!

இரசாயன உரமிடுதல் : 'எம்.சி. யு. 8' ரகப் பருத்தி பயிரிட ஏக்கருக்கு 24 கிலோ தழைச்சத்து, 12 கிலோ மணிச்சத்து, 12 கிலோ சாம்பல் சத்து வீதம் இரசாயன உரமிட வேண்டும். இதில் 8 கிலோ தழைச்சத்தையும், 12 கிலோ மணிச்சத்தையும், 12 கிலோ சாம்பல் சத்தையும் கடைசி உழவின் போது இட வேண்டும். மீதியுள்ள 16 கிலோ தழைச்சத்தை விதை ஊன்றிய 45-வது நாள் மேலுரமாக இட வேண்டும்.

நெல் அல்லது கேழ்வரகு அறுவடையான உடன்-அரிதாள் நிலையிலேயே- 'எம்.சி. யு. 8' ரகப் பருத்தி பயிரிடுவதானால், விதை ஊன்றிய 28-வது நாளில் ஏக்கருக்கு 8 கிலோ தழைச்சத்தையும், 12 கிலோ மணிச்சத்தையும், 12 கிலோ சாம்பல் சத்தையும் இட்டு, மீதியுள்ள 16 கிலோ தழைச்சத்தை விதை ஊன்றிய 45-வது நாளில் இடவும்.

விதைப் பக்குவப் படுத்துதல்: ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் 'அக்ரசான்' அல்லது 'செரசான்' மருந்து வீதம் கலந்து சுமார் 6 மணி நேரம் வைத்திருக்க வேண்டும். பிறகு செம்மண்-மாட்டுச் சாணக் கலவையில் (3 : 1) விதைகளைத் தேய்த்து உலர்த்தவும்.

விதைத்தல் : 2.5. அடி இடைவெளியில் அமைக்கப்பட்ட பார் அல்லது சாலின் ஒரு பக்கத்தில் 1 அடி இடைவெளியில், குழிக்கு 3 அல்லது 4 விதைகள் வீதம் ஊன்றவும்.

நீர்ப்பாய்ச்சுதல் : 'எம். சி. யு. 8' பருத்திக்கு 8 அல்லது 9 முறை நீர்ப்பாய்ச்சினால் போதுமானது! இந்தப் பருத்திக்கு தண்ணீர் தேங்கி நிற்கக்கூடாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். பின்கண்டவாறு நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

இன்றைய சேமிப்பு நாளைய மகிழ்ச்சி!!



வளமான நல்வாழ்வுக்கு வழிகாட்டும்

சிறப்புமிக்க திட்டம் சிறுசேமிப்புத் திட்டம்

தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு 'அதிக வட்டி' அளிக்கப்படுகிறது.

சிறு சேமிப்புத் தரும் சீரிய திட்டங்களில் இரண்டு தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெக்கரிங் டெபாசிட் திட்டம்) வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.

	மாதம் செலுத்தும் தொகை	5 ஆண்டு இறுதியில் கிடைப்பது	10 ஆண்டு இறுதியில் கிடைப்பது
	ரூ	ரூ	ரூ
ரெக்கரிங் டிபாசிட்	5/-	375/-	. . .
	10/-	750/-	. . .
வளரும் மாதச் சேமிப்பு	5/-	. . .	825/-
	10/-	. . .	1, 650/-

சலுகைகள்

1. தற்போது 1. 7. 1972 க்கு பிறகு ரெக்கரிங் டிபாசிட் திட்டத்தின் கீழ் கணக்கு துவக்கியவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்தத் தேதிக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் நடைமுறையில் இருந்துவரும் ரெக்கரிங் டிபாசிட் கணக்குகளுக்கும் இத்திட்டச்சலுகை கிட்டும். இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை. சம்பளப்பட்டியல் மூலம் இத்திட்டத்தில் சேரலாம்.

2. வளரும் மாதச் சேமிப்புத் திட்டத்தின் மூலம் சேமிப்பவர்கள் செலுத்தும் தொகைக்கு ரூ. 20, 000 வரை வரிச் சலுகை உண்டு. இத்திட்டத்திலும் சம்பளப்பட்டியல் மூலம் சேரலாம்.

இப்போது தபால் நிலைய காலவரை வைப்புத் திட்டத்திற்கு 10% வட்டி அளிக்கப்படுகிறது.

உங்கள் குழந்தைகளின் சீர்மிகு வாழ்விற்காகவும்
நாடும் வீடும் வளம் பெறவும்,

''இன்றே ஒரு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்''

இயக்குநர்,
சிறு சேமிப்புத் துறை,
அண்ணா சாலை, சென்னை-2.

முதல் முறை—விதைப்பின் போது.

2-வதுமுறை—விதை ஊன்றிய 4 அல்லது 5 நாட்களுக்குப் பிறகு.

3-வது முறை—விதைத்த 20 முதல் 25 நாட்களில்.

பிறகு—வெய்யிலின் கடுமைக்கேற்ப 20 நாட்களுக்கு ஒருமுறை நீர்ப்பாய்ச்சினால் போதுமானது. பயிரின் கடைசி காலத்தில் 15 நாட்களுக்கு ஒரு முறை நீர்ப்பாய்ச்சுதல் சிறந்தது.

விதைத்த 135 நாட்களுக்குப் பிறகு நீர்ப்பாய்ச்ச வேண்டாம்.

பின்செய்நேர்த்தி : விதைத்த 20-வது நாள் களை எடுக்கவும். 40-வது நாள் 'ஜூனியர் ஹோ' பயன்படுத்தி மண்ணைக் கிளறி விடவும். 45-வது நாள் மேலுரமிட்டு மண்ணை அணைத்து விடவும்.

பயிர்ப் பாதுகாப்பு : இப் பருத்திக்கு பின்கண்டவாறு 8 முறை மருந்து தெளிக்க வேண்டும்.

மருந்து தெளிக்க வேண்டிய காலம் (விதைத்தது முதல்)	மருந்தின் பெயர்
10 முதல் 15-வது நாளில்	என்ட்ரின்+ரோகார்.
25 முதல் 30-வது நாளில்	என்ட்ரின் + ரோகார் + காப்பர் ஆக்சிகுளோரைடு.
40 முதல் 45-வது நாளில்	ஆந்தியோ அல்லது மெட்டாசிட் கோம்பி
60—வது நாளில்	மெட்டாசிட் கோம்பி அல்லது செவின்.
75—வது நாளில்	செவின்+கந்தகம் அல்லது பி.எச்.சி.+டி. டி. டீ.
90—வது நாளில்	செவின் + கந்தகம். அல்லது எண்டோசல்பான்.
100—வது நாளில்	,, ,,
110 முதல் 115—வது நாளில்	,, ,,

அறுவடை : அதிகாலையில் பருத்தியை எடுக்க வேண்டும். பருத்தியை எடுக்கும்பொழுதே நல்லது, கெட்டது எனத் தரம் பிரித்து எடுத்து, ஈரமில்லா இடத்தில் காய வைக்க வேண்டும். தரம்பிரித்து, நல்ல பருத்தியைத் தனியே விற்றால் அதிக விலை கிடைக்கும்!

மகசூல் : 'எம்.சி. யு. 8' பருத்தி சராசரியாக ஏக்கருக்கு 10 குவிண்டால் பருத்தி மகசூல் தரும். 'எம்.சி.யு. 8' ரகம் பயிரிடுவதன் மூலம்-எம்.சி.யு. 4' ரகப் பருத்தி பயிரிடுவதை விட-கூடுதலாக ஏக்கருக்கு ரூபாய் 394 இலாபம் பெற முடியும்!

கருச்சிதைவுச் சட்ட விளக்கம்

சமுதாய நல்வாழ்வுக்கு ஏற்பவும், துன்பங்களைத் தவிர்க்கவும், சிற்சில அவசர நிலைமைகளை ஒட்டியும் கருச்சிதைவுக்கு அனுமதி அளிக்கும் சட்டம் இப்போது அமலில் இருந்து வருகின்றது.

இதன்படி கீழ்க்கண்ட ஏதாவது ஓர் நிலையில் உள்ள எந்த கர்ப்பிணிப் பெண்ணும், சட்டப்படி கருச் சிதைவு செய்து கொள்ளலாம்.

1. குழந்தை பிறப்பதால் தனது சொந்த உடல் நலத்துக்கோ, மனநலத்துக்கோ தீங்கு ஏற்படுவதைத் தடுப்பதற்காக;

2. பிறக்கப் போகின்ற குழந்தை உடல் ஊனத்துடனோ அல்லது மனநலக் குறைபாடுடனோ பிறந்து, தீராத இடர்ப்பாடுகளுக்கு உள்ளாகும் என்ற இக்கட்டான நிலை ஏற்படும் பொழுது;

3. கற்பழிப்பின் காரணமாகக் கர்ப்பம் தரித்திருந்தால்;

4. கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தியும், தவறுகளால் கர்ப்பம் தரித்துவிட்டால்;

5. இப்போதைய அல்லது வருங்காலச் சூழ்நிலை காரணமாகக் குழந்தைப் பிறப்பு, தாயின் உடல் அல்லது மன நலனுக்குத் தீங்கு விளைவிக்கும் வாய்ப்பிருந்தால்; கருச்சிதைவு செய்வது பற்றி ஆய்வுரை பெறலாம்.

மாநில அரசால் இதற்காக ஒப்புதல் அளிக்கப்பெற்றுள்ள எந்த மருத்துவ மனையிலும், இதைச் செய்துகொள்ளலாம். எல்லா மருத்துவக் கல்லூரி மருத்துவ மருந்து மனைகளிலும் மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளிலும், மற்றும் அனுமதிக்கப்பட்டுள்ள மருத்துவமனைகளிலும் இக் கருச்சிதைவு செய்து கொள்ளலாம்.

காலந் தாழ்த்தாமல், ஆரம்பக் காலத்திலேயே தகுதியும், அனுபவமும் பெற்ற மருத்துவ வல்லுநர்களைக் கொண்டு, இதற்கென்று ஒப்புதல் அளிக்கப் பெற்ற, சிறந்த சிகிச்சைக் கருவிகளோடுகூடிய, மருத்துவ மனையில் எந்தவிதக் கூச்சமும் அச்சமும் இல்லாமல், மிகவும் பாதுகாப்பான முறையில் கருச்சிதைவு செய்து கொள்ளலாம்.

என்றாலும், ''வருமுன் காப்பது நல்லது'', என்பதற்கு இணங்க கருத்தடை முறைகளைக் கையாண்டு, தேவையற்ற கர்ப்பம் உண்டாகாமலேயே தடுப்பதுதான் என்றுமே நல்லது.

பயிற்சியும், அனுபவமுமற்ற தகுதி இல்லாத நபர்களால், அரசு அனுமதி இல்லாத இடங்களில் செய்யப்படுகின்ற கருச்சிதைவு அபாயம் நிறைந்ததோடு, சட்டப்படிக் குற்றமும் ஆகும்.

உங்கள் எதிர்காலத்திற்கு ஓர் நற்செய்தி

TNSC BANK

எப்பொழுதும் இல்லாத அதிகப்படியான வட்டி இப்பொழுது கொடுக்கிறது

23-7-1974 லிருந்து தவணை டெபாஸிட்டுகளுக்கு கொடுக்கப்படும் வட்டி உயர்வு:

ரூ 100/-ம், அதற்கு மேலும்	வட்டி விகிதம் வருடத்திற்கு
91 நாட்களிலிருந்து 6 மாதங்களுக்கு குறைவாக	5.50%
6 மாதங்களிலிருந்து 9 மாதங்களுக்கு குறைவாக	6.00%
9 மாதங்களிலிருந்து 1 வருடத்திற்கு குறைவாக	7.00%
1 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 3 வருடங்களுக்கு குறைவாக	8.00%
3 வருடமும் அதற்கு மேலும் ஆனால் 5 வருடங்கள் வரை	9.00%
5 வருடங்களுக்கு மேல்	10.00%

தற்பொழுது உள்ள தவணை டெபாஸிட்டுகளுக்கும் 23-7-1974 லிருந்து தவணை தேதிவரை மேற்கண்டவாறு அதிகப்படி வட்டி கொடுக்கப்படும்.

ரூ 1000/-மும் அதற்கு மேலும், ஓராண்டு காலத்திற்கும் அதற்கு மேலும் முதலீடு செய்யப்படும் டெபாஸிட்டுகளுக்கு மாதந்தோறும் வட்டி கொடுக்கப்படும்.

"உங்கள் சேமிப்புக்கு எங்கள் சேவை"

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.

379, நேதாஜி சுபாஸ் சந்திர போஸ் ரோடு, சென்னை-600001

தந்தி அர்பாங்க்   தொலைபேசி· 20367   டெலக்ஸ்· 7225

என்.எல்.ஹெப்ளிகர், நிர்வாக இயக்குநர்.	குடவாசல் சி.கிருட்டிணமூர்த்தி துணைத்தலைவர்	ஆர்.கனகசபை, தலைவர்.

அறிஞர் அண்ணா நகர்!

ஆயிரமாயிரம் மக்களைத் தம்பால் ஈர்த்துக் கொண்டிருக்கிறது.

பெரியவர், சிறியவர், குழந்தைகள் முதலானோர் குடும்பத்துடன் குதூகலமாய்ச் செல்கின்றனர்.



விண்ணை முட்டும் கோபுரம் கண்ணைச்சிமிட்டி அழைப்பது போல மின்விளக்குகள் அதிலே ஒளிவிடுகின்றன.

இவற்றுக்கெல்லாம் காரணம், பொங்கல் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சிதான்!

கடந்த ஆண்டு பத்து இலட்சம் மக்களையும், 5000 வெளிநாட்டினரையும் கவர்ந்த இந்தப் பொருட்காட்சி, இவ்வாண்டு முதன் முறையாக அறிஞர் அண்ணா நகரிலே நடைபெறுகிறது.

கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் வண்ணம் அரசு துறைகளின் பல்வேறு அரங்குகள், தனியாரின் அங்காடிகள் இவ்வாண்டு இங்கே நிறைய இடம் பெற்றுள்ளன.

வெளியே ஐயனார் சிலையைத் தாண்டி பொருட்காட்சிக்குள் நுழைகிறோம்.

விடுதலைக்கு வித்திட்ட வீர பாண்டியக் கட்டபொம்மனின் கோட்டை கம்பீரமாய்க் காட்சி அளிக்கிறது. இந்தக் கோட்டை ஒரு மாதிரிதான். ஆனால் அசல் கோட்டை எப்படி இருந்திருக்கும்? நம் நினைவு அந்தக் காலத்திற்கே செல்கிறது!

செய்தி-மக்கள் தொடர்புத் துறை அமைத்த இந்தக் கோட்டையைக் காண ஆடவரும் மகளிரும் நீண்ட வரிசையில் நிற்கின்றனர்.

கோட்டைக்குள்ளே—

மையமான இடத்தில் வீர பாண்டியக் கட்டபொம்மனின் திருஉருவச்சிலை அமைந்திருக்கிறது.

அண்ணாவின் அடிச்சுவட்டில் அரசின் பணிகளை விளக்கிடும் படங்கள், புள்ளி விவரங்கள், தகவல்கள் முதலியன உட்புறம் வரிசையாக அமைந்துள்ளன.

திருச்சிராப்பள்ளி மாவட்ட அரங்கு!

டால்மியா சிமெண்ட் தொழிற்சாலை, கோத்தாரி சர்க்கரை ஆலை, உறையூர் புடவைகள், பித்தளைச் சாமான்கள் முதலியன பற்றி நமக்கு விளக்கிக் காட்டுகின்றன.

நாய்த்தோலால் ஆன பொருள்களா இவை?



சென்னை மாநகராட்சி காட்சியரங்கில் இந்தப் பகுதி மக்களை விந்தைக்குள்ளாக்குகின்றன.

தெருவில் அலைந்து திரியும் நாய்களை முன்பெல்லாம் பிடித்துக் கொண்டுபோய் கொன்று விடுவார்கள். ஆனால், இப்போது அதன்மூலம் பல் வேறுவகையான பொருள்களைத் தயாரிக்கின்றனர்.

நாய்த்தோல்களாலான அழகிய காலணிகள், பெண்கள், எடுத்துச் செல்லும் விதவிதமான டம்பப் பைகள், மணி பர்சுகள், பெல்ட்டுகள் முதலியனவற்றைப் பார்க்கும் மக்கள் இவையெல்லாம் நாய்த் தோலால் ஆனவையா? என்று வியக்கின்றனர்.

'நாயென்று இகழாதீர்...!' என்ற வாசகம் நன்றியுள்ள நாய் இறந்த பின்னும் நமக்குப் பயன்படுவதை நினைப்பூட்டுகின்றது. நாயின் கொழுப்பிலிருந்து சோப்பும், குடலிலிருந்து இயந்திரங்களுக்கு உதவும் ஒருவகை எண்ணெய்யும், பக்குவப்படுத்தப்பட்ட அதன் இறைச்சி கோழித் தீனியாகவும், எலும்புகள் உரமாகவும் பயன்படுகின்றனவாம். இந்தப் பொருள்களெல்லாம் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

பொங்கல் அங்காடிகளை ஒரு பகுதியிலே பார்க்கிறோம். மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று தமக்குத் தேவையான பொருள்களை வாங்குகின்றனர். வீட்டுக்கு வேண்டிய தட்டுமுட்டுச் சாமான்கள், குழந்தைகளைக் கவரும் அழகிய பொம்மைகள், சிந்தை கவரும் சித்த மருத்துவ நூல்கள் இப்படிப் பல்வேறு கடைகள் இங்கே பாங்காய்க் காட்சியளிக்கின்றன.

உணவுக் கழகம் (Food Corporation) பல முக்கியத் தகவல்களை நமக்குத் தெரிவிக்கின்றது. நெல் அறைவையின் போது உண்டாகும் துணைப் பொருள்களை இலாபகரமான முறையில் பயன்படுத்துவதை இங்கே விளக்கிக் காட்டப்படுகின்றது. தானியக் கொள்முதல், நடமாட்டம், சேமிப்பு இவை பற்றியும், நவீன அரிசி ஆலை பற்றியும் நாம் நன்கு தெரிந்துகொள்கிறோம்.

தமிழ்நாடு வனத்துறைக்கு வருகிறோம். ஒரு பெரிய காட்டு எருமையின் தலை, நுழைவாயிலில் நம்மை வரவேற்கின்றது! உள்ளே யானை பிடிக்கும் முறையை ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் பார்க்கிறோம். காட்டு விலங்குகள், பறவைகள் முதலான படங்களும் காட்சியில் இடம் பெற்றுள்ளன.

மரத்திலிருந்து காகிதம் செய்யும் முறையை சேஷசாயி காகித ஆலை விளக்கியிருக்கிறது.

மீன்துறை !

தமிழ்நாட்டின் மீன் வளத்தினையும், மீன் துறையின் சாதனைகளையும், மீனவர் நலத்தினையும் இவ்வரங்கு படம் பிடித்துக் காட்டுகிறது.

தமிழ்நாட்டில் மீனவர்களுக்கு வழங்கப்பட்ட இயந்திரப் படகுகள் 1714. கட்டப்பட்ட வீடுகள் 437. வழங்கப்பட்ட கடன் ரூ. 68.93 இலட்சம் என்ற புள்ளி விவரத்தையும், துள்ளியோடும் பல்வேறு வகையான உயிருள்ள மீன்களையும் பார்த்து மகிழ்கிறோம். மாதிரி மீன்பிடி படகுகளையும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்பதனை உணர்த்துகிறது, கூட்டுறவுத் துறையின் காட்சி அரங்கு. கூட்டுறவில் வீட்டு வசதி, வேளாண்மை, கைத்தறித் தொழில், பால் வழங்குந் திட்டம் போன்றவை கூட்டுறவே நாட்டுயர்வு என்பதனைச் சொல்லாமல் சொல்லுகின்றன!

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கண் கவர் பொருள்கள் இக்காட்சியரங்கில் விற்பனைக்குக் கிடைச்



கின்றன. கைராட்டையாலும், இயந்திரத்தாலும் நூல் நூற்றலையும், மண்பாண்டம் செய்தலையும் நாம் நேரில் பார்க்கிறோம்.

தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தின் வெளியீடுகளையும், கல்வித்துறையின் சாதனைகளையும் விளக்குகிறது. 'கல்வித் துறையின்' காட்சியரங்கு. தமிழ்நாட்டில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்களின் எண்ணிக்கை அரசு கல்விக்காகச் செலவிடும் தொகை போன்ற பல பயனுள்ள செய்திகளையும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

ஊனமுற்றோர் மறுவாழ்வு, கண்ணொளி வழங்குந்திட்டம் போன்ற சமுதாயப் பணிகளை விளக்குவது சமூக நலத்துறைக் காட்சியரங்கு. இத்துறையின் சாதனைகளையும் நாம் விளக்கப் படங்களின் மூலம் தெரிந்து கொள்கிறோம்.

தமிழ்நாட்டின் உயர் ரக நெல் மணிகள், உயர்ரக நீண்ட இழைப் பருத்தி வகைகள், உயர்ரகப் பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், சிறு தானிய வகைகள் முதலியன வற்றைப் படம் போட்டு விளக்குகிறது, வேளாண்மைத் துறை. சத்துள்ள காய்கறிகள் என்னென்ன? இவற்றையும் காட்சிக்கு வைத்திருக்கின்றனர். மரவள்ளிக் கிழங்கு, கனி வகைகள் பற்றியும் நாம் நேரில் தெரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

உங்கள் உடல் நிலையைப் பரிசோதித்துக் கொள்ள வேண்டுமா? மருத்துவக் கல்வி மக்கள் நல்வாழ்வு குடும்பநலத்துறைக் காட்சியரங்கில் இந்த வசதியும் வாய்ப்பும் கிடைக்கிறது.

தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் கோழி வளர்க்கும் முறைகளைத் தெள்ளத் தெளிவாகக் கூறுகின்றது. அவித்த சுவையான கோழி முட்டையும் கிடைக்கிறது, விற்பனைக்கு!

தமிழ்நாடு கால்நடை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சித் துறையின் காட்சி அரங்கும், கால் நடை வளர்ப்புத் துறையின் காட்சி அரங்கும், கால்நடைகளைப் பேணிக் காப்பது எத்துணை அவசியம் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. அனைத்திந்தியக் கண்காட்சியில் விருது பெற்ற மாடுகளையும், மாண்டியா ஆடுகளையும் நாம் நேரில் பார்க்கிறோம்.



சுற்றுலாத்துறையின் வளர்ச்சிப் பணிகளும், தொழிற்கல்வி துறையின் கைவண்ணமும், பொதுப்பணித் துறையின் பரம்பிக்குளம் ஆழியாறுத் திட்டமும் பார்த்து மகிழ்கிறோம்.

தொழில் வணிகத்துறை!

டிட்கோ, சிட்கோ, டான்சி, டாசெல், பூம்புகார் ஆகியவற்றில் தயாரான பல வகையான பொருட்கள் காட்சியில் இடம் பெற்றுள்ளன. தோல், மர, இரும்பாலான பொருள்கள் கண்களைக் கவர்கின்றன.

நெடுஞ்சாலை ஊரகப் பணித் துறையினர் நம் நெஞ்சைத் தொடும் பல திட்டங்களைத் தீட்டி வருகின்றனர்.

1991-ல் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் மாதிரி ஒன்று காட்சியில் இடம் பெற்றுள்ளது.

இந்தியத் துணைக் கண்டத்தில் மக்கள் தொகை அதிகமுள்ள பெரு நகரங்களில் நான்காவது இடத்தை வகிப்பது நமது சென்னை மாநகரம். 1180 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இந்த மாநகரத்தின் 1971-ஆம் ஆண்டின் மக்கள் தொகை 31 இலட்சங்களாக இருந்தது. இந்த மக்கள் தொகை 1981-ல் 41.5 இலட்சங்களாகவும், 1991-ல் 53 இலட்சங்களாகவும் அதிகரிக்கும் என்று உத்தேசமாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்நகரில் செல்லும் வாக



னங்களின் எண்ணிக்கை 45,000 விருந்து 1,07,000-க்கு 1991-ல் விரிவடையும் எனக் கணக்கிட்டுள்ளனர். நகர் முன்னேற்றத் திட்டங்களில் நன்கு ஒருமுகப் படுத்தப்பட்ட சாலைப் போக்குவரத்து வசதியும், புகைவண்டிப் போக்குவரத்து வசதியும், மக்களின் அன்றாடப் போக்குவரத்தால் முக்கிய இடம் பெறுகின்றன. இவையெல்லாம் செயல் வடிவம் பெறுவதே சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டமாகும்.

நெல்லை இரண்டடுக்கு மேம்பாலம், மெரினாவின் குறுக்கே சுரங்க நடைபாதை, பூங்கா இரயில் நிலையத்தருகில் பூவிருந்தவல்லி சுரங்கப்பாதை, கோவை மும்மட்ட மேம்பாலம், ஒற்றைவாடைச் சாலையில் மத்திய புகைவண்டி நிலைய நடை மேம்பாலம்—ஆகியவற்றை விளக்கிடும் மாதிரிகள் காட்சியில் அனைவரின் கருத்தையும் ஒருங்கே கவர்கின்றன.

பாலக் கட்டுமானங்களின் அதிர்வு ஆராய்ச்சியும், கற்கலவையின் வலுவை நுண்ணலை முறையில் சோதிக்கும் கருவியும் காட்சியில் இடம் பெற்றுள்ளன.

கூவம் முதலை, அழகிய சிலைகள், புகைப்படங்கள் முதலியனவற்றை அருங்காட்சியகம் (Museum) அரங்கில் பார்க்கிறோம்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் அழகிய வீடு ஒன்றும் (Pre Fab House) மக்களை வெகுவாகக் கவர்கின்றது.

மைய அரசின் விரிவாக்க இயக்ககம் வேளாண்மை, நீர்ப்பாசனம் பற்றியும், இரயில்வேயின் சிறப்பான பணிகளை விளக்கிடும் தென்னிந்திய இரயில்வேயின் அரங்கும் பல பயனுள்ள செய்திகளைத் தெரிவிக்கின்றன.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பல்வேறு பணிகள் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. சுருளியாறு நீர் மின்திட்டம், நெல்லித்துறை நீர் மின்திட்டம், சேர்வலாறு நீர்மின் திட்டம், கிராம மின் வசதித் திட்டம் ஆகியவற்றின் மாதிரிகளும், புள்ளி விவரங்களும் பளிச்சிடுகின்றன.

நூறு ரூபாய் கள்ள நோட்டுக்களைப் பார்க்க வேண்டுமா? இருபது ரூபாய் கள்ள நோட்டுகளையும், அதைத் தயாரிக்கப் பயன்படுத்திய பிளாக்குகளையும் பார்க்க வேண்டுமா?

தமிழ்நாடு காவல்துறையின் காட்சியரங்கில் இவையெல்லாம் 'உங்கள் பார்வைக்கு' வைக்கப்பட்டிருக்கின்றன. ஆம். 'உங்கள் பார்வைக்கு' எனும் இந்த அரங்கில்—

அந்தக் காலத்தில் கொள்ளையர்கள் பயன்படுத்திய துப்பாக்கிகள், கைப்பற்றப்பட்ட சிலைகள், திருடர்களின் புகைப் படங்கள், கைரேகைகளைப் பதிவு செய்யும் விந்தைக் கருவி, தொலைக்காட்சி, இசைத் தட்டின் பாடலுக்கேற்ப அணைந்து எரியும் வண்ண மின் விளக்குகள், பெல்டாக்கி மூலம் சமிக்ஞை ஒலி எழுப்புதல் ஆகியவை இடம் பெற்றுள்ளன. இவையன்றி சென்னை ஆவடி, கோவை, மதுரை ஆகிய இடங்களிலுள்ள காவலர் நலப் பிரிவுகள் தயாரித்த துணிவகைகள், விளையாட்டுப் பொம்மைகள் முதலியவை குறைந்த விலையில் விற்கப்படுகின்றன.

காவல்துறையினர் அமைத்த மாதிரி காவல் நிலையம் (Model Police Station) ஒன்றும் இங்கே உள்ளது.

'தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள்' எனும் மிகப் பெரிய காட்சி அரங்கு பல்லவன், சேரன், சோழன், பெரியார், அண்ணா, கட்டபொம்மன் ஆகிய போக்குவரத்துக் கழகங்களின் பணிகளை விளக்குவனவாக அமைந்துள்ளன.

தமிழ்நாட்டில் குடிநீர் வசதி பற்றிய ஆக்கப்பணிகளை எடுத்துக் காட்டும் அழகிய அரங்கினைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அமைத்திருக்கிறது.

அரிசனங்களுக்காகக் கட்டப்பட்டுவரும் அழகிய மாதிரி வீடு ஒன்று காட்சியளிக்கிறது. ஆடவரும், மகளிரும், அந்த வீட்டுக்குள் போவதும் வருவதுமாக இருக்கின்றனர். தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் இதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

தொல்பொருள் ஆய்வுத் துறையின் புராதனச் சின்னங்கள், கல்வெட்டுகள் முதலியனவும், இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறையின் கோயில் சிலைகள், வாகனங்கள், புகைப்படங்கள் ஆகியவையும் நம் மனத்தைத் தொடுகின்றன.

இவை மட்டுமா? கோ-ஆப்டெக்ஸ், தமிழ்நாடு ஜவுளிக் கழகம் ஆகியவை அமைத்துள்ள அரங்குகளில் வண்ணத் துணி வகைகளுக்கும் குறைவில்லை.

அழகிய செயற்கை ஏரி, அதிலே ஒய்யாரமாகச் செல்லும் படகு, குட்டி ரயில், ராட்சத ராட்டினம், சுழன்று சுழன்று செல்லும் நெடிய கோபுரம், இலவசத் திரைப் படம், கலை நிகழ்ச்சிகள் போன்றவை குழந்தைகளை மட்டுமல்ல பெரியவர்களையும் கவர்கின்றன.

அறிவுக்கு விருந்தூட்டும் அண்ணா நகர் பொருட்காட்சி, பயனுள்ள பொழுதுபோக்குக்குப் பெரிதும் துணை செய்து வருகின்றதென்றால் அது மிகையல்ல!

— பி. வி. ஜி.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் நோக்கங்கள்!

(அ) தமிழ் நாட்டிலுள்ள அனல் மின் நிலையங்களுக்கும் மற்றத் தொழிற்சாலைகளுக்கும் தேவைப்படுபவையான கரியைக் கிழக்குக்கடற்கரையிலுள்ள துறைமுகங்களிலிருந்து சென்னை, தூத்துக்குடி மற்றும் தமிழ்நாட்டில் அமைந்துள்ள மற்றத் துறைமுகங்களுக்கு ஏற்றிச் செல்லுதல்.

(ஆ) திரும்புகாலில் கொண்டுபோவதற்குரிய சரக்குகளைக் கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்களிலிருந்து கல்கத்தாவுக்கு ஏற்றிக்கொண்டு போகும் பணியை அபிவிருத்தி செய்தல். தமிழ்நாட்டின் துறைமுகங்களிலிருந்து கல்கத்தாவுக்கு உப்பும், சிமெண்ட்டும் ஏற்றிச் செல்வதற்குத் தனிப்பட்ட கவனம் செலுத்தல்.

(இ) தமிழ்நாட்டுத் துறைமுகங்களிலிருந்து ஏற்றிச் செல்ல வேண்டியிருக்கும் தாதுப் பொருட்களை, எந்த அளவுக்கு இயலுமோ, அந்த அளவுக்கு, ஜப்பானுக்கும், ஐரோப்பாவுக்கும், மற்ற பல இடங்களுக்கும் ஏற்றிச் செல்லுதல்; அதோடு, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தானே விலைக்கு வாங்கக்கூடிய அல்லது ஏற்றிச் செல்வதாக ஒப்பந்தம் செய்து கொண்ட பொருள்களை கப்பல் அடித்தளங்களின் மூலம் கொண்டு சேர்க்கும் பொறுப்பை மேற்கொள்ளல்.

(ஈ) பாரசீக வளைகுடாத் துறைமுகங்களிலிருந்து குறிப்பாகத் தமிழ்நாட்டிலுள்ள துறைமுகங்களுக்கு டாங்குகளின் மூலம் எண்ணெய் கொண்டு சேர்க்கும் பணியில் ஈடுபடுதல்;

(உ) இந்தியாவுக்கும், அண்டை நாடுகளான இலங்கை, மலேசியா, இந்தோனேசியா, ஜப்பான் முதலிய நாடுகளுக்கும் இடையில் வாணிகத்தில் பங்கு கொள்ளலும், அத்தகைய வாணிகம் செழித்திடப் பணியாற்றலும்;

(ஊ) இந்தியாவுக்கும், சோவியத் யூனியனுக்கும் இடையில் வாணிகம் வளர்ச்சி பெறுவதற்கு இயன்றவரையில் பணியாற்றுதல்

(எ) சிக்கனச் செலவில் திறமையாகப் பயன்படுத்திக் கொண்டிடும் வகையிலான அளவு டன் எடையளவு கொண்ட கப்பல்களை விலைக்கு வாங்குவதன் மூலம், ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள அதிகரித்த அளவு இந்தியக் கப்பல் டன் எடை அளவு இலக்குகளை எய்துவதற்கு இந்திய அரசுக்கு உதவுவது.

தமிழர் தம் கடல் வாணிபத்துறையில் மீண்டுமொரு வரலாற்றினை உருவாக்கும் வகையில் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தை தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது.

1974 ஆம் ஆண்டு டிசம்பர் 20-ஆம் நாளன்று எம்.வி. தமிழ்ப் பெரியார் ஈ.வெ.ரா. எனும் கப்பலை பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் ஏற்றுக் கொண்டது.

ஜப்பான் நாட்டிலிருந்து எம்.வி. தமிழ் அண்ணா என்ற கப்பல் வாங்கப்பட்டுள்ளது.

எம்.வி. தமிழ்ப் பெரியார் ஈ.வெ.ரா. கப்பல் பற்றிய சில விவரங்கள் வருமாறு :—

''எம்.வி. தமிழ்ப் பெரியார் ஈ.வெ.ரா. என்ற பெயர் பூண்டிருக்கும் இந்தக் கப்பல் யுனைடெட் கிங்டத்தைச் சேர்ந்த சுண்டர்லாண்டில், மெஸர்ஸ். பிக்கர்ஸ்கில் அண்ட் சன் லிமிடெட் நிறுவனத்தால் 1957-ஆம் ஆண்டில் ''எம்.வி. எரிங்டன் கோர்ட்'' என்ற பெயரில் கட்டப்பட்டதாகும். இதன் பிரதான இஞ்சின் ஸ்காட்லாண்டைச் சேர்ந்த மெஸர்ஸ். கின்கெய்ட் அண்ட் கம்பெனியாரால் தயாரிக்கப்பட்டதாகும்; பர்மீஸ்டர் அண்ட்வெய்ன்ஸ் இஞ்சின் ரகத்தைச் சேர்ந்த இப்பிரதான இஞ்சின், இது 3,300 பிரேக் ஹார்ஸ் பவர் (குதிரைத்திறன், உண்டாக்கக் கூடிய சக்தி படைத்த இந்தக் கப்பலின் பிரதான இஞ்சின்கள் திருப்தியளிக்கும் வகையில் வேலை செய்திடச் செய்யும் பொருட்டுத் துணை இஞ்சின்களுக்கும் மற்ற துணை இயந்திரங்களுக்கும் போதிய அளவு நீராவி கிடைத்திடச் செய்வதற்காக, இதில் இரண்டு பாய்லர்கள் (கொதிகலன்கள்) பொருத்தப்பட்டுள்ளன. கப்பலில் பணிபுரிபவர்களுக்கும் இந்த பாய்லர்கள் போதிய அளவு பயனளிக்கின்றன. அதிகாரிகளும் தொழிலாளர்களுமாக ஐம்பத்து நான்கு நபர்கள் இருப்பதற்கு ஏற்ற வகையில் சிறப்புற உருவாக்கப்பட்டுள்ள கேபின்கள் இந்தக் கப்பலில் அமைந்துள்ளன. அதிகாரிகளும் சிற்றதிகாரிகளும் ஒற்றைக் கேபின்களில் இருக்கிறார்கள், மற்ற ஊழியர்கள் இரண்டடுக்கு கேபின்களில் இருக்கிறார்கள். நாளொன்றுக்கு சுமார் 13 டன் இடை நிலை எரி எண்ணெய்யும், [illegible] ஒரு துணைப் பொறிகளுக்கு [illegible] நாளுக்கு ஒரு டன் டீஸல் எண்ணெயும் பயன்படுத்திக் கொண்டு இந்தக் கப்பல் மணி ஒன்றுக்குச் சுமார் 13 மைல்கள் தூரம் ஓடிடும் திறனுள்ளதாகும். இதன் மொத்த நீளம் 458' 3'' ; இதன் உச்ச நிலை அகலம் 59' 9'' ; இக்கப்பலின் அதிகபட்ச சம்மர் டிராஃப்ட் 27' 9'' திசைகாட்டி, எதிரொலிக்கருவி, ராடார், ஸைரோ கம்பாஸ், ஆட்டோபைலட் முதலியவை போன்ற நவீன கடற்பயண சாதனங்கள் இக்கப்பலில் பொருத்தப்பட்டுள்ளன. ரேடியோ தந்தி சாதனமும் இக்கப்பலில் இடம் பெற்றிருக்கிறது. நல்ல முறையில் அமைந்த உட்புறத்தொலைபேசி அமைப்பும் இதில் உள்ளது. கப்பல் கட்டுமான லாய்ட்ஸ் பதிவாளர்களின் மிக உயர்ந்த தர நிர்ணயங்களின் படி கப்பல் கட்டும்போது அவர்களாலேயே மேற்பார்வையிடப்பட்டு-இந்தக் கப்பல் கட்டப்பட்டது.

இந்தக் கப்பலில் நான்கு சரக்குகள் சேமிப்புப் பள்ளங்களும், ஐந்து கப்பல் தளப் புழைவாயில்களும் உள்ளன. இதில் தானியங்களைக் கொட்டுவதற்கான 61,730 கன அடி கொள்திறன் அல்லது சரக்கு மூட்டைகளையோ கட்டுகளையோ வைப்பதற்கான 5,70,000 கன அடி கொள் திறன் உள்ளது. இந்த கப்பல்தளப் புழைவாயில்களுக்குப் பயன்படுவதற்காக இந்தக் கப்பலில் பத்து பாரந் தூக்கிப் பொறிகள் (டெர்ரிக்) உள்ளன. இக்கப்பலின் எடையளவு 11,253 டன். இரண்டு உயிர்காப்புப் படகுகள் இதில் இருக்கின்றன. இவற்றில் ஒன்று, சுயமான உந்து விசையைப் பெறுவதற்காக ஒரு டீசல் இஞ்சின் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. கப்பல் சிப்பந்திகளுக்கு வேண்டிய இறைச்சி, மீன் மற்றும் காய்கறிகள் போன்ற அவசியப் பொருள்களைச் சேமித்து வைப்பதற்காகப் போதிய அளவு குளிர்பதனத் திறன் அமைப்பும் இதில் உண்டு. கடலோரப் பயணங்களுக்கும் அண்மை அந்நிய நாட்டுப் பயணங்களுக்கும் ஏற்ற அருமையான கப்பல் இது.

தனது தொழிலுக்கு அவசியமானதும் தகுந்ததுமான டன் எடையளவுள்ள கப்பல்களை விலைக்கு வாங்கிக் கொண்டிட வேண்டும் என்ற செயல் முறைக்கு ஒத்ததான கொள்கையைக் கொண்டிருக்கிறது இந்தக் கழகம்.

15 ஆண்டு வயதான 'தமிழ்ப் பெரியார் ஈ.வெ. ரா.' மற்றும் 'தமிழ் அண்ணா' என்ற பெயர் கொண்ட இரண்டு கப்பல்களை விலைக்கு வாங்கிட இந்தக்

—அட்டைப்படக் கட்டுரை

கழகம் முடிவெடுத்தற்குக் காரணம் இதுவேதான். எட்டு ஆண்டு வயதுக்கு அதிகமான கப்பல்களை விலைக்கு வாங்குவதில்லை என்பதுதான், இதுவரையில் கப்பல் சொந்தக்காரர்கள் இந்தியாவில் கடைப் பிடித்து வந்துள்ள பழக்கம்.

கல்கத்தாவிலிருந்து சென்னைக்குக் கரி ஏற்றி வருவது என்ற தனது பிரதானமான வர்த்தகத்துக்கும்பழைய கப்பல்களே மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று இந்தக் கழகம் கருதியது. கரி சுமந்து வருவதற்கு நவீனமான—படாடோபமான— கப்பலொன்றை உபயோகிப்பதென்பது, ரேஸ் பந்தயக் குதிரையை டோங்கா வண்டி இழுப்பதற்குப் பயன்படுத்துவது போன்றதாகும்.

சிக்கனச் செலவில் உருப்படியான முறையில் கரியை ஏற்றி வருவதற்கு ஏற்ற பொருளாதாரத் தன்மையையும், சரக்கேற்றுக் கட்டணம் குறைந்த வகையில் கரியை ஏற்றி வருவதற்குத் தகுந்த அளவுதொகை மூலதன முதலீடே செய்யப்பட வேண்டும் என்ற உண்மையையும் கருத்தில் கொண்டே பழைய கப்பல்களை விலைக்கு வாங்கிடுவதற்கு இந்தக் கழகத்துக்குச் சிறப்பு விதித் தளர்ச்சி வழங்க ஒப்புக் கொண்டிருக்கிறது, இந்திய அரசாங்கம்.

அடுத்த கட்டமாக, இந்தக் கழகம் விரைவிலேயே அனைத்து நாட்டு வர்த்தகத்தில் ஈடுபடவிருக்கிறது. இந்தியாவிலிருந்து மேற்கு ஐரோப்பாவுக்கு உலோகக் கனிப்பொருட்களை ஏற்றிச் சென்றிறக்கி, திரும்புகையில் உரங்களும் மற்ற வகைச் சரக்குகளும் ஏற்றி வரும் வகையில் பயன்படக் கூடிய 20,000 டன் முதல் 25,000 டன் வரையிலான பெருந்திரள் சரக்குகளைச் சுமந்து செல்ல வல்ல நான்கு நவீன சரக்கேற்றிக் கப்பல்களை விலைக்கு வாங்கிடும் திட்டமும் இக்கழகத்திடம் உள்ளது. பாரசீக வளைகுடாப்பகுதியுடன் வளர்ந்து வரும் இந்தியாவின் வர்த்தகத்தில் பங்கேற்று, இந்தியாவிலிருந்து பாரசீக வளைகுடாவுக்கு முதல் முறையாக பைரைட்டுகளைப் பெருமளவில் ஏற்றிச் செல்வதற்கான திட்டமும் கூட இதனிடம் உள்ளது.

தமிழ்நாடு அரசு கீழ்க்குறித்த பொறுப்புகளையும் இக்கழகத்திற்குப் பணித்திருக்கிறது.

"இந்தக் கழகம் சொந்தத்தில் வாங்கியோ அல்லது வாடகை ஒப்பந்தத்தில் எடுத்தோ, பெருந்திரள் பண்டங்கள் உட்படவான சரக்குகளை இந்தியக் கடற்கரைகள் நெடுகச் சுமந்து செல்வதற்குப் பாய்மரக் கப்பல்களைப் பயன்படுத்திட வேண்டும். சக்தி விசை நெருக்கடி நிலவிடும் தற்போதைய சூழ்நிலையில், சரக்குகளைச் சுமந்து செல்வதற்கு உயர்ந்த பட்சம் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு இக்கழகம் பாய்மரக் கப்பல்களைப் பயன்படுத்திட வேண்டும் என்பதற்கு அரசு பெரு முக்கியத்துவம் அளிக்கிறது."

இது நெடுநோக்குள்ளதொரு கொள்கையாகும். இதனை அமல் செய்வதற்கு மத்திய அரசின் ஆதரவும், தீவிர ஈடுபாடும் அவசியமாகும்.

உலகின் எடை அளவுமிக்க கப்பல்களைப் பெருமளவில் வைத்திருந்த வரையில், கிரேட் பிரிட்டன் 19-ஆம் நூற்றுண்டின் பெரும்பாலான கால அளவுக்கு முன்னணியில் இருந்தது. இந்தியாவில் பிரிட்டிஷ்காரர்களின் ஆட்சி நிலவியபோது, இந்தியக் கப்பல் போக்குவரத்து முயற்சி எதுவும் மேற்கொள்ள முடியாமல் திட்டவட்டமாகக் கெடுத்தார்கள். மற்ற எல்லாவற்றிலும் போலவே, கப்பல் போக்குவரத்துத்துறை விஷயத்திலுங்கூட, இந்தியாவின் நலன்கள் இரண்டாவது இடத்துக்கு ஒதுக்கப்பட்டன; பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் நலன்களுக்கே முதன்மை இடம் அளிக்கப்பட்டது. இந்த விஷயத்திலுங்கூட, இந்த நூற்றுண்டின் துவக்கத்தில், கப்பல் போக்குவரத்துத் துறையில் பிரிட்டிஷ்காரர்கள் கொண்டிருந்த ஏகபோகத்தை எதிர்த்து முதலாவது புரட்சிக் கொடி தூக்கிய பெருமை தமிழ்த் தேச பக்தர்-'கப்பலோட்டிய தமிழர்' வ.உ. சிதம்பரனாரையே சாரும்.

நாடு விடுதலை பெற்ற பிறகு உடனே, கப்பல் போக்குவரத்து இந்திய அரசின் கரங்களில் உயர் முன்னுரிமைக் கவனத்தைப் பெற்றது. அதன் விளைவாக, இந்தியக் கப்பல்களின் டன் எடையளவு, சுதந்திரம் பெற்றபோது இருந்ததைக் காட்டிலும் 27 மடங்கு உயர்ந்திருக்கிறது. இந்தியக்கொடியின் கீழ் 1974 ஜூலை 1-ம்தேதியன்று உள்ளபடி கணக்கான மொத்த டன் எடையளவு ஜி. ஆர். டி. 3.5 மில்லியன் ஆகும். இது எந்த அளவுகோலைக் கொண்டு பார்த்தாலும் - இந்தியா எதிர்ப்பட வேண்டியிருந்த பிரச்சினைகளையும், நாடு சமாளித்தாக வேண்டியிருந்த மாபெரும் அந்நியச் செலாவணித் தட்டுப்பாட்டையும் கருத்தில் கொண்டு நோக்கினுல்-உள்ளத்தில் பதியக் கூடியதொரு செயல் திறனேயாகும். இருந்த போதிலும், உலகக் கப்பல்களின் டன் எடையளவையும் நம்நாட்டுக் கப்பல்களின் டன் எடையளவையும் ஒப்பிட்டுப் பார்த்தோமாஞல் நாம் செய்ய வேண்டிய காரியங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன என்பதையும் கண்டிடுவோம். வியாபாரக் கப்பல்களின் உலக டன் எடையளவு 1974 ஜூலை 1-ம் தேதி யன்று உள்ளபடி 311 மில்லியன் ஆகும். இந்திய டன் எடையளவு, உலக டன் எடையளவைக் காட்டிலும் ஒரு சதவிகிதத்துக்குச் சற்று அதிகமாகும். பண்டைக் காலத்தில் இந்தியாவுடன் மற்றொரு கடலோடி நாடாகத் திகழ்ந்த கிரீஸ், இந்தியாவின் டன்



எடையளவைக் காட்டிலும் சுமார் ஏழு மடங்கு கொண்டதாக இருக்கிறது; நார்வே, இந்தியாவின் டன் எடையை காட்டிலும் எட்டு மடங்கு கொண்டதாக இருக்கிறது. கிரேட் பிரிட்டன், இந்தியாவின் டன் எடையளவைக் காட்டிலும் சுமார் 10 மடங்கு கொண்டதாக இருக்கிறது.

311 மில்லியன் எடையளவு கொண்டதான உலகக் கப்பல் தொகுதியில் 63 சதவீதத்திற்கு மேற்பட்டவை 10 ஆண்டு வயதுக்குக் குறைவானவை. கடந்த பத்தாண்டுகளில் உலகின் கப்பல் டன் எடையளவு தோராயமாகச் சுமார் 190 மில்லியன் டன் கூடியிருப்பதுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தியக் கப்பல் துறை எய்தியுள்ள முன்னேற்றம் உள்ளம் கவரக்கூடியதுதான். உலகின் முக்கியமான கடலோடி நாடுகளிடையே ஜப்பான்தான் மிக மிக நவீனமான கப்பல் தொகுதியை வைத்திருக்கிறது. இதில் 83 சதவீதத்திற்கு மேற்பட்டவை 10 ஆண்டுகளுக்குக் குறைந்தவயதுள்ளவையாகும்.

ஒப்புதல் பெற்றுள்ள ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கப்பல் உற்பத்தி இலக்கு 8.6 மில்லியன் ஜி.ஆர்.டி. ஆகும். இந்தியாவின் அளவையும் தேவையையும் கவனித்துப் பார்த்தோமானால், இந்த இலக்கு மிதமானதாகும். இந்த மிதமான இலக்கை எய்திடும் விஷயத்திலும்கூட இந்திய அரசும் இந்தியப் பெருமக்களும் பேராற்றல் வாய்ந்த முயற்சிகளை மேற்கொண்டாக வேண்டும்.

இந்தியா 5,700 கி.மீ. நீளமுள்ள கடற்கரை ஓரம் பெற்றிருக்கிறது. கடலோரக் கப்பல் போக்குவரத்து கஷ்டமான காலங்களையெல்லாம் கடந்து வந்திருக்கிறது. கடற்கரையோரக் கப்பல் டன் எடையளவு 1964-ஆம் ஆண்டில் 4.11 இலட்சம் ஜி.ஆர்.டியாக இருந்தது 1974 ஆம் ஆண்டில் 2.13 இலட்சம் ஜி.ஆர்.டிக்கு குறைந்திருக்கிறது. தற்போதுள்ள கடற்கரையோரக் கப்பல் எடையளவில் பெரும்பாலானவை பழமையானவையாகும். அவற்றை மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகும்.

பெட்ரோலியம் பொருள்களின் அதிக அளவு விலைகளும் மின் சக்தி விசை நெருக்கடியும் (இவை இன்னும் பல ஆண்டுகளுக்கு நம்முடன் இருக்கப்போகின்றன) இந்தியா, தனது கடலோரக் கப்பல் தொகுதியைப் பெருமளவில் பெருக்க வேண்டிய தன் அவசியத்துக்குப் புதியதொரு முக்கியத்துவத்தை அளித்திருக்கின்றன. ஒரு டன் எடை கொண்ட சரக்கை ஒரு மைல் தூரத்துக்கு நீர் வழியே கொண்டு செல்வதற்கு ஆகும் செலவு, அதையே தரை வழியில் கொண்டு செல்வதற்கு ஆகும் செலவில் ஒரு கூறுதான். இதைக் கருத்தில் கொண்டு இந்தியா தனது பரந்து விரிந்த கடற்கரை ஓரத்தைக் கரி, உப்பு, தானியங்கள், உரங்கள் முதலியவை போன்ற பெருந்திரள் சரக்குகளை ஏற்றிச் செல்வதற்கான கப்பல் போக்குவரத்துத்துறையாக எவ்வளவு அதிகபட்சம் முடியுமோ அவ்வளவு உயர்ந்தபட்சம் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இந்தியக் கப்பல் போக்குவரத்துத் துறையில் தற்போது நிலவிவரும் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது, தமிழ்நாடு போன்ற கடல் மாநிலங்கள் தாங்களே கப்பல்களைச் சொந்தமாக வைத்துக்கொண்டு இயக்கிக் கொள்ள ஊக்கம் அளிப்பதென்று இந்திய அரசு எடுத்துள்ள முடிவு புத்திசாலித்தனமானதும் நெடுநோக்கு வாய்ந்ததுமாகும் என்பது நிச்சயம். இரண்டு கப்பல்களைத் தனக்‌ சொந்தமாக ஆக்கிக் கொண்டிருப்பதன் மூலம், மற்ற விஷயங்களில் போன்றே இந்த விஷயத்திலும், இந்தக் கொள்கையைத் தனக்கு ஆதாயமாகப் பயன்படுத்திக்கொண்டு மற்றக் கடல்சார் மாநிலங்களுக்கு முன்னணித் தலைமை வகிக்கும் முதல் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

நான் பார்த்தவரை வறட்சி ஏற்பட்டுள்ள பகுதிகளில் மாநில அரசு நிவாரணப் பணிகளைத் துரிதமாக மேற்கொண்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களைப் போக்கவும், வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் இப்பகுதி மக்களுக்கெல்லாம் நிலையான - வளமான வாழ்க்கையை ஏற்படுத்தவும் தமிழக அரசு மேற்கொண்டு வரும் பணிகள் நம்பிக்கை தருவதாய் உள்ளன. இராமநாதபுரம் மாவட்டம் அதிகமாகப் பாதித்துள்ளது என்றாலும் தேவையான நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஏ. பி. ஷிண்டே,
மத்திய அமைச்சர்.

அடுத்த இதழ்
மகளிர் நலச் சிறப்பிதழ்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.